₹10

fmpb

Volume 55

Issue 7

July 2025

# அறைகூவல்

*"...ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" மத்தேயு 16:24.*

# தியாகம்

## தியாகத்தோடு வாழ்வதில் இன்னும் அதிகமாய்






# ஆரம்ப வரிகள்...



## இரும்பிற்கு பதிலாக என் தங்கம் 1813

ஃபிரடெரிக் வில்லியம் III என்ற மன்னர் புருஷியா தேசத்தை ஆண்டுவந்த காலத்தில், அநேக போர்களை சந்தித்ததின் விளைவாக அத்தேசத்தில் கடும் பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே மன்னர் தன் தேசத்தை பாதுகாக்க அத்தேசத்துப் பெண்களின் பொன் ஆபரணங்களை தேசத்திற்காக அர்ப்பணிக்கும்படி அழைப்பு விடுத்தார். அவ்வாறு உற்சாகமாக பொன்னைக் கொடுத்த பெண்களுக்கு ராஜா சிறிய இரும்பு அல்லது வெங்கலத்தில் **இரும்பிற்கு பதிலாக என் தங்கத்தைக் கொடுத்தேன் – 1813** என்ற வாசகம் பொறித்த சின்னத்தைக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட பெண்கள் தாங்கள் கொடுத்த பொன்னைக் காட்டிலும் ராஜாவிடமிருந்து பெற்றுக்கொண்ட பரிசை மெச்சிக்கொண்டனர். பின்நாட்களில் இந்த இரும்பிலான சின்னத்தில் சிலுவை அடையாளம் பொறிக்கப்பட்டு, வீரத்தை பாராட்டி கொடுக்கும் வழக்கம் ஜெர்மனி தேசத்தாரால் கடைப்பிடிக்கப்பட்டது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 5வது நெறிமுறை **தியாகம்**. (நமது வாழ்வில் தேவனை முதன்மைப்படுத்துவதற்கும், தேசத்தைச் சந்திக்க அனைத்தையும் இழப்பதற்கும் தயாராக இருத்தல். மத். 16:24) நமது இயக்கம் இத்தனை பெரியதாக வளர தியாகம் என்ற இந்தச் செயல் முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தியாகமானது ஒரு உயர்ந்த அர்ப்பணிப்பிற்கான அடையாளம் மற்றும் உலக பிரகாரமான காரியங்களைக் காட்டிலும் ஆவிக்குரிய காரியம் எனக்கு முக்கியமானது என்பதை பிரதிபலிக்கிறது.

நமது இயக்கத்திற்கு தியாகம் என்ற சொல் மற்றும் செயல் புதிதல்ல. நமது மூத்த ஊழியரின் மனைவியான திருமதி. பத்மா ஹில்டன் அக்கா, ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க பணமில்லை என்பதை அறிந்தபோது, அவர்கள் தனது மாங்கல்யத்தை கழற்றி காணிக்கையாக கொடுத்தது துவங்கி, ஜெபக்குழு அங்கத்தினர்கள் தங்களது நேரம், செல்வம் மற்றும் தாலந்தை கிறிஸ்துவுக்காய் கொடுக்க முன்வந்தனர். இன்று ஜார்கண்டிலுள்ள அமரபாரா பணித்தளத்திலுள்ள தோனிராம், தன் மனதில் தீர்மானித்ததின்படி தனக்கு காவல்துறையில் வேலை கிடைத்ததும் தனது முதல் மாத சம்பளத்திலிருந்து இருசக்கர வாகனத்தை வாங்கி நமது சுதேச ஊழியருக்கு காணிக்கையாக அர்ப்பணித்தார். இவ்வாறு தனது திராணிக்கு மிஞ்சி தியாகத்தோடு தேவ பணிக்கு கொடுத்தார்.

நம்மில் அநேகர் தங்கள் படிப்பு, பதவி, குடும்பம் மற்றும் தங்கள் ஜீவனையும் சுவிசேஷத்திற்காய் தியாகமாய் கொடுத்தவர்கள் உண்டு. ஆனால் ஏமி கார்மைக்கேல் அம்மா சிலுவையை சிந்திக்கும்போது **நான் அவருக்காய் செய்யும் எதுவும் எப்படி தியாகமாக முடியும்?** என்கிறார். அந்த புருஷியப் பெண்கள் எவ்வாறு ராஜாவின் பரிசை தங்கள் பொன்னைவிட மேன்மையாக கருதினார்களோ அவ்வாறே இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பு, மன்னிப்பு, நித்திய வாழ்வு மற்றும் அவரின் பிள்ளைகள் என்ற சிலாக்கியம் இவையாவும் நாம் செய்த தியாகத்திற்கு ஈடாகாது. டாக்டர் எமில் ஜெபசிங் அண்ணின் பாடல் வரிகளான **கிறிஸ்துவுக்காக இழந்தவர் எவரும் தரித்திரரானதில்லை, இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்டதில்லை** போன்றவை நமது நெறிமுறையான தியாகத்தில் வளர நமக்கு உதவுகின்றன. பரி. பவுலோடு நாமும் பிலி. 3:8ஐ அறிக்கை செய்வோம்.

*வாழ்வின் முதன்மை இயேசுவுக்கு*
*வாழ்வின் முழுமையும் இயேசுவுக்கு*
*நானும் என் எல்லாமும் இயேசுவுக்கு சுவிசேஷத்திற்கு*

**– மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"...நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்ம தேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது"** *ரூத் 2:11.*

**இன்று ஒரு தியாகமாகத் தோன்றுவது, நீங்கள் செய்யும் மிகப்பெரிய முதலீடாக மாறும் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.**
*– கோர்டன் பி. ஹின்க்லி*

**"நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்"** *எபிரெயர் 10:34.*

**இரத்தம், உழைப்பு, கண்ணீர் மற்றும் வியர்வையைத் தவிர வேறு எதையும் என்னால் வழங்க முடியாது.** *– வின்ஸ்டன் சர்ச்சில்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
|---|---|
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



பிரியமுள்ள ஜெபப் பங்காளர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

## மலையிலிருந்து மாதிரள் கூட்டத்திற்கு, மகத்தான பெருக்கத்திற்கு ஓர் அழைப்பு!

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் (சங்.126:5). தேவன் தன்னுடைய திட்டத்தை தம் ஜனங்கள் ஆசையாய் நின்று, நிதானித்து, சிந்தித்து, செயல்பட அழைக்கும் மாதம் இந்த ஜுலை மாதம். ஆண்டின் நடுமையத்தில் இருக்கும் நம்மை ஆராய்ந்து மறுசீரமைப்பு செய்வதற்கான ஒரு மாதம். தேவனின் இதய ஏக்கத்தை நிறைவேற்றவும், மறுபடியும் தேவப்பிள்ளைகள் தங்களை அர்ப்பணிக்கும் மாதம்.

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை கடவுளின் ஏக்கம் எப்பொழுதுமே ஒரு மிஷனெரி ஏக்கமாகவே இருந்துள்ளதை நாம் காணமுடியும். ஏதேன் தோட்டம் துவக்கமாக இருந்தாலும், தேசங்கள் எப்பொழுதுமே தேவனின் மையப் புள்ளியாகவே இருந்துள்ளது. கர்த்தர் ஆபிரகாமை அழைத்தபோது, உன் மூலமாக பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று கூறினார் (ஆதி.12:3).

இயேசுவின் மகிமையான உயிர்த்தெழுதலுக்குப்பின், அவர் தன் சீடர்களுக்குச் சொன்ன தெளிவான கட்டளை 'போய் சகல ஜனங்களையும் என் சீஷர்களாக்குங்கள்' என்பதே (மத்.28:19). எழுப்புதலின் துவக்கமே தேவ பாதத்தில் எப்பொழுதும் சரணாகதி அடைவது. தேவ ஊழியம் ஒரு சிலருக்கு மட்டும்தான் என்று ஒதுக்கப்படவில்லை. மாறாக ஆண்டவரின் அன்பை ருசித்த அனைவருக்குமான ஓர் பொறுப்பு. தேவன் தம்முடையப் பணிக்கு தகுதியுள்ளவர்களைப் பார்த்து அழைப்பதில்லை. அழைக்கப்பட்டவர்களை அவர் தகுதிப்படுத்துகிறார். விசுவாசத்தின் முக்கிய அம்சமே தேவனை நம்புவது. அது தேவனின் இறுதிக் கட்டளையை நிறைவேற்ற ஒவ்வொரு விசுவாசிக்கும் விடுக்கப்பட்ட அழைப்பு. அது புறப்பட்டு ஊழியராக செல்வதிலும், ஜெபிப்பதிலும், கொடுப்பதிலும் ஒரு பெரிய பங்கு வகிக்கிறது. மேலும் ஜுலை மாதம் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் நம்மை விட்டு கடந்துவிடாதபடி, நம் ஆண்டவரின் உன்னத மீட்பின் திட்டத்தை உணர்ந்தவர்களாய் நம் அர்ப்பணிப்பை அனல்மூட்டி எழுப்பிவிடுவோம்.

நம் பிரசங்க பீடங்கள், தனி ஜெப அறைகள், வாழும் இல்லம் மற்றும் தலைமைத்துவ பொறுப்புகள் என அனைத்து எல்லைகளிலும் அறு

வடைக்குக் காத்திருக்கின்ற களங்களை மீண்டும் ஒருமுறை ஏறிட்டுப்பார்க்க ஆண்டவர் அழைக்கிறார். இந்த ஏக சத்தம் என் வசதி, என் சுயம் இவற்றை தகர்க்கட்டும். என் ஆதிகால தரிசனத்தை கூர்மையாக்கட்டும்.

கடந்த மாதம் நான் கலந்துகொண்ட பெரியமலை தின நினைவு கூடுகை – நம் முன்னோடி ஊழியர்களின் அர்ப்பணத்தையும், செக்கந்தரபாத் மூன்று நாள் தரிசன கூடுகை – சவால்கள் இத்தூயப் பணியை இன்னும் வேகமாய் நம் மூலமாகவும், நம்மை தாண்டியும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என உணர்த்துகிறது. நாம் நம் ஆவி, ஆத்துமா, சரீரத்தை மீண்டும் ஒருமுறை புதிதாய் அவர் சமூகத்தில் சமர்ப்பிப்போம். இந்த நிகழ்வுகள் 31 நாட்கள் உள்ள இந்த ஜூலையில் மட்டுமல்ல இன்னும் கடந்து செல்லட்டும். கிறிஸ்து அறியப்படாத இடங்களில் அவரே முழு முதற் கடவுள் என்று அவரை அறியச் செய்யும் பணி நம் வாழ்நாள் முழுவதும் நடக்கட்டும்.

## பெரியமலை தினம்

தடயங்கள் தாக்கங்களாக நம் பயணத்தை நகர்த்தட்டும். ஜூன் 9, எங்கு விசுவாசம் தீப் பொறியானதோ அதே பரிசுத்த பூமியில் நின்று, நம் முன்னோடி ஊழியர்கள் பானபலியாய் தங்கள் வாழ்க்கையை ஊற்றினதை நினைத்து தேவனைத் துதித்தேன். அவர்களின் விலைக்கிரயங்கள் வீண்போகவில்லை. அவர்களின் தடயங்கள் தாக்கத்தை வெளிப்படுத்தி, இன்றைய பணியின் ஆழமான அடித்தளத்திற்கு வித்திட்டது. இந்த ஆண்டின் நிகழ்வு வெறும் நினைவு கூறுதல் மட்டுமல்ல, அது மீண்டும் ஓர் அர்ப்பணிப்பின் உறுதி மொழி. வெறும் பூமியில் உழைத்து, இரவிலே கண்ணீர் சிந்தி, பெரும் போராட்டங்களை கடந்து, ஜெபித்தவர்களால் ஏற்றப்பட்ட தீபத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்ப்பணிப்பின் உறுதி மொழி. அவர்களின் விசுவாசத்தைப் பற்றி நாம் சிந்திக்கும் போதெல்லாம் நமக்கு இருக்கும் சவால் நம் சந்ததியினர் எதை நினைவுகூறுவார்கள் என்பதுதான்.

## இந்த பெரியமலை நமக்கு நினைப்பூட்டுவதெல்லாம்

*விசுவாசம் தோற்கவில்லை*

*ஜெபம் பொய்க்கவில்லை*

*சிந்தபட்ட இரத்தத் துளிகள் வீணாகவில்லை*

*கடந்த கால கண்ணீர் துளிகள் எல்லாம் வருங்கால விதைகளை நனைக்கும் நீர்த்துளிகள். எனவே தளர்ச்சி வேண்டாம், தடுமாற்றம் வேண்டாம், முன்னேறுங்கள் என்பதே.*

## புதிய சந்ததி புதிய மாற்றம்

இந்த ஆண்டு 32 புதிய மிஷனெரிகள் தேர்வு செய்யப்பட்டதில் நாங்கள் அறுவடையின் ஆண்டவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து மகிழ்ச்சியுடன் நன்றி கூறுகிறோம். ஊழியர்களின் வருகை வெறும் புள்ளி விவரங்கள் அல்ல. அவர்கள் கர்த்தரால் அழைக்கப்பட்டு, கிருபையால் பெலப்பட்டு, திருச்சபையாய் அனுப்பி வைக்கப்பட்டவர்கள். இவர்களின் வருகை நம் ஜெபங்களுக்கு கிடைக்கப்பெற்ற பதில்கள். தெய்வப்பணி அவருடைய வருகை மட்டும் தொடரும் என்பதற்கான அறிவிப்பாக இது உள்ளது. இந்த இளம் ஊழியர்களை உங்கள் ஜெபத்தில் ஆதரிக்குமாறு நாங்கள் உங்களை அன்புடன் வேண்டுகிறோம். அவர்களின் ஆவிக்குரிய ஒப்படைப்பு வெறும் கல்வி சார்ந்தது மட்டுமல்ல, அது ஒரு ஆவிக்குரிய யுத்தம், உணர்வுப் பூர்வமானது, முற்றிலும் தெரியாதவைகளை நம்பி செல்வது. ஒரு குடும்பமாக

நாம் அவர்களுக்கு பின்னாக நிற்போம். அனுப்புவதற்கு மட்டுமல்ல அவர்களோடு சேர்ந்து நடப்போம்.

செக்கந்தராபாத், ஐ.எம்.ஏ. வளாகத்தில் நடைபெற்ற மூன்று நகரங்களை உள்ளடக்கிய கூடுகையானது ஐக்கியங் களைப் புதுப்பித்து, தரிசனங்களையும், அவரின் கிருபைகளையும் உணரும் ஒரு நேரமாக இருந்தது. பல பிராந்தியங் களிலிருந்து வந்த பிரதிநிதிகளின் ஜெபமும், ஒருமனதாய் ஏறெடுத்த திட்டமிடுதல்களும் தேவ ஊழியம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும், மொழியிலும், பிராந்தியங்களிலும் நிறைவேறி வருவதை காணமுடிந்தது. ஒருமித்த சிந்தையோடும், தொலை நோக்குப் பார்வையோடும், விஷன் 2027 திட்டத்தை செயல்படுத்தவும், புதிய ஜெபக்குழுக்களை உருவாக்குவதிலும், இளம் ஊழியர்களை கண்டுபிடிப்பதிலும், வேதத்தை அடிப்படையாகக் கொண்டு ஜ்வாலிக்கும் ஆவியானவரைப் பெற்ற தலைவர்களை இனம்கண்டு உருவாக்குவதிலும், இல்லங்களை மிஷனெரி தரிசனங்களைக் கடத்தும் இல்லங்களாக 'சிறிய அந்தியோகியாவாக' மாற்றுவோம் என தீர்மானித்து சென்றது மிகவும் சவாலாக இருந்தது.

## ஜூன் 17 சகோ. பேட்ரிக் ஜோஷ்வா அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள்

இந்த ஆண்டு ஜூன் 17ஆம் தேதி நம் முன்னாள் பொதுச்செயலர் சகோ. பேட்ரிக் ஜோஷ்வா அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை நாங்கள் நினைவு கூர்ந்தோம். அவர்களின் அசைக்க முடியாத விசுவாசம், தேவ ஞானம், தளர்ச்சி அடையாத வைராக்கியத்துடன் இந்த ஊழியத்தை உத்தமத்துடன் வழிநடத்தி, பல ஆயிரம் ஊழியர்கள் சிலுவையை சுமந்து கிறிஸ்துவை அறியாத இடங்களுக்குச் செல்ல ஊக்கப்படுத்தியது. அவர்களை ஓர் ஆவிக்குரிய தகப்பனாக நாங்கள் நினைவு கூர்ந்து அவர்களுடைய வாழ்வை நினைத்து தேவனைத் துதித்தோம். கர்த்தரின் அழைப்புக்கு நிபந்தனை அற்ற ஒப்புக்கொடுத்தலோடு கீழ்ப்படிந்து தடம்பதித்த அவர்களின் சிறந்த மாதிரி இன்னும் நாம் நினைவேற்ற வேண்டியப் பணியை பொறுமையுடனும், தரிசனத்துடனும் ஓடி முடித்திட உணர்த்துகிறது.

நம் காதுகளில் எதிரொலிக்கும் அவர் களின் சத்தம் 'கல்வாரி நாயகரை கடைசி மனிதனும் அறியும் வரை தொடர்ந்து சென்றுக்கொண்டிரு' என்பது தான். நாம் அவர்களது நினைவின் நிழலில் அல்ல, மாறாக அவர்களது தேவ ஊழிய வைராக்கிய ஒளியில் வாழ உறுதி எடுப்போம்.

## ஜூலை – ஊழிய விரிவாக்கத்தின் மாதம்

இந்த மாதம் ஊழிய விரிவாக்கத்தை வேகப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவோம். எதையும் சாதிக்காத மந்தமான மாதமாக முடிந்துவிடாதபடி வரும் சவால்களை முன்னறிந்து தரிசனத்தோடு செயல்படும் மாதமாக இம்மாதம் நம்மை மாற்றட்டும்.

## தினமும் ஒரு மிஷனெரிக்காக பெயர் சொல்லி ஜெபிப்போம்

நம் வீடு, செல்லும் ஆலயம் மற்றும் வாழும் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை துவங்குவோம். ஒரு ஊழியரை குடும்ப மாக நிதி உதவி செய்து ஆதரிப்போம். முழுநேர ஊழிய அழைப்பின் அவசரத்தை கருத்தில் கொண்டு

அடுத்த தலைமுறையினர் ஊழியத்தில் இணைந்திட ஊக்கப்படுத்துவோம். இன்னும் சந்திக்கப்படாத நம் தேசத்தின் நிலையை நாம் செல்லும் ஆலயங்களில் பகிர்ந்து கொள்வோம். தேவ பணியில் பார்வையாளர்களுக்கு இடமில்லை. நாம் அனைவருமே உடன் ஊழியர்கள். ஏசாயா பதில் அளித்ததுபோல் இதோ இருக்கிறேன், என்னை அனுப்பும் என வெறும் வார்த்தைகளால் இவ்வசனத் தைச் சொல்லாமல் அதை செயல்படுத்து கிறவர்களுமாய் வாழ்வோமாக!

## பரிசுத்த நினைவில் இருந்து பரமனின் பணி வரை

மிகவும் பலமாய் நம் மத்தியில் கிரியை நடப்பிக்கும் தேவ செயல்களை கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். பெரியமலை யில் நம் முன்னோடி ஊழியர்களின் பிரயாசங்கள், கண்ணீர் வீணாக வில்லை. வறண்டுவிடவில்லை, அந்த வெட்டவெளியில் விண்ணை நோக்கி கதறிய ஜெபங்கள் இன்று ஆத்தும அறுவடைகளாய் திரும்புகின்றன. புதிதாக தேர்வு செய்யப்பட்ட 32 ஊழியர்கள் வெறுமன ஊழியத்தில் இணையவில்லை. மாறாக 2 கொரி. 3:3படி மையினால் அல்ல ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளினால் அல்ல, இருதயமாகிய சதையாகிய பலகைகளின்மேல் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவையும், தேவ செய்தி யையும் சுமந்து செல்லும் ராஜ மடல்களாக வந்துள்ளனர். எனவே ஜுலை மாதம் நமக்கு ஓர் திருப்பு முனையாய் மாறட்டும்.

- பரிசுத்த நினைவுகளை பாரமுள்ள மிஷனெரி சிந்தையாக்குவோம்.
- தேவனுக்கு செலுத்தும் நன்றி அவர் பணியில் பின்திரும்பாத முன்னேற்றம் ஆகட்டும்.
- ஜெபம் நம்மை இன்னும் உந்தித் தள்ளட்டும்.
- தேவ பணிக்காக கொடுத்தல் நற்செய்தி பணிக்கு முதலீடாய் மாறட்டும்.
- சபைகள் செயலற்ற பார்வை யாளர்களாக அல்ல, பாரமுள்ள பங்கேற்பாளர்களாக மாறட்டும்.
- நம் குடும்பங்கள் ஜெபக்குழு மையங்களாக மாறட்டும்.
- நம் இளைஞர்கள் மிஷனெரிகளாக செல்லட்டும்.
- நாம் வெறும் தரிசனத்தைக் குறித்து பேசுபவர்களாக மட்டுமல்லாமல், அதன்படி வாழ்வோம் என இணைந்து சொல்லுவோம்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்... இரட்சிப்பு உண்டா வதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது (ரோ.1:16). பெரியமலையிலிருந்து **'மீண்டும் தேவப் பணிக்குச் செல்'** என்ற குரல் எதிரொலிக்கின்றது. ஜுலை மாதம் மீண்டும் நம்மை தேவ சந்நிதானத்திற்கு சரணடைய அழைக்கிறது.

கர்த்தருடைய சத்தம் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கின்றது. யாரை நான் அனுப்புவேன்? என்று. என்றும், எப்போதும் நமது பதில்... **இதோ நான், ஆண்டவரே என்னை அனுப்பும்** என்பதாகட்டும்.

தாழ்மையுடன் தேவ பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**



# இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பு கூறுகிறாயா?

முழுக் கரும்பை எவராலும் முழுமையாக வாயில் வைத்து சுவைக்க இயலாது. கரும்பை சுவைக்க வேண்டுமென்றால் அதை கணு கணுவாக வெட்டி சுவைக்க வேண்டும். அதுபோல அருமையான இந்த கருப்பொருள் வசனத்தை ஒரே செய்தியிலே சொல்ல முடியாது. அதை கொஞ்சம் கொஞ்சமாக நான் பிரித்து வகுத்து சொல்லப்போகிறேன்.

இந்த செய்தியின் தலைப்பு **இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பு கூறுகிறாயா?** என்பது. இந்த வசனத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால் யோவான் 21ஆம் அதிகாரம் முழுவதையும் வாசிக்க வேண்டும். இது ஒரு கேள்வி. கேள்வி கேட்காமல் நம்மால் உரையாடவோ, எழுதவோ, பிரசங்கிக்கவோ முடியாது. கேள்வி மிக முக்கியம். ஒரு புத்தகத்தை வாசித்தேன். அதில் ஆண்டவர் கேட்ட கேள்விகள் ஒரு புறமும், மனிதர்கள் கேட்ட கேள்விகள் மறுபுறமுமாக இருந்தன. இப்போது நாம் ஆண்டவர் கேட்ட கேள்விகளில் ஒன்றைக் குறித்து சிந்திக்கப்போகிறோம்.

ஆதி.3:9இல் ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்? என்றும், 1 இராஜ.19:9இல் எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றும் ஆண்டவர் கேட்கிறார். யோனா 1:8இல் உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான்? என்று யோனாவைப் பார்த்து கப்பலில் இருந்த மக்கள் கேட்டார்கள். இப்படி கேள்விகள் பல வருகின்றன. யோவான் 21ஆம் அதிகாரம் ஒரு முக்கியமான அதிகாரம். இதற்கு தலைப்பு கொடுக்க வேண்டுமென்றால் இது ஓர் சீர்ப்படுத்தும் அதிகாரம். Restoration என்று சொல்வார்கள். யோ.21:1-14 வசனங்களில் ஆண்டவர் தம் சீடர்களோடு விருந்து சாப்பிட்டது குறித்து சொல்லப்படுகிறது. சிலர் இந்த அதிகாரத்தை, ஆண்டவர் மரித்து உயிர்த்தெழுந்த செய்தியை அறிந்த பிறகும் அவரின் சீடர்கள் ஏன் மீன்பிடிக்கச் சென்றார்கள் என்றும், வேறுசிலர், சீஷர்கள் பின்வாங்கினார்கள் என்றும் சொல்வார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் ‘ஆண்டவர் கலிலேயாவுக்குப் போங்கள், அங்கே என்னைக் காண்பீர்கள் என்றார்’. ஆகவே அவர்கள் கீழ்ப்படிந்து ஆண்டவர் சொன்னபடி கலிலேயாவுக்குச் சென்றார்கள்.

குறிப்பாக மீன் பிடிக்கிற மக்கள் தைரியசாலிகள், விடா முயற்சியுடையவர்கள், சோர்ந்து போகாதவர்களாக இருப்பார்கள். நம்மைப்போல பொழுது

போக்குகிறவர்கள்தான் பகலிலே மீன் பிடிப்பார்கள். பகலிலே மீன் பிடிக்க வலையைப் போட்டால் அந்த வலையைக் கண்டு மீன்கள் சென்றுவிடும். ஆகவே, இரவில் மீன் பிடிப்பார்கள் என்று பார்க்லே (Barkley) என்ற பண்டிதர் சொல்லுகிறார். இயேசுவின் சீடர்களில் பெரும்பான்மை யானோர் மீனவர்கள். ஆகையால் அவர்கள் மீன்பிடிக்கச் செல்கிறார்கள். அப்படி செல்லும்போது ஒரு மீனும் அகப்படவில்லை. கடற்கரையிலே அவர் சீடர்களிடம் கேட்கிறார், 'பிள்ளைகளே புசிக்க ஏதாகிலும் உண்டா?' என்று. அவர்கள் இல்லை என்றார்கள். உடனே ஆண்டவர். உங்கள் படவுக்கு வலதுபக்கமாய் வலையைப் போடுங்கள் என்று சொன்னார். இந்த காரியங்களை மூன்று குறிப்புகள் மூலமாக விளக்க விரும்புகிறேன்.

## 1. நினைவு கூறச்சொன்னார் (Rememberance)

ஆண்டவர் பேதுருவின் அழைப்பை நினைவுகூறச்சொன்னார். லூக்கா 5ஆம் அதிகாரத்தில் இரவெல்லாம் மீன்பிடித்தார்கள், ஒரு மீனும் அகப் படவில்லை. அந்தச் சமயத்திலே ஆண்டவர் படவிலே ஏறுகிறார், படவைத் தள்ளிவிடும்படி சொன்னார், படவிலிருந்து பிரசங்கித்தார். பிறகு பேதுருவைப் பார்த்து, பேதுருவே கடலின் ஆழத்திலே கொண்டுபோய் வலையைப்போடு என்கிறார். அந்தச் சமயத்திலே வலை கிழியத்தக்கதாக திரளான மீன்கள் கிடைத்தன. அன்று பேதுருவை அழைத்த அவருடைய அழைப்பை இப்போது நினைவுப் படுத்துகிறார். அங்கே ஆழத்தில் போடச்சொன்னார், யோவான் 21ஆம் அதிகாரத்தில் வலது பக்கத்தில் போடச் சொல்கிறார். அங்கேயும் வலைகள் கிழியத்தக்கதாக, இங்கேயும் வலைகள் கிழியத்தக்கதாக மீன்கள் கிடைத்தன. பேதுருவின் வாழ்க்கையிலே இதன் மூலம் அவருடைய அழைப்பை நினைவுப்படுத்துகிறார்.

அருமையான சகோதரனே! சகோதரியே! ஆண்டவர் உங்களுக்கு அழைப்பைத் தந்திருக்கிறார். அந்த அழைப்பை அநேகர் மறந்திருக்கலாம், அநேகர் அந்த அழைப்பை உதாசீனப்படுத்தி யிருக்கலாம் இந்தச் செய்தியின் மூலமாக பரிசுத்தாவியானவராகிய தேவன் உங்கள் அழைப்பை, பொறுப்பை, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமை களை ஞாபகப்படுத்துகிறார். அழைத்தவர் ஒருவர். அவருடைய நோக்கம், திட்டம், செய்தி, வல்லமை ஒன்றே. ஆனால் நாம் கடைபிடிக்கும் வழிமுறைகள்தான் மாறுகின்றன. முன்பு இரும்பினால் செய்யப்பட்ட புனல் போன்ற குழாயை வைத்துதான் பிரசங்கம் செய்வோம். இப்போது மீடியாவுக்கு வந்துவிட்டோம். அந்தளவுக்கு மாறிவிட்டது.

யோவான் 21இல் ஆண்டவர் பேதுருவுக்கு தனது அழைப்பை ஞாபகப்படுத்தியது போல, நான் என் இரு கைக்கூப்பி கேட்கிறேன், அழைப்பை மறந்த அன்பு சகோதரனே! சகோதரியே! ஆண்டவர் தம் வார்த்தையின் வழியாக உன் அழைப்பை ஞாபகப்படுத்துகிறார்.

## 2. பேதுருவின் வீழ்ச்சிக்கு காரணங்கள் (Reasons for failure)

சிம்சோனின் வீழ்ச்சி குறித்தும், சால மோனின் வீழ்ச்சி குறித்தும் நமக்குத் தெரியும். ஆனால் பேதுருவின் வீழ்ச்சி என்ன? ஆண்டவரை அறியவில்லை என்றான், தெரியாது என்றான், சபித்தான், சத்தியம் பண்ணத் தொடங்கினான். அவனுடைய வீழ்ச்சியை ஞாபகப்படுத்த மூன்றாந்தரம் ஆண்டவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா?

என்று கேட்கிறார். பேதுரு மூன்று முறை இயேசுவை மறுதலித்தான். அதனால் அவனது தோல்வியை ஆண்டவர் ஞாபகப்படுத்துகிறார். அருமையான சகோதர, சகோதரிகளே! வீழ்ச்சிகளுக்கு என்ன காரணம். அநேகர் வீழ்ச்சி வந்தால் அந்தப் பழியை சாத்தான்மேல் போடுகிறார்கள். அல்லது சூழ்நிலைகளின்மேல் போடுகிறார்கள். ஆனால் வீழ்ச்சிக்கு 'தானே' காரணம் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை.

பேதுருவின் வீழ்ச்சிக்கு முதல் காரணம், அவன் எழுதப்பட்ட வேத வார்த்தைகளை நம்பவே இல்லை. 'மனித குமாரன் சிலுவையில் அடிக்கப்படும்போது எல்லாரும் ஓடிவிடுவீர்கள்' என்று ஆண்டவர் சொல்லுகிறார். இது பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவரின் வாழ்க்கையில் நடந்த எல்லாமே எழுதப்பட்ட வேத வார்த்தையின்படியே நடந்தது. அதாவது தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில்தான் நடந்தது (மத். 26:31). பேதுரு ஆண்டவரிடம் (லூக்.22:33) காவலிலும், சாவிலும் உம்மை பின்பற்றி வருவேன், உம்மை மறுதலிக்கமாட்டேன் (மத்.26:35) உம்மை விட்டு விலகமாட்டேன் என்று கூறுகிறார். அதன் பொருள் என்ன தெரியுமா? பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட வார்த்தையை அவன் நம்பவில்லை. இன்று அநேகர் எழுதப்பட்ட வார்த்தைகளை விசுவாசிப்பதில்லை. எழுதப்பட்ட வார்த்தை என்றால் என்ன? அது நம் கையிலிருக்கிற முழு வேதாகமம். இந்த எழுதப்பட்ட வேத வார்த்தைதான் களங்கமில்லாத ஞானப்பால். 1 பேதுரு 2:3இல் "நீங்கள் இரட்சிப்புக்கென்று வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்."

அருமையானவர்களே! நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், அதிகமாய் ஆண்டவரிடம் அன்பு கூறவும் வேண்டுமென்றால் வேதத்தை கற்றுக்கொள்ள வேண்டும். சிலர் வேதத்தை வாசிப்பதில்லை. காலண்டரில் உள்ள வசனத்தை மாத்திரம் பார்ப்பார்கள். என் வாழ்க்கையில் நான் அதிகமாக ஆண்டவரை நேசிப்பதின் காரணம் ஒரு நாளைக்கு பல அதிகாரங்களை வாசிப்பேன். நான் அதை வாசிக்க வாசிக்க பெலமும், ஞானமும் எனக்கு கிடைக்கிறது.

இரண்டாவதாக பேதுருவின் வீழ்ச்சிக்கு காரணம், மத். 26:34இல் இயேசு பேதுருவை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார். முதலாவது வீழ்ச்சிக்கு காரணம் எழுதப்பட்ட வார்த்தையை அவன் நம்பவில்லை. இரண்டாவது ஆண்டவரின் தீர்க்கதரிசன வார்த்தையையும் அவன் நம்பவே இல்லை. இன்று சிலர் தீர்க்கதரிசன வரம் இல்லை என்பார்கள். சிலர் எழுதப்பட்ட வார்த்தையைக் காட்டிலும் தீர்க்கதரிசன வரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஆண்டவர் ஒரு மெய்யான தீர்க்கதரிசி. அவர் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தது.

மூன்றாவதாக அவன் வீழ்ச்சிக்குக் காரணம், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை (Over self confidence). மூன்று விதமான தன்னம்பிக்கை இருக்கிறது. ஒன்று தன்னம்பிக்கை (confidence), மிதமிஞ்சிய தன்னம்பிக்கை (over confidence), கிறிஸ்துவை மையமாக வைத்த நம்பிக்கை (Christ Centre confidence). பேதுரு சொல்கிறார், எல்லாரும் மறுதலிப்பார்கள், எல்லாரும் இடறலடைவார்கள், எல்லாரும் விலகி

விடுவார்கள். ஆனால் நான் விலகவே மாட்டேன் என்று. அந்த நம்பிக்கை ஆண்டவர் மீதல்ல, எழுதப்பட்ட வார்த்தையின் மீதல்ல, தன்மீது மிதமிஞ்சிய நம்பிக்கை வைத்ததின் காரணம். இது அவன் வீழ்ச்சிக்கு இன்னொரு காரணம்.

அவன் வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணம், அவன் மற்றவர்களை தவறாய் மதிப்பிட்டான். மத்.26:36இல் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் ஒருக்காலும், அதாவது நான் மாத்திரம் யோக்கியன், அடுத்தவன் அயோக்கியன். எல்லாரும் விழுந்து போவார்கள் நான் மாத்திரம் விழமாட்டேன். இது மற்றவர்களை குறித்ததான தவறான மதிப்பீடு.

அருமையானவர்களே! பல சமயங் களிலே நமது மதிப்பீடு தவறாய் போய்விடுகிறது. பவுல் கூட தவறினான். எங்கே? மாற்கு என்பவனை பர்னபா ஊழியத்துக்கு கொண்டுபோக வேண்டுமென்றான். அதற்கு பவுல், பம்பிலியா என்ற இடத்திலே அவன் நம்மை விட்டுப் போய்விட்டான். அதனால் கூட்டிக்கொண்டு போகக் கூடாது என்கிறார். அதனால் இருவருமே பிரிந்தார்கள். பர்னபா மாற்குவை அழைத்துச் சென்றார். பவுல் இன்னொருவனை அழைத்துச் சென்று பக்குவப்படுத்தியிருக்கலாம். அவன்தான் பின்னாளில் மாற்கு நற்செய்தி நூலை எழுதுகிறான். தன் முதிர்வயதிலே பவுல், பர்னபாவின் இனத்தானாகிய மாற்கு உங்களிடத்தில் வந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கொலோ.4:10 வசனத்திலும், தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில் மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டு வா, ஊழியத்தில் அவன் எனக்கு பிரயோஜனமுள்ளவன் என்றும் எழுதுகிறார் (2 தீமோ.4:11).

## 3. பேதுருவை மறுபடியும் உறுதிப்படுத்துகிறார் (Reassurance)

பேதுருவை எப்படி உறுதிப்படுத்துகிறார் என்று பார்ப்போம். லூக்.22:33இல் ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். ஆனால் லூக்.22:31,32ஐ கவனமாய் வாசித்தால் சீமோனே, சீமோனே இதோ, கோதுமையை சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். இதற்கு என்ன அர்த்தம், பேதுருவின் வீழ்ச்சியை ஆண்டவர் முன்னமே அறிந்திருந்தார். அருமையானவர்களே! நம் வாழ்க்கையின் மேடு பள்ளம் நமக்குத் தெரியும். என்றைக்கு நாம் மடிவோம், நம் வாழ்க்கையில் என்னென்ன நடக்கும் என்பது கர்த்தருக்கு மட்டுமே தெரியும். பேதுருவைப் பார்த்து ஆண்டவர் சொல்கிறார், பேதுருவே! உன் வாழ்க்கையின் வீழ்ச்சிக்கு காரணம் என்ன? சாத்தான் உன்னை சுளகிலே வைத்து புடைக்க உத்தரவு கேட்டுக்கொண்டான். இதை பேதுரு பின்னாளில் எழுதுகிறார், பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித் திரிகிறான். அப்படியானால் சோதனை, வீழ்ச்சி என்பது சாத்தானால் வருவது. ஆனால் சாத்தானை தேவன் அனுமதித்தாலொழிய அவன் நம்மை தொடவே முடியாது.

யோபுவைத் தொட ஆண்டவரிடம் சாத்தான் எப்படி உத்தரவு கேட்டுக்கொண்டானோ அதேபோல பேதுருவை சோதிக்க அனுமதி கேட்டான். 2 கொரி.12:7இல் பவுல் சொல்கிறார் என் மாம்சத்திலே

முள் வைக்கப்பட்டிருக்கிறது, அது என்னை குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. ஆகவே வேதனை யானாலும், சோதனை வீழ்ச்சியானாலும் சாத்தானால் வருகிறது. எனவே ஆண்டவர் பேதுருவின் வீழ்ச்சியை முன்னறிவிக்கிறார்.

அருமையானவர்களே! சாலாமோனுக்கு இரண்டு முறை எச்சரித்தார். ஆனால் அவன் திருந்தவே இல்லை. யூதாசுக்கு 7 முறை எச்சரித்தார் என்று நற்செய்தி ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். அவனை 7 முறை எச்சரித்தும் தன் வாழ்க்கையிலே திருந்தவே இல்லை. அருமையான சகோதரனே, சகோதரியே உன் வீழ்ச்சியை ஆண்டவர் நேரடியாக எச்சரிக்கலாம். அல்லது மூத்த விசுவாசிகள் வழியாக, ஊழியர்கள் வழியாக, உன் பெற்றோர் வழியாக, உன் உடன்பிறப்புகள் வழியாக அல்லது நண்பர்கள் வழியாக எச்சரிக்கலாம். எச்சரித்தும் அதை மீறும்போது நம் வாழ்க்கையிலே வீழ்ச்சி வருகிறது. ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்றால் ஒரு கணவனும் மனைவியும் இணைய வேண்டும். அதுபோல் நமக்குள்ளிருக்கிற பாவ சுபாவமும், வெளியேயிருக்கிற சூழ்நிலையும் இணையும்போதுதான் பாவம் பிறக்கிறது. இதைத்தான் யாக்கோபு, இச்சையானது பாவத்தைப் பிறப்பிக்கும். பாவமானது மரணத்தைப் பிறப்பிக்கும் என்கிறார்.

முதலாவது பேதுருவுக்கு ஆண்டவர் கொடுத்த உத்தரவாதம் என்ன தெரியுமா? லூக்.22:31,32இல் முதலாவது அவனது வீழ்ச்சியை **முன்னறிவிக்கிறார்**. இரண்டாவதாக அவனுக்காக **ஜெபிக்கிறார்**. 'நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்' என்றார். அவனது வீழ்ச்சி வருமுன்பே அவனுக்காக ஜெபிக்கிறார். மூன்றாவது பேதுருவுக்கு ஆண்டவர் **உறுதியளிக்கிறார்**. ''நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து''. இதன் அர்த்தம், நீ வீழ்ச்சியிலே அழிந்து போகிறவனல்ல, நீ வீழ்ச்சியிலே விழுந்தாலும் மீண்டும் எழும்ப வைப்பேன், உன்னை நிற்க வைப்பேன், நீ குணப்படுவாய், நீ குணப்படும்போது நீ அடுத்தவரை ஸ்திரப்படுத்து என்கிறார். இந்த இடத்தில் தான் அவனுடைய எதிர்கால காரியங்களைக் குறித்து தெளிவான உத்தரவாதத்தை ஆண்டவர் தருகிறார். (மாற்கு 14:28இல் "ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்").

அருமையானவர்களே! ஆண்டவர் நம்மைப் பார்த்து கேட்கும் கேள்வி **'இவர்களிலும் அதிகமாய் அன்பு கூறுகிறாயா?'** இந்தப் பகுதியை விளங்கிக்கொள்ள கீழ்வரும் மூன்று காரியங்களையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

1. அவனுடைய வாழ்க்கையின் மூலம் நம் அழைப்பை நினைவுப் படுத்துகிறார் (Rememberance).
2. வீழ்ச்சிக்குரிய காரணங்களை (Reasons for failure) திருமறையிலிருந்து நமக்கு கற்றுக்கொடுக்கிறார்.
3. ஆண்டவர் நமக்கு உறுதியளிக்கிறார் (Reassurance) நீ குணப்பட்ட பிறகு மற்றவர்களை ஸ்திரப்படுத்து.

**சுவி. சுசி பிரபாகரதாஸ்**
(2025 தமிழ் நாடு மாநில முகாமில் பகிர்ந்துகொண்ட செய்தி)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்

# தமிழ் நாடு மாநில முகாம்

## டேனிஷ்பேட்டை









பல ஆண்டுகளாக டேனிஷ்பேட்டையில் வைத்து நடைபெறும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தமிழ் நாடு மாநில முகாமானது ஆயிரக்கணக்கான நமது ஜெபக்குழு அங்கத்தினர்கள் மற்றும் பங்காளர்களின் வாழ்வைத் தொட்டு, மாற்றுவதில் பெரும் பங்கு வகித்துள்ளது. அநேக வாலிபர்கள், இளம் வாலிபர்கள், இளம் தம்பதியினர் மற்றும் குடும்பங்கள் கூடி, அவர்கள் தங்கள் வாழ்வினை தேவனுக்கு அர்ப்பணித்தது நமது இயக்கத்தின் மற்றுமொரு மைல் கல்லாக அமைந்தது. காலை தியான நேரங்களும், சந்தியா நேரங்களும் வரலாற்று சிறப்பு மிக்கதாகவும், ஆசீர்வாதமாகவும் அமைந்திருந்தது.

2025 மே 15-18 வரை பெத்தேல், டேனிஷ்பேட்டையில் நடந்த இம்மாநில முகாமில் தேவன் செய்த எண்ணற்ற கிரியைகளை எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இம்முகாமில் சுமார் 2874 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இதில் 1675 பேர் பெரியவர்கள், 352 வாலிபர், 546 இளம் வாலிபர்கள் மற்றும் 301 சிறுவர்கள் பங்குபெற்றனர். இம்முகாமில் தேவ ஆவியானவரின் அசைவாடுதலை உணரமுடிந்தது. இரவு நேரங்களில் நல்ல மழையை தேவன் வருஷிக்கப்பண்ணினார். இம்முகாமில் நமது இயக்கத்தின் தலைவர், உப தலைவர், நிதி காவலர் மற்றும் பொதுக் காரியதரிசி பங்குபெற்றனர்.

பெத்தேல் என்பதற்கு எபிரெய பதத்திற்கு **"தேவனின் வீடு"** என்று பொருளாகும். இப்பெத்தேல் வளாகம் மேற்கு தொடர்ச்சி மலைகளின் சேர்வராயன் குன்றுகளின்

அடிவாரத்தில் அமைந்துள்ளது. பசுமையான புல்வெளிகள், உயர்ந்த மரங்கள், அடர்ந்த காடுகள் மற்றும் பெரும் மலைகளைக்கொண்ட அற்புதமான காட்சிகளை உள்ளடங்கிய சேர்வராயன் மலைகள் இயற்கையின் கொள்ளை அழகை எடுத்துக்காட்டுகின்றன. இத்தனை அழகு நிறைந்த வளாகத்திற்காக தேவனைத் துதிக்கிறோம். இவ்வளாகத்தில் திகைப்பூட்டக்கூடிய அழகு மயில்களை நானும் எனது மனைவியும் கண்டு மகிழ்ந்தோம். அதன் தோகைகளின் வண்ணங்களும், வடிவமைப்புகளும், அழகு, நயனம் மற்றும் இராஜதன்மையை பிரதிபலிக்கிறது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இந்த பெத்தேல் வளாகத்திற்கு வந்து இங்குள்ள மயில்கள், தேவனின் படைப்போவியம் மற்றும் அவரின் பிரசன்னத்தை அனுபவிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.





இம்முகாமில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்தனர். இம்முகாமின் சிறப்பே இளம் வாலிபர்களின் பங்கேற்பும், அவர்களின் அர்ப்பணிப்புமே ஆகும். அநேக வாலிபர்கள், இளம் வாலிபர்கள் தங்கள் வாழ்வினை தேவ பணிக்கென்று அர்ப்பணித்தனர். இவ்வாறு அர்ப்பணித்தோர், தங்கள் அர்ப்பணிப்பில் உறுதியாய் நிலைத்திருக்க அவர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்த தீர்மானித்துள்ளோம். இம்முகாமின் கன்வீனரான திரு. தேவராஜ் மற்றும் அவரோடு இணைந்து மிக சிறப்பாக ஒழுங்குச் செய்திருந்த திரு. டேனியல் தாமஸ், திரு. டேனியல் அருள்மணி, திரு. ஆண்ட்ரூ மற்றும் திரு. சாலமோன் ஞானசேகர் ஆகியோரை பாராட்டுகிறேன்.

## ஜெபிப்போம்

- வருகின்ற நாட்களில் வாலிபர்கள், இளம் வாலிபர்கள் மற்றம் இளம் தம்பதியர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்கு இன்னும் அதிக கவனம் கொடுக்க தீர்மானித்துள்ளோம். அப்பொழுதுதான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவால் அநேக வாலிபர்களை ஊழியர்களாக உருவாக்கி வட இந்தியாவிலுள்ள பணித்தளங்களுக்கு அனுப்ப முடியும்.
- பொங்கல் விடுமுறை நாட்களிலோ அல்லது வேறு எந்த வசதியான நேரத்திலோ பெரிய அளவில் வாலிபர் மாநாடு நடத்த சாத்தியமான நாட்களை எதிர் நோக்கியுள்ளோம். இது நமது இயக்கத்தை கட்டியெழுப்ப ஏதுவாக இருக்கும். தமிழ் நாட்டிலுள்ள நான்கு பிராந்தியங்களிலிருந்து பல இளைஞர்கள் தன்னார்வலர்கள் மற்றும் இயக்குநர்கள் எழும்ப வேண்டும்.
- பெத்தேலில் தங்குமிடங்களை, பெத்தேலுடன் இணைந்து அடுத்த 12 மாதங்களில் மேம்படுத்திட முயற்சிப்போம்.








- இம்முகாமில் பங்கேற்ற 2874 நபர்களின் தகவல்களை பகுதிவாரியாக பிரித்து அவர்கள் எந்த மாவட்டத்திலிருந்து பங்கேற்றார்கள் என்று கண்டறியப்பட்டு, முகாமில் பங்கேற்ற எல்லா குடும்பங்களையும் சந்திக்க சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- பெத்தேல் வேளான்மை ஐக்கியத்தின் வளாகத்தை நம் பயன்பாட்டிற்கு கொடுத்த அதன்இயக்குனர் திரு. எல். எபினேசர் மற்றும் திரு. சாமுவேல் நிர்மல் அவர்களின் உதாரத்துவத்திற்காக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இம்முகாமில் என்னுடன் சேர்ந்து கர்த்தரின் வார்த்தைகளை பகிர்ந்துகொண்ட திரு. சுசி பிரபாகர், திரு. நவநீதர், அருட்திரு. விஜய் பி. ஐசக், அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் மற்றும் அருள்திரு. ஜாண் பெர்லின் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அநேகர் தன்னார்வமாய் வந்து ஆலோசனை நேரங்கள் மற்றும் ஒழுங்கு செய்வதிலும் தங்களை இணைத்துக்கொண்டதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட அர்ப்பணமுள்ள தன்னார்வலர்களைக் கொண்டிருக்கும் நமது இயக்கம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சிறந்த சொத்துக்களான உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.
- தேவனுக்கு சித்தமானால் 2026ஆம் ஆண்டு மாநில முகாமோடு இணைந்து நமது செயற்குழுவினை நடத்த திட்டமிட்டுள்ளோம். முகாமோடு சேர்த்து நடத்துவதன் மூலம் நமது செயற்குழு அங்கத்தினர்களுக்கும் நமது இயக்கம் எத்திசையை நோக்கி செல்கின்றது என்பதை அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும்.
- வரும் நாட்களில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களையும் இம்முகாமில் கலந்துகொள்ள அவர்களுக்கும் அழைப்புக் கொடுத்து, நாம் ஒன்றிணைந்து தேவனின் மகத்துவத்தைக் கொண்டாடுவோம்.

இது தேவனின் இயக்கம் மற்றும் ஊழியம். இந்த மாநில முகாமானது நமது இயக்கத்தைக் கட்ட எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். நாம் தொடர்ந்து இவ்வூழியத்தில் இன்னும் அதிகமாய் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர் – FMPB

# ராம்கர் பணித்தளம்







ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு நகரம் ஜம்மு ஆகும். இது சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் அமைந்துள்ளது. தாவி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஜம்மு வடக்கே இமயமலையாலும், தெற்கே வடக்கு சமவெளிகளாலும் சூழப்பட்டுள்ளது. இந்த நகரம் சிவாலிக் மலைகளில் தொடர்ச்சியான தாழ்வான, சீரற்ற முட்காடுகளில் அமைந்துள்ளது. இதன் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கில் சிவாலிக் மலைத்தொடரும், வடமேற்கில் திரிகுடா மலைத்தொடரும் எல்லையாக உள்ளது.

ஜம்மு காஷ்மீர், இயற்கை அழகு மற்றும் வரலாற்று முக்கியத்துவத்திற்கு பெயர் பெற்றது. இது ஒரு பிரபலமான சுற்றுலா ஸ்தலமாக அமைந்துள்ளது. மலைகள், தோட்டங்கள், ஆறுகள் மற்றும் அழகிய நிலப்பரப்பு அதன் கவர்ச்சியை மேம்படுத்துகிறது. கோவில்களின் நகரம் என்று அழைக்கப்படும் ஜம்மு மாநிலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான யாத்ரீகர்கள் வந்து செல்கின்றனர். பிரபலமான வைஷ்ணோதேவி கோயில் உட்பட பல பழங்கால கோவில்கள் இங்குள்ளன.

ஜம்மு, ஈரப்பதமான துணை வெப்ப மண்டல கால நிலையைக் கொண்டுள்ளது. கோடை வெப்பநிலை 46 டிகிரி செல்சியஸ் ஆகவும், குளிர் காலத்தில் குறைந்த பட்ச வெப்பநிலை எப்போதாவது 4 டிகிரி செல்சியஸுக்கும் குறைவாகவும் இருக்கும்.

அதிகம் பேசப்படும் மொழி டோக்ரி. மேலும் காஷ்மீரி, உருது, இந்தி, ஆங்கிலம் ஆகியவை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக உள்ளன. ஆதிக்கம் செலுத்தும் மதம்

இந்து மதம். குறிப்பிடத்தக்க இஸ்லாமியர்களும் இப்பகுதியில் வசிக்கின்றனர். ஜம்முவிற்கு அருகிலுள்ள ஆர்.எஸ். புரா பகுதி, உள்ளூர் அரிசி ஆலைகளில் பதப்படுத்தப்பட்ட பிரீமியம் பாஸ்மதி அரிசியை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்றது. பாரி பிராமணா தொழில் துறை எஸ்டேட், கம்பளங்கள் மற்றும் மின்னணு பொருட்களை உற்பத்தி செய்யும் ஏராளமான கிளைகளைக் கொண்டுள்ளது.

## ராம்கர்

ராம்கர் என்பது ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தி லுள்ள ஒரு நகரம். இது இந்திய-பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் அமைந் துள்ளது. இங்கு கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மிகப்பெரிய மக்கள் இனமாக டோக்ரா மக்கள் (47%) வாழ்கின்றனர். மேலும் பிராமணர்கள், ராஜ்புத்திரர்கள், தாக்கூர், ஜாட், காத்ரி, மேக் மற்றும் சமார் போன்ற மக்கள் இனங்களும் வாழ்கின்றனர். ராம்கர் அதன் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று கோவில்களுக்கும், குறிப்பாக பாமுசக் கோவிலுக்கும் பெயர் பெற்றது. பாமுசக் என்ற தொலைதூர கிராமத்தில் அமைந்துள்ள இந்த சுவர் கோவில், மகாராஜா பிரதாப் சிங்கின் ஆட்சிக்காலத்தில் ஒரு மகாஜனான பாமு ஷாவால் கட்டப்பட்டது. இந்த கோவிலில் ராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணங்களின் காட்சிகளை சித்தரிக்கும் சுவரோவியங்கள் காணப்படுகின்றன.

## ராம்கரில் நமது ஊழியம்



பகத் மக்கள் இனத்தை மையமாகக் கொண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் இசைக்குழு மூலமாக 2020 செப்டம்பர் 1ஆம் தேதி ராம்கரில் ஊழியம் தொடங்கப்பட்டது. பகத் என்ற பெயர் சமஸ்கிருத வார்த்தையான '**பக்த**' என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் '**பக்தர்**' அல்லது '**சேவை செய்பவர்**' என்பதாகும். வரலாற்று ரீதியாக பகத் இனம் ஜம்மு பகுதியில் தோன்றியது. முற்போக்கான பஞ்சாபி பிராமண பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகவும் கருதப்படுகிறது. அவர்களின் பக்தி மற்றும் கடவுளுக்கு சேவை செய்வதன் காரணமாக அவர்கள் பெரும்பாலும் '**சோட்டா பண்டிட்**' என்று குறிப்பிடப்படுகிறார்கள். பிராமணர்கள் பாரம்பரியமாக தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதால் பகத்கள் தங்களை பிராமண அந்தஸ்துடன் அடையாளப்படுத்துகிறார்கள்.

## பகத் மக்கள்

1947இல் இந்தியா சுததந்திரம் அடைந்த பிறகு ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்ட அரசியல் அமைதியின்மை காரணமாக பல பகத் குடும்பங்கள் பஞ்சாப் மற்றும் உத்தரப்பிரதேசத்திற்கு குடிபெயர்ந்தனர். இட ஒதுக்கீட்டு முறையின் பலன்களைப்பெற அவர்கள் தங்களை ஜுலாஹா அல்லது கபீர்பந்தி போன்ற

பெயர்களில் பட்டியல் வகுப்பினர் (SC) அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். ஏனெனில் பலர் புனித கபீரின் போதனைகளைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் பாரம்பரியமாக SC அல்லது BC சமுகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றாலும் அவர்கள் இப்போது இந்த வகைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகிறார்கள்.

விவசாயம், தோட்டக்கலை, கைவினைப் பொருட்கள் & கைத்தறி, கல்நடை வளர்ப்பு, சுற்றுலா, அரசு வேலைகள் மற்றும் கல்வி & சுகாதார சேவைகள் போன்ற பல்வேறு தொழில்களில் பகத் மக்கள் ஈடுபடுகின்றனர். கல்வியறிவு 70% இருந்தபோதிலும் சுவிசேஷத்திற்கு மிகப் பெரிய சவாலாகவே காணப்படுகிறது.

## சுவிசேஷத்திற்கான சவால்கள்



- சமூக எதிர்ப்பு மற்றும் குடும்ப அழுத்தம் குறித்த பயம்
- தங்கள் பிள்ளைகளின் திருமண வாய்ப்புகளைக் குறித்த கவலைகள்
- பொருளாதார பாதுகாப்பின்மை மற்றும் வேலையின்மை
- ஆழமாக வேரூன்றிய மூட நம்பிக்கைகள்
  - சூனியத்தில் நம்பிக்கை.
  - ஒருவர் இறக்கும்போது அவரது ஆவி எந்த வடிவத்தை எடுத்திருக்கிறது என்று அறிய (கோழி, பறவை அல்லது பாம்பை ஒத்த கால் தடங்களைக் கவனிக்க) தரையில் மாவைத் தூவி வைக்கின்றனர்.
  - பெரும்பாலும் நோய் அல்லது துரதிர்ஷ்டம் ஏற்பட்டால் இறந்த குடும்ப உறுப்பினர் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

இவர்கள் நற்செய்தியைக் கடுமையாக எதிர்க்கின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் கிறிஸ்தவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க மைக்ரோ குழுக்களை உருவாக்கியுள்ளனர். பெரும்பாலும் கிராமங்களில் மிஷனெரிகள் விரட்டி யடிக்கப்படுகின்றனர். இருப்பினும் பதட்டமான சர்வதேச எல்லைக்கு அருகில் பணிபுரியும் போதும் தேவனின் கரம் மிஷனெரிகளைப் பாதுகாத்து வருகிறது. உள்ளூர் சுதேச ஊழியர்கள் இல்லை என்றாலும் தன்னார்வலர்கள் ஊழியத்தில் தீவிரமாக உதவுகின்றனர். தற்போது வரை ஒருசில நபர்கள் மட்டுமே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## ஜெபிக்க:

- ராம்கரிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சுவிசேஷத்திற்கான திறந்த வாசலை தேவன் கட்டளையிட.
- இவர்கள் மத்தியில் காணப்படும் மூடநம்பிக்கைகள் மற்றும் ஆன்மீகக் குருட்டுத்தன்மைகள் அகன்றுபோக.

- அனைத்து சவால்களையும் ஊழியத்திற்கான படிக்கட்டுகளாக தேவன் மாற்றித் தர.
- பகத் இன மக்கள் கிறிஸ்துவின் உண்மையான பக்தர்களாக மாற.
- விசுவாசிகள் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, சமூகத்தில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்த.
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் துணிச்சலான கிறிஸ்துவின் சாட்சிகளாக மாற.
- நற்செய்தி கூட்டங்களில் பங்குபெறுவோர் தங்கள் விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட.
- ஜெபக் கூடுகைகள், பெண்கள் கூடுகைகள் மற்றும் வேதாகம வகுப்புகளில் சபை மூப்பர்கள் உற்சாகத்துடன் பங்குபெற.
- 2025ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து ஊழிய இலக்குகள் முழுமையாக நிறைவேற்றப்பட.
- ராம்கர் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் திரு. ஜாண் எசுங் மற்றும் திருமதி. லிபெனி ஜாமியை தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும், அவர்களின் பிள்ளைகள் காலேப் மற்றும் ஏஞ்சலை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

*தொகுப்பாளர்:* **திருமதி. மெர்சி செல்வின்,** செயலர் – தொடர்புத் துறை

## மிஷனெரிப் பிரதிஷ்டை



ஆண்டவரின் பெரிதான கிருபையினால் பவானி, சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயம், ஈரோடு மாவட்டத்தில் 10 மிஷனெரிகளின் பிரதிஷ்டை ஆராதனையை 16.03.2025 அன்று அருள்திரு. டாக்டர். விக்டர் ராஜ், தலைமை ஆயர் அவர்கள் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இந்த கூடுகையில் முன்னாள் பொதுசெயலாளர் அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் தேவ செய்தி அளித்தார்கள். அருள்திரு. ரவிக்குமார் அவர்கள் பணித்தள செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். இவர்களை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குகிற திருமதி. பால்ராஜ் சுகந்தி, திரு. நிக்கல்சன் சாமுவேல், திருமதி. கனிஷ்கா, திரு. ஜெயமோகன் குமார், திரு. டேனியேல், திருமதி. ஸ்டெல்லா மில்டன், செல்வி. ஐடா பிளஸ்சி ஆகியோருக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**விரிவுப்பணி செயலர்**, ஈரோடு

# தமிழ் நாடு மாநில முகாம் 2025

## "இவர்களிலும் அதிகமாய்"

யோவான் 21:15



நேசிப்பாயா? நேசிப்பாயா? என்ற பாடல் வரிகள் சேர்வராயன் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள பெத்தேலில் ஒலித்துக்கொண்டிருந்தது. தேவனால் தெரிந்துகொண்ட மக்கள் திரள் கூட்டமாய் மே 14ஆம் தேதியன்றே வரத்தொடங்கினார்கள். இந்த ஆண்டும் சென்னை, செங்குன்றம் பகுதி கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. G. ரஞ்சித் பாண்டியன் தலைமையில் அந்தப் பகுதியிலுள்ள ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மக்களை அன்புடன் வரவேற்று, பெயர் பதிவு செய்து, தங்குமிடம் ஒழுங்கு செய்து கொடுத்தார்கள்.



மாநில முகாமின் துவக்க நாளான மே 15ஆம் தேதி அரங்கம் முழுவதும் மக்கள் நிறைந்து அமர்ந்திருந்தார்கள். காலை 9.30 மணியளவில் இயக்கத்தின் மூத்த அண்ணன் திரு. செல்வராஜ், திருநெல்வேலி அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்தார்கள். இயக்கத்தின் மூத்த மிஷனெரி திரு.A. இஸ்ரேல் அண்ணன் தலைமையில் திரு. சேவியர், திரு. பிரேம், திரு. சிம்சன், திரு. சாம் தாமஸ் ஆகியோரின் இனிய இசையுடன் பாடல் வேளை நடைபெற்றது. இயக்கத்தின் உப தலைவர் திரு. J. சாம் பொன்னையா அவர்கள் முகாமின் சிறப்பு விருந்தினர்களை வரவேற்று மேடையில் அமர வைத்தார்கள். இயக்கத்தின் தலைவர் திரு. G. ஜாண் சாமுவேல் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். இந்த ஆண்டின் கருப்பொருளை அருள்திரு. S. ரவிக்குமார் மிக அழகாக அறிமுகப்படுத்தினார்கள். பெத்தேல் நிர்வாக இயக்குநர் திரு. L. எபிநேசர் அவர்கள் சிறப்பான வாழத்துரையும், வரவேற்புரையும் கொடுத்தார்கள். இந்த ஆண்டு மாநில முகாம் பாடல்கள் அடங்கிய பென் டிரைவ் தகவல் தொடர்புத்



துறை செயலர் திருமதி. மெர்சி செல்வின் அவர்கள் அறிமுகம் செய்ய, இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. மற்றும் இயக்கத்தின் மூத்த மிஷனெரி அண்ணன் அருள்திரு. P. ஸ்டீபன் ஜாய்சன் அவர்கள் எழுதிய "கடவுளின் கண்ணாடி" என்ற புத்தகம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி களில் அறிமுகம் செய்யப்பட்டு தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்களால் ஜெபத்துடன் வெளியிடப்பட்டது. அதுபோல் செயல்வீரர் கீதங்கள் என்ற சிறிய பாடல் புத்தகம் இயக்கத்தின் நிதிகாவலர் திரு. L. நெல்சன் அவர்களால் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது.




நமது வாலிபப் பிரிவின் பிள்ளைகள் முகாமின் புதிய பாடல் ஒன்றை கலை நயம் மூலம் நடித்துக் காட்டினார்கள். கடந்த ஆண்டு தேவ இராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நமது மிஷனெரிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு இயக்கத்தின் பொதுக் காரியதரிசி அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் ஜெபித்தார்கள். மேலும் ஓய்வுபெற்ற மிஷனெரிகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இந்த ஆண்டு குஜராத், மஹாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களிலிருந்து முகாமிற்கு வந்திருந்த நமது மிஷனெரி குடும்பங்கள் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்கள் தங்கள் கலாச்சார உடைகளுடன் அணிவகுப்பு செய்தனர்.

முதல் நாள் தேவ செய்தியை சுவி. சுசி பிரபாகரதாஸ் அவர்கள் வழங்கினார்கள். மதிய உணவுக்குப்பின் வாலிபர்கள், இளம் வாலிபர்கள், சிறுவர்கள் அனைவருக்கும் தனித்தனியே கூடுகைகள் நடைபெற்றன. இந்த ஆண்டு மாநில முகாமில் பெரியவர்கள் 1675 பேரும், வாலிபர்கள் 352 பேரும், இளம் வாலிபர்கள் 546 பேரும், சிறுவர்கள் 301 நபர்களும், ஆக மொத்தம் 2,874 பேர் பங்குபெற்றார்கள். மாலை சந்தியா கூடுகை சந்தியா புல்மேட்டில் நடைபெற்றது. தளோதா சிறுவர் விடுதியில் படிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுடைய நடனம் மற்றும் சாட்சிகள் தேவனை மகிமைப்படுத்தியது. நமது இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். அநேகர் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். அவர்களுக்கு சென்னை, அண்ணாநகர் கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. A.P. கனகராஜ் அண்ணன் அவர்களின் குழுவினர் சிறந்த ஆலோசனைகள் கொடுத்து அவர்கள் இன்னும் அதிகமாய் ஆண்டவருக்குள் நிலைத் திருக்க உதவி செய்தார்கள்.




முகாமின் இரண்டாம் நாள் மே 16 அன்று உபவாச ஜெப நாளாக அனுசரிக்கப்பட்டு காலை



6 மணி முதல் மாலை 5 மணி வரை ஜெபம் நடைபெற்றது. அன்று காலை தியானத்தில் நமது பொதுச் செயலர் அருள்திரு. விஜய் பி. ஐசக் அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உபவாசித்து, கண்ணீரோடு தேசத்திற்காக, மிஷனெரிப் பணிகளுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். வார்லி, குக்னா, மாத்வாட், ஓட் ராஜ்புத் மற்றும் பரேலா இன மக்களின் கலாச்சார நடனம் மற்றும் நமது மிஷனெரிகள் பகிர்ந்துகொண்ட சாட்சிகள் அநேகரின் உள்ளங்களை அசைத்தது. அத்துடன் உத்தரப்பிரதேசத்தில் 20 நாட்கள் சிறைச்சாலையிலிருந்து வெளிவந்த நமது மிஷனெரி அருள்திரு. சமரேந்திர சிங் அவர்களுடைய சாட்சி பலரை ஊக்கமாக ஜெபிக்க வைத்தது. அன்று சந்தியா நேரத்தில் மூத்த மிஷனெரி அண்ணன் திரு. Y. நவநீதர் அவர்கள் ஒலி ஒளி காட்சிகளை நடத்தினார்கள்.

முகாமின் மூன்றாம் நாள் மே 17 அன்று காலை தியான வேளையில் இயக்கத்தின் முன்னாள் பொதுச்செயலர் அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். மற்றும் செயல்படும் நேரம் பகுதியில் அருள்திரு. S. இம்மானுவேல் ரஞ்சித் சிங் அவர்களின் அறைகூவல் செய்தி அநேகரைத் தீர்மானம் எடுக்க உந்தியது. இந்த நிதியாண்டில் நமது பணித்தளங்களில் 12,554 இயேசு திரைப்படக் காட்சிகள் மூலம் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு சுவிஷேம் அறிவிக்கும் திட்டத்திற்காக ரூ.28,04,250/- வாக்குத் தொகையாக கிடைக்கப்பெற்றோம். மேலும் வந்திருந்த அனைவரும் ஜெபத்துடன் ரூ.2,43,020/- மற்றும் ஒரு தங்க மோதிரத்தை காணிக்கையாகப் படைத்தனர். பின் மாவட்ட வாரியாகப் பிரிந்து தங்கள் பகுதியிலிருந்து வந்திருந்த தலைவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் அடுத்தக்கட்ட ஊழியங்களுக்காகத் திட்டமிட்டார்கள். மேலும் பலர் இக்கூடுகைகளில் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் மற்றும் எடுத்த தீர்மானங்களைத் தங்களுடைய கருத்துக்களாக படிவத்தில் எழுதிக்கொடுத்தார்கள். சந்தியா வேளையில் சுவி. சுசி பிரபாகரதாஸ் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை ஆழமாகப் பகிர்ந்து கொண்டார்கள். இது அநேகருடைய வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது.



முகாமின் இறுதி நாளான மே 18 அன்று அதிகாலை 4.30 மணிக்கு பரிசுத்த திருவிருந்து ஆராதனை நடைபெற்றது. அநேகர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வந்து தேவ பிரசன்னத்தில் அமர்ந்திருந்தார்கள். சுவி. சுசி பிரபாகரதாஸ் அவர்கள் தேவனுடைய வார்த்தையைத் தெளிவாக பிரசங்கித்தார்கள்.



இக்கூடுகையில் காணிக்கையாக ரூ.78,801/- கிடைக்கப் பெற்றோம். பின் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பைப் பகிர்ந்துகொண்டார்கள். காலை உணவுடன் முகாம் மிகச் சிறப்பாக நிறைவு பெற்றது.

## வாலிபர் கூடுகையின் ஆசீர்வாதங்கள்

முதல் முறையாக 25 பேர் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றனர். 58 பேர் தங்கள் இரட்சிப்பை புதுப்பித்துக்கொண்டனர். 83 புதிய ஜெபக்குழுக்கள் தொடங்க தீர்மானித்தார்கள். 30 பேர் மிஷனெரிப் பணிக்கென தங்கள் வாழ்வை ஒப்புக்கொடுத்தார்கள். இயேசு திரைப்பட நிகழ்ச்சிக்காக ரூ.1,26,900/- கொடுக்க தீர்மானம் பண்ணினார்கள். மேலும் காணிக்கையாக ரூ.21,615/- மற்றும் 1 தங்க மோதிரம் படைத்தார்கள்.

## இளம் வாலிபர் கூடுகையின் ஆசீர்வாதங்கள்

31 புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க தீர்மானம் எடுத்துள்ளார்கள். 33 பேர் முழுநேரப் பணிக்கென ஒப்புக்கொடுத்தார்கள். மிஷனெரிகளின் மருத்துவ நிதிக்காக 55 பேர் தீர்மான அட்டை பெற்றுக்கொண்டனர். காணிக்கையாக ரூ.14,762/- படைத்தார்கள்.

## சிறுவர் கூடுகையின் ஆசீர்வாதங்கள்

30 பேர் மிஷனெரிகளுக்காக ஜெபிப்பேன் என்றும், 48 பேர் வருங்காலத்தில் மிஷனெரியாகச் செல்ல அர்ப்பணிப்பேன் என்றும் தீர்மானம் பண்ணினார்கள். புதிதாக 71 பேர் சிறுவர் உண்டியல்களைப் பெற்றுச் சென்றனர். 48 பேர் உபவாசித்து ஜெபித்தனர். காணிக்கையாக ரூ.10,056/- படைத்தனர்.

இந்த ஆண்டு மாநில முகாமை மிகச் சிறப்பாக நடத்தித் தந்த முகாம் ஒருங்கிணைப்பாளர் திரு. P. தேவராஜ், இணை ஒருங்கிணைப்பாளர் திரு. J. ஆபிரகாம், பொருளாளர் திரு. M. பிரின்ஸ் முத்துராஜ், இணை பொருளாளர் திரு. R. செல்வராஜ் மனுநீதி, பொது உதவி செய்த திரு. S. தனசிங், திரு. W. ரவிச்சந்திரன் மற்றும் திரு. D. ஆலன் ஆகியோருக்கு எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உணவு பொறுப்பை மிகச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த ஈரோடு திரு. J. அலெக்ஸ் சாம்ராஜ் மற்றும் திரு. D. தினகரன் அவர்களுக்கும், போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்த சேலம் திரு. A. பாலசிங், திரு. P. ரத்னராஜ், திரு. A. ஞானதாஸ் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. இம்முகாமின் வெற்றிக்கு ஜெபத்துடன் பெரிதும் உழைத்த அனைத்து முழுநேர ஊழியர்கள், கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள், ஜெபக்குழு மற்றும் ஸ்கேன் தலைவர்கள் மற்றும் பெத்தேல் நிர்வாகத்தினர் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. எஸ். டேனியல் தாமஸ்,** துறை செயலர் - தமிழ்நாடு & பாண்டி விரிவுப் பணி

# மாநில அளவிலான 3 நாள்

# தேசிய உபவாச ஜெப முகாம்



நாள்: 2025 ஆகஸ்டு 8 வெள்ளி காலை
10 மணி முதல் 10 ஞாயிறு மதியம் 2 மணி வரை

இடம்: அன்றன்றுள்ள அப்பம் ஜெபமண்டபம்,
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்

செய்தியாளர்கள்: Rev. M. **ராஜ்,** சென்னை
**பாஸ்டர். ராஜா,** நாகர்கோவில்
Rev. **விஜய் P. ஐசக்,** பொது செயலர், FMPB.

தரிசனமிகு பாடல்கள் · துதி, மன்றாட்டு ஜெப நேரங்கள்
அனலூட்டும் செய்திகள் · பணித்தளப் பகிர்வுகள்

## பாரத தேசம் இயேசுவின் அன்பினைக் கண்டிட, தேவனின் பாதத்தில் அமர்ந்து உபவாசித்து ஜெபிப்போம் வாருங்கள்!

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்குத் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள். 10ஆம் தேதி உபவாச ஜெபம் முடிந்தபின் உணவு வழங்கப்படும்.

**முகாம் வாளாகம் வந்தடைய:**

- ஜோலார்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து (திருப்பத்தூர் வழியாக) 13 கி.மீ. தூரத்திலும், திருப்பத்தூர் இரயில் / பஸ் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலும் கிறிஸ்துகுல ஆசிரமம் அமைந்துள்ளது.
- பஸ்ஸில் பயணித்து வருவோர் திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் இறங்கலாம்.
- இரயிலில் பயணித்து வருவோர் ஜோலார்பேட்டை அல்லது திருப்பதூர் இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- ஆகஸ்டு 8ஆம் தேதி வெள்ளி அதிகாலை முதல் காலை 10 மணி வரை ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் இரயில் நிலையத்திலிருந்து கிறிஸ்துகுல ஆசிரமம் வந்து சேர வாகன வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வாகன வசதிக்கு தொடர்புகொள்ள:
**சகோ. தேவசுந்தரம் 9444347400 / 8667615516 சகோ. தியோடர் - 9751331155**

*முகாம் குறித்த விபரங்களுக்கு:* **நணபர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை - 600 053.
தொலைபேசி: 044-26574343, 9488805454, 9444396208

# FMPBயின் தலைவர், ECI பிஷப் திருமதி. கதிரொளி மாணிக்கம் மற்றும் மால்டோ தலைவர்களுடன்

## ஓர் சந்திப்பு



ஊழிய அபிவிருத்திக்காக FMPB மற்றும் ECI ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றோம். குறிப்பாக, ஜார்கண்டிலுள்ள மால்தோ மக்கள் மத்தியில் ECI மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2005ஆம் ஆண்டில், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலம் உருவாக்கப்பட்ட 468 தேவாலயங்களை ECIக்கு ஒப்படைத்தது. அதன் பின்னர் மால்டோ மக்கள் மத்தியில் ஊழியம் மேலும் அதிகரித்துள்ளது. இதற்காக நாங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தற்போது அதிகமான தேவாலயங்கள் மற்றும் ஐந்து பள்ளிகள் திறக்கப்பட்டு மிகச் சிறப்பாக ஊழியங்கள் நடைபெற்று வருகின்றன. மால்தோ தலைவர்களில் ஒருவரான பிஷப் பத்ரஸ் மால்தோ, ராஜ்மஹால் மறைமாவட்டத்தின் பிஷப்பாகப் பொறுப்பேற்றுள்ளதைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

ECIயின் மிஷன் பிரிவான இந்திய மிஷனெரி இயக்கம், சமீபத்தில் சென்னையில் அதன் பொன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவில் பங்கேற்கும்படி ECI பிஷப் திருமதி. கதிரொளி மாணிக்கம் அவர்கள் எனக்கு அழைப்புக் கொடுத் திருந்தார். இந்த நிகழ்வில் மால்தோ மக்கள், தங்களின் சிறப்புமிக்கக் கலாச்சார நிகழ்ச்சியை வழங்கினர். FMPB தங்கள் ஆதரவை வெளிப்படுத்தி மால்தோ மக்களை கௌரவித்தனர். மால்தோ மக்களின் மாற்றத்திற்கும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் FMPB எப்போதும் கரிசனையாக இருந்து வருகிறது.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர் – FMPB


வட தமிழ் நாடு மண்டலம் ஸ்கேன் பிரீவு நடத்தும்

**அன்பின் சங்கமம் – 2025**

இடம்: **MCC** மேல்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை
நாள்: 31.08.2025 ஞாயிற்றுக் கிழமை,
காலை 6 மணி முதல் மதியம் 3 மணி வரை

***வியாபாரிகள், தொழில் முனைவோர்களுக்கான சிறப்பு கூடுகை***

# பஸ்தி தினம்




நம் தேசத்தில் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத வட இந்தியர்களை சந்திக்க அருட்திரு. ஹில்க்கியா அண்ணனின் குடும்பம் தங்களை அர்ப்பணித்துச் சென்றனர். உத்தரப்பிரதேசத்திலுள்ள பஸ்தி என்ற இடத்தில் இவர்கள் கால் பதித்த நாள் 23 ஜூலை 1971. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சுவிசேஷப் பணிக்கென வட இந்தியாவில் அடியெடுத்து வைத்த நாளை நினைவுகூறும் வண்ணம் இந்நாள் **பஸ்தி தினமாக** கொண்டாடப்படுகிறது. ஆரம்ப நாட்களில் OM, மற்றும் சிலோன் இந்திய ஊழியங்களோடு இணைந்து தங்களின் ஊழியத்தைத் துவங்கினர். சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகித்தல், கிராமப்புற ஊழியம் மற்றும் ஜீப் குழு மூலம் சுவிசேஷத்தை உற்சாகத்துடன் அறிவித்து வந்தனர். பின்நாட்களில் வடஇந்திய ஊழியத்திற்கென அர்ப்பணித்து வந்த ஊழியர்களுக்கு பஸ்தி ஒரு பயிற்சியளிக்கும் இடமாகவே மாறியது.

1986-1993 வரை அருட்திரு. விக்டர் பாக்கியராஜ் அவர்களின் குடும்பம் பங்கார் பகுதிகளில் விடுமுறை வேதாகமப் பள்ளி மூலம் ஊழியத்தை வலுப்பெறச் செய்ததோடு வருங்கால ஊழியர்களான திருமதி. சரித்தா மற்றும் டாக்டர். ராம்சூரத் போன்றோரை உருவாக்கினார்கள். பங்காரில் ஆலயம் கட்டப்பட்டு, திரு. ஜாண் ஸ்டீபன், திரு. ஓம் பிரகாஷ் மற்றும் திரு. பும்சோன்சின் போன்ற ஊழியர்கள் மூலம் பஸ்தியிலிருந்து பூபாத் ஜோத் வரை ஊழியம் விரிவடைந்தது. 2023 முதல் TAFTEE வேதாகம பயிற்சிகள் மூலம் தெரிந்துகொள்ளப்பட்ட முதியோர் மற்றும் வாலிபர்களை இரண்டாம் கட்ட தலைவர்களாக உருவாக்கி வருகிறோம். ஓய்வுப் பெற்ற சுதேச ஊழியர் திரு. புலைராம் மற்றும் நமது ஊழியர் அருட்திரு பீட்டர் ஹரிராம் நமக்கு ஊழியத்தில் உறுதுணையாக இருக்கின்றனர். விசுவாசிகள் ஊழியத்தில் ஈடுபடுவதோடு, பிறருக்கு உதவுதல், ஆலய மேம்பாட்டிற்கு கொடுத்தல் போன்றவற்றை கடைப்பிடிக்கின்றனர். ஊழிய வளர்ச்சிக்கு விசுவாசிகளின் ஊக்கமான ஜெபங்கள் மற்றும் ஆன்லைன் ஜெபங்கள் முதுகெலும்பாக இருந்து வருகிறது.

## துதிக்க:

- மார்ச் 2023ஆம் ஆண்டிலிருந்து உ.பி. மாநிலத்தில் ஊழியம் செய்யும் நாங்கள் இணைந்து ஜெபிக்க இயலாத சூழ்நிலை இருந்தபோதிலும், சில மாதங்களுக்கு முன் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் கூடி இரண்டு நாட்கள் உபவாசித்து ஜெபிக்கவும், திட்டமிடவும் தேவன் உதவி செய்தார்.

- குறியார் ஆராதனை குழு மற்றும் பாடேபான் ஆலயத்தில் தேசத்தின் சமாதானத்திற்காக ஜெபித்தனர்.
- படியப்பர் கிராமத்தைச் சேர்ந்த அங்கீதா மற்றும் டெய்சாடு கிராமத்தைச் சேர்ந்த ரேகா பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றனர்.
- குறியார் கிராமத்தைச் சேர்ந்த அர்ஜுனின் சரீரத்தில் சர்க்கரை அளவு 650க்கு சென்ற போது ஜெபம் மற்றும் மருத்துவ உதவியால் சுகம் பெற்றார்.

## ஜெபிக்க:

- பஸ்தி பணித்தளம் தன்னிறைவு பெற்ற மாதிரி பணித்தளமாக மாற...
- விசுவாசிகள் தொடர்ந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வாழவும், சுவிசேஷ ஊழியம் வட இந்தியாவில் பெரிய தாக்கத்தை உருவாக்கவும்...
- பேல்பாரியாவைச் சேர்ந்த பிரமிளா காச நோயிலிருந்து சுகம்பெற...
- சரிதாவின் கணவர் சாம்புநாத் குடியிலிருந்து விடுதலை பெற...
- TAFTEE பயிற்சி சிறப்பாக நடைபெற...

**அருள்திரு. மோங்வாய்போம்.**

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI - A/c No. 602701216912** - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI - A/c No. 10402752621** - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank - A/c No. 406157474** - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# ஆலயப் பிரதிஷ்டை

கர்த்தரின் பெரிதான கிருபையால் 11.03.2025 அன்று ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஆலயம் கட்ட உதவி செய்த ஏழு பேரும் குஜராத் மாநிலம் பெயிண்ட் பணித்தளத்திலுள்ள வாங்கன்பாடா கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புதிய ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய சென்றிருந்தோம். 13-15 ஆகிய தேதிகளில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள ஆலயங்களை பார்வையிடவும், அங்குள்ள விசுவாசிகள் மற்றும் ஊழியர்களோடு சேர்ந்து ஜெபிக்கவும், விசுவாசிகளை உற்சாகப்படுத்தவும் கிருபை செய்த தேவனைத் துதிக்கிறோம். தரைமட்டமாக இடிக்கப்பட்ட கோர்பாடா ஆலயத்தைப் பார்வையிட்டு ஜெபித்தோம். அங்குள்ள விசுவாசிகள் பழைய ஆலயத்தின் அருகே ஒரு தற்காலிக கூடாரம் அமைத்து தேவனை ஆராதித்து வருகிறார்கள். 1998ஆம் ஆண்டு கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாக இடிக்கப்பட்டு மீண்டும் 2010இல் கட்டப்பட்ட ஆலயத்தையும் பார்வையிட்டு, அங்குள்ள விசுவாசிகளின் சாட்சிகளை கேட்டு தேவனைத் துதித்தோம். அதன்பின் சரஸ்மால் மற்றும் பெயிண்ட் பணித்தளத்திலுள்ள நமது விடுதிகளையும், அங்குள்ள பிள்ளைகளையும் கண்டு மகிழ்ச்சியடைந்தோம்.

16ஆம் தேதி ஞாயிறு அன்று பெயிண்ட் பணித்தளத்தில் கட்டப்பட்ட 121வது ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். இப்புதிய ஆலயத்தை கட்டி கொடுக்க முன்வந்த FMPB நெல்லை பிராந்திய அங்கத்தினர்களான திருமதி. சில்வியா, திருமதி. ஜானகி ஆசீர்வாதம், திரு. செல்லதுரை, திரு. ஜேக்கப் ரவிதேவ் மற்றும் திரு. மில்டன் முத்துராஜ் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். 500க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துகொண்ட இப்பிரதிஷ்டை ஆராதனையில் விசுவாசிகளின் கலாச்சார நடனங்கள், சாட்சிகள், பாடல்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களின் அறிமுகம் நேர்த்தியாக இருந்தது. ஆராதனையில் திரு. எஸ். ஜேம்ஸ் தர்மபாலன் தேவ செய்தியை பகிர்ந்துகொண்டார். அநேகர் தங்கள் வாழ்வை மறு பிரதிஷ்டை செய்தார்கள். 19.03.2025 அன்று நாங்கள் சுகத்தோடும், இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டுமென்ற பாரத்தோடும் எங்கள் இல்லங்களுக்கு வந்து சேர்ந்தோம். தேவனுக்கே எல்லா மேன்மையும், மகிமையும் உண்டாவதாக!

**விரிவுப்பணி** – நெல்லை பிராந்தியம்

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



மதுரை, முன்னேற்றப்பணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஐசக் எடிசன் அவர்கள், நமது இயக்கத்திற்குக் கிடைத்த மாபெரும் சொத்து என்று சொன்னால் அது மிகையாகாது. ஏறக்குறைய 30 ஆண்டுகளாக நமது ஊழியங்களில் ஜெபக்குழுத் தலைவராக, குழந்தை ஆதரவாளராக, மிஷனெரி ஆதரவாளராக, பணித்தள தேவைகளுக்கு உதாரத்துவமாக கொடுக்கும் சிறந்த தலைவராக செயல்பட்டவர். குடும்பத்தில், பணி இடங்களில், வசிக்கும் இடங்களில், ஊழியத்தில் என எவ்விடத்திலும் நற்சாட்சி பெற்றவர். பொறுப்புகளில் உண்மையோடும் உற்சாகத்தோடும் உதவி செய்து வந்தார். உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். அவரின் குடும்ப வாழ்வும் அநேக தம்பதியினருக்கு சிறந்த எடுத்துக்காட்டு. தனது ஓட்டத்தை வெற்றியாய் முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொண்ட திரு. ஐசக் எடிசன் அண்ணன் அவர்கள் 12.03.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அண்ணனின் வாழ்விற்காக தேவனைத் துதிப்போம். அண்ணனின் அன்பு மனைவி திருமதி. சில்வியா, பிள்ளைகள் விஜய், வினோஜ், ஜெனி ஆகியோரின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

முன்னேற்றப்பணி செயலர், மதுரை



திரு. விக்டர் மோசஸ் அண்ணன் அவர்கள் தஞ்சாவூர், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பல ஆண்டுகளாக (அவர் சரீரம் பெலவீனப்படும்வரை) ஸ்கேன் தலைவராக செயல்பட்டு, ஸ்கேன் உண்டியல்களை கிரமமமாக சேகரித்து அனுப்பியவர். தஞ்சாவூரில் நடைபெறும் அனைத்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு கூடுகைகளிலும் முன்னின்று செயல்பட்டவர். அண்ணன் தனது 89வது வயதில் 09.05.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர் விட்டுசென்ற தேவ ஊழியத்தை தற்போது அவருடைய மகன் கிங்ஸ்லியும், மகள் சர்மிளாவும் ஜெபக்குழு தலைவர்களாக நிறைவேற்றி வருகின்றனர். அன்னாரை இழந்திருக்கின்ற அவரது துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரபிள்ளைகள் அனைவருக்கும் கர்த்தர்தாமே ஆறுதலையும, சமாதானத்தையும் கட்டளையிட ஜெபிப்போம்.

தஞ்சாவூர் விரிவுப் பணி



கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் ஜெபக்குழு தலைவர் திரு. ஜேம்ஸ் ஆனந்தராஜ் அவர்கள் 25.05.2025 அன்று தனது 76வது வயதில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். மிஷனெரி ஊழியங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். தன் குடும்பத்தின் சார்பில் மிஷனெரி மற்றும் சிறுவர்களை தாங்கி வந்தார். மாதத்தின் முதல் நாளில் காலை 6 மணிக்கு ஜெபக்குழுத் தலைவரின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டி, தனது காணிக்கையை கொடுக்கும் பழக்கம் உள்ளவர். அன்னாரை இழந்து வாடும் மனைவி மற்றும் மகன் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

திரு. இம்மானுவேல் சைமன், கடலூர் பணி மாவட்டம்



# மிஷனெரிப் பிரதிஷ்டை

25.05.2025 அன்று தேவனுடைய பெரிதான கிருபையால் புது டெல்லியிலுள்ள கதீட்ரல் சர்ச் ஆஃப் ரிடம்சனின் (Cathedral church of Redemption) தமிழ் ஆராதனையில் நமது மிஷனெரிகள் 10 பேர் டெல்லி சி.என்.ஐ. திருமண்டலத்தின் பேராயரும், முன்னாள் துணைத் தலைவருமான அருட்திரு. பால் ஸ்வருப் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். பிரதிஷ்டையின் முந்தைய நாள் மாலையில் நமது இயக்கத்தின் ஆதரவாளர்கள் கூடுகையும், பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீரிலிருந்து வந்த நமது மிஷனெரிகளின் கலாச்சார நிகழ்ச்சியும் டெல்லி ஃபெய்த் கதீட்ரல் சர்ச்சில் (ECI) நடைபெற்றது. இதில் சுமார் 120 பேர் கலந்துகொண்டனர். இ.சி.ஐ.யின் பேராயர் அருள்திரு. எட்வின் ஜான் வெஸ்லி அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். டிவிஷனல் செயலர் அருள்திரு. இராபின்சன் பிரதிஷ்டை செய்யப்பட்ட 10 மிஷனெரிகளையும் அறிமுகப்படுத்தினார். பஞ்சாபில் பணிசெய்யும் மிஷனெரி ராஜேந்திரன் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் பணி செய்யும் மிஷனெரி ராஜன் ஆகியோர் தங்கள் பணித்தள அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். அதன்பின் ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது. பின்னர் மிஷனெரி ஜான்சி ராபின்சன் ஊழியத்தின் எதிர்கால தரிசனத்தைப் பற்றி பகிர்ந்துகொண்டார்கள். இப் பிரதிஷ்டை ஆராதனை டெல்லியிலுள்ள இ.சி.ஐ. ஆலய உறுப்பினர்களுக்கும், நமது ஆதரவாளர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. தேவனுக்கே மகிமை!

திரு. டி. சாம்ராஜ், விரிவுப் பணி செயலர் – டெல்லி, NCR

# மிஷனெரிப் பிரதிஷ்டை



நமது மிஷனெரி திரு. சைலென் ஹன்ஸ்தா அவர்கள் மார்ச் மாதம் 9ஆம் தேதி அன்று நெய்வேலி அலசி ஆலயத்தில் வைத்து அருள்திரு. பெஞ்சமின் சுதாகர் மற்றும் அருள்திரு. ஜெயசேகர் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இம்மிஷனெரியை டாக்டர். ஹெப்சிபா பிரியதர்சினி அவர்கள் குடும்பமாக ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி வருகின்றனர். தேவ செய்தியை அருள்திரு. ஜெயசேகர் அவர்கள் பகிர்ந்து கொண்டு, தொடர்ந்து நடந்த உபவாச ஜெபத்திலும் தேசத்தின் கரிசனைகளை பகிர்ந்து கொண்டார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக

**திரு. ஜெம்ஸ்டன்** – நெய்வேலி

## விற்பனை விழா 2025 - சேலம்

### பணித்தள ஊழிய சார்பு தேவைகளை சந்திக்க

இடம்: C.S.I. இம்மானுவேல் ஆலய சமுதாய கூடம்,
அஸதம்பட்டி, சேலம் – 7

நாள்: 2025 ஜுலை 13, ஞாயிற்றுக் கிழமை, காலை 10.30 மணி

*விற்பனைப் பொருட்கள்: இனிப்பு, காரம், குளிர் பானங்கள், பொறித்த சிக்கன் & மீன், மட்டன் பிரியாணி மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள்.*

### கோவை மாவட்ட வியாபாரிகள் நடத்தும்

## ஸ்கேன் குடும்பக் கூடுகை - 2025

இடம்: C.S.I. கிறிஸ்துநாதர் ஆலயம், திருச்சி ரோடு, கோவை
நாள்: 13.07.2025 காலை 11 மணி துவங்கி மாலை 4 மணி வரை

செய்தியாளர்:
சகோ. G.P.S. **ராபின்சன்** (இயேசு சந்திக்கிறார் ஊழியங்கள், சென்னை)
தொடர்புக்கு: **திரு.** J.P. **ஜேக்கப்** (7904326930),
Rev. P. **டேவிட்** (8275307049)

### மதுரை – தொழில் முனைவோர் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கான

## ஸ்கேன் குடும்பக் கூடுகை - 2025

இடம்: லேடி டோக் கல்லூரி, G. J. ஆடிட்டோரியம், நரிமேடு, மதுரை
நாள்: 13.07.2025 ஞாயிறு மாலை 5.30 மணி
செய்தியாளர்: **Rev. விஜய் P. ஐசக்**, G.S., FMPB.
பணித்தள பகிர்வு: **Rev. சுதாகரன்**, ஜார்கண்ட்
சிறுவர்களுக்கு: **சகோ. இளையராஜா** குழுவினரின் சிறப்பு நிகழ்ச்சிகள்
தொடர்புக்கு: **திரு. A. பிரின்ஸ்ராஜ்** (9843356028),
**Rev. R. ஐசக் தனசிங்** (944463401)

## தூத்துக்குடி தெற்கு மண்டலம் வாலிபர் கூடுகை

இடம்: நாசரேத்
நாள்: 02.08.2025 சனிக் கிழமை காலை 9.30 மணி துவங்கி 4.30 மணி வரை

செய்தியாளர்: **Dr. ஜெயராணி ஆண்ட்ரூ** (Bible Calls, Chennai)
**Rev. G. கிங்ஸ்லி**, FMPB

# ரெட் கார்னேஷன்



மருத்துவர்கள், சுகாதார அமைப்பின் முதுகெலும்பாக உள்ளனர். மற்றவர்களைக் காப்பாற்ற தங்களை இப்பணிக்கு அர்ப்பணித்துள்ளனர். மருத்துவர்களின் தியாகம், அயராத முயற்சி, ஆழ்ந்த இரக்கம், உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு தன்னலமின்றி சேவை செய்யும் தொழில் முறை நிபுணத்துவத்தை கௌரவிக்கும் வண்ணமாக ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 1ஆம் தேதி அன்று தேசிய மருத்துவர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது. தனிநபர் மற்றும் சமூகத்தின் ஆரோக்கியத்திற்காகவும், நல் வாழ்வுக்காகவும் அயராது பணியாற்றும் மருத்துவர்களின் சேவையைப் பாராட்டவும், மதிக்கவும், அங்கீகரிக்கவும் இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது. மருத்துவர்கள் செய்யும் மகத்தான தியாகங்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரமிது.

நீண்ட நேரம் வேலை செய்வது மற்றும் நோயாளிகளுக்குச் சிறந்த பராமரிப்பை வழங்குவதில் ஏற்படும் எதிர்பாராத சவால்களை எதிர்கொள்வதால் பெரும்பாலான மருத்துவர்கள் மிகுந்த அழுத்தத்தின் கீழ் தள்ளப்படுகிறார்கள். ஒரு மருத்துவரின் பயணம், நள்ளிரவு அவசர அழைப்புகள் முதல் அறுவை சிகிச்சை அறையில் வெற்றிகரமான தருணங்கள் வரை அவரின் மன உறுதி, பரிவு மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் உறுதிசெய்யப்படுகிறது.

**2025ஆம் ஆண்டு தேசிய மருத்துவர்கள் தினத்தன்று,** நோயாளிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அர்ப்பணித்துள்ள மருத்துவ நிபுணர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு பாக்கியமாக கருதுகிறது. உடல் நலனில் மட்டுமல்ல, ஆவிக்குரிய ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டுள்ள நமது விசுவாசிகள் மற்றும் மிஷனெரிகளை நாம் கௌரவிக்க வேண்டும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மருத்துவர்கள் மருத்துவமனையிலும் மற்றும் மருத்துவ முகாம்கள் மூலமாகவும் நோயாளிகளின் பிரச்சனைகளை கண்டறிந்து, அவர்களுக்கு மிகுந்த கரிசனையுடன்

சிகிச்சை அளித்து, அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பும், புதுமை யான பங்களிப்புகளும் நமது இயக்கத்திலும், நாடு முழுவதிலும் உள்ள எண்ணற்ற தனிநபர்களுக்கு நம்பிக்கையைத் தொடர்ந்து கொண்டு வருகின்றன.

**ரெட் கார்னேஷன்:** அர்ப்பணிப்பு, அன்பு மற்றும் தியாகத்தையும், நடமாடும் மருத்துவர்களின் உன்னத சேவையையும் ரெட் கார்னேஷன் குறிக்கிறது. 2025ஆம் ஆண்டிற்கான தேசிய மருத்துவர் தினத்தின் கருப்பொருள் "**முகமூடிக்குப் பின்னால் பராமரிப்பாளர்களுக்கான அக்கறை**". மருத்துவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதை மட்டுமின்றி நோய்கள் வராமல் தடுப்பதற்கான விழிப்புணர்வையும், உணர்வுப்பூர்வ மான ஆதரவையும் மற்றும் சுகாதாரக் கல்வியையும் வழங்குகின்றனர். மருத்துவமனைகள், கிளினிக், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற நலன்களிலும் மருத்துவர்களின் பணி மக்கள் மத்தியில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## மருத்துவர்களின் முக்கியத் தன்மைகள்

- **முதலுதவி வழங்குபவர்கள்:** நோய் தடுப்பு மற்றும் பொதுவான சுகாதாரப் பரிசோதனை வழங்குதல்.
- **அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் நிபுணர்கள்:** உயிர் காக்கும் நடைமுறைகளைச் செய்தல்.
- **மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்:** அறிவியலை முன்னேற்றுதல் மற்றும் புதுமையான சிகிச்சைகளை உருவாக்குதல்.
- **அவசரகால உதவியாளர்:** முக்கியமான சூழ்நிலைகளில் விரைவாகச் செயல்படுதல்
- **மனநல மற்றும் உணர்வுபூர்வமான ஆதரவு:** நோயாளிகளின் உணர்ச்சி மற்றும் உளவியல் சவால்களைச் சமாளிக்க உதவுதல்.

## மருத்துவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

மருத்துவத்துறையில் சேவைச் செய்ய அர்ப்பணித்து வரும் மருத்துவர்கள் பல சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

- **அதிகமான வேலை நேரம்:** நீண்ட நேரம் வேலை, வேலை நேர மாற்றங்கள், குறைந்தபட்ச ஓய்வு
- **உடல் மற்றும் மன அழுத்தம்:** வாழ்வு மற்றும் மரணங்களை தொடர்ந்து சந்தித்து வரும் நிலை.
- **வரையறுக்கப்பட்ட பணி இடங்கள்:** குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் பணி ஒதுக்கீடு.
- **சட்டம் மற்றும் நெறிமுறை அழுத்தம்:** சிக்கலான எதிர்பார்ப்புகளையும், பொறுப்புகளையும் கடந்து செல்வது.

## ஜெபிப்போம்

- மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு தேவையான ஞானம், நடைமுறை திறன்கள் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை தேவன் அருள.

- மருத்துவர்கள் அனைவருக்கும் தேவன் சரீர சுகம், சமாதானம் தந்து, ஆவிக்குரிய வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட.
- மருத்துவர்கள், நோயாளிகளின் பிரச்சனைகளை அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்க.
- ஏழை மற்றும் ஒதுக்கப் பட்டவர்களிடம் மென்மையாக, இரக்கத்துடன் மருத்துவர்கள் நடந்துக்கொள்ள.
- மருத்துவர்களின் குடும்பங்களில் தேவன் நல்ல ஆரோக்கியம், சமாதானம், மகிழ்ச்சியை நிறைவாய் அருள.
- கொள்ளை நோய்களிலிருந்து மருத்துவர்கள் பாதுகாக்கப்பட.
- மன அழுத்தத்தில் பணி செய்யும் மருத்துவர்களுக்கு தேவன் இரக்கம் பாராட்ட.
- நமது பணித்தளத்தில் பணியாற்றத் தேவையான மருத்துவ மிஷனெரிகள் எழுப்பப்பட.
- ஜார்கண்ட்டில் உள்ள நமது மருத்துவமனைக்கு தேவையான குழந்தை மருத்துவர், மயக்க மருந்து நிபுணர், மருந்தக பணிக்கு அர்ப்பணமுள்ள ஊழியர்கள் ஆகியோர் தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

*தொகுப்பாளர்:*
**திருமதி. மெர்சி செல்வின்,**
செயலர் - தொடர்புத் துறை



# ஆலயப் பிரதிஷ்டை

கர்த்தரின் பெரிதான கிருபையால் மதுரையைச் சேர்ந்த டாக்டர். பிலிப் சாமுவேல் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த 8 பேர் கொண்ட குழு 28.05.2025 அன்று ஒடிசா மாநிலத்தின் கியோஞ்சஹர் மாவட்டத்தி லுள்ள ரிமுலி பணித்தளத்தில் அமைந்துள்ள ஜமுதி கிராத்திற்கு விஜயம் செய்து, அக்குடும்பத்தினர் சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தை பிராந்திய தலைவர்கள் முன்னிலையில் ஹோ இன மக்கள் தேவனை ஆராதிக்கும்படி மங்கலப்படைப்பு செய்து வர தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**விரிவுப்பணி செயலர்,**
மதுரை

## இந்திய மெத்தடிஸ்ட் திருச்சபையின் புதிய பேராயர்களுக்கு

# மனமார்ந்த வாழ்த்துக்கள்

ஏப்ரல் 25, 2025 முதல் மே 3, 2025 வரை மும்பையில் நடைபெற்ற இந்திய மெத்தடிஸ்ட் திருச்சபையின் 10வது பொது மாநாட்டில் புதிதாக நான்கு பேராயர்களை தேர்ந்தெடுத்துள்ளனர்.



### பேராயர் முனைவர் நியூட்டன் பர்மர்

குஜராத்திலுள்ள ஒரு போதகர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்திய மெத்தடிஸ்ட் திருச்சபையில் குஜராத் பிராந்திய மாநாட்டின் உறுப்பினராக இருந்தவர். 35 ஆண்டுகளுக்கும் மேலாக போதக மற்றும் நிர்வாகப் பணியுடன் இந்திய மெத்தடிஸ்ட் திருச்சபையின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார். தற்போது டெல்லி மற்றும் ஆக்ரா எபிஸ்கோபல் மாநாட்டிற்கு பேராயராக நியமிக்கப்பட்டுள்ளார்.



### பேராயர் முனைவர் செல்வின் செல்லம்

மும்பை பிராந்திய மாநாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக போதக மற்றும் நிர்வாகப் பணியாற்றி வந்துள்ளார். தமிழ் நாட்டின் கன்னியாகுமரியில் உள்ள ஒரு பக்தியுள்ள குடும்பத்தைச் சேர்ந்த இவர், இந்திய மெத்தடிஸ்ட் திருச்சபையின் தமிழகத்தைச் சேர்ந்த முதல் மூத்தப் பேராயர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வங்காளம் மற்றும் லக்னோ எபிஸ்கோபல் மாநாட்டிற்கு பேராயராக நியமிக்கப்பட்டுள்ளார்.



### பேராயர் ஏ. சிமியோன்

40 ஆண்டுகளுக்கும் மேலாக போதக மற்றும் நிர்வாக அனுபவத்துடன் பெங்களூர் பிராந்திய மாநாட்டின் உறுப்பினராக உள்ளார். இவர் ராய்ச்சூரில் உள்ள ஒரு பக்தியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். தற்போது மத்தியப் பிரதேசம், மற்றும் ஹைதராபாத் எபிஸ்கோபல் மாநாட்டிற்கு பேராயராக நியமிக்கப்பட்டுள்ளார்.



### பேராயர் சி.ஜி. தயானந்த்

ஹைதராபாத் பிராந்திய மாநாட்டைச் சேர்ந்தவர். மாவட்ட கண்காணிப்பாளர், நிர்வாகச் செயலாளர் மற்றும் ஊழியக் குழுவின் தலைவர் போன்ற பொறுப்புகளில் பணியாற்றி 35 ஆண்டுகள் போதக மற்றும் நிர்வாக ஊழியம் செய்தவர். தற்போது சென்னை மற்றும் பரேலி எபிஸ்கோபல் மாநாட்டிற்கு பேராயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**அருள்திரு. ராபின்சன் ஹஸ்தக்,** துறை செயலர் – வட இந்திய விரிவுப்பணி

**1** **ஜூலை**
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அலியாக்கிம் ஜெனா
திரு. ஹரமோகன் பிரபு தாஸ்
திரு. ஜூபராஜ் பர்தன், திரு. ஹென்றி K.
திருமதி. தீபிகா அலியாக்கிம்
திரு. சஞ்சய் குமார் பீரோ, திருமதி. ஊர்பசி டிகல்
திருமதி. பிரின்சஸ் ரோஸிட்டா லக்ஷ்மணன்
திரு. தினேஷ் குமார், திரு. அருண் காந்தா
திருமதி. ஜோதி நிர்மலா புஷ்பராஜ்
திரு. மனோஜ் குமார் பானி
திருமதி. ஜகதீஸ்வரி பாலாஜி

## ஜம்மு

### நௌஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** நௌஷேரா பணித்தளத்தில் ஒருவார காலமாக ஏவுகனைத் தாக்குதல் இருந்தபோதிலும் தேவன் அற்புதமாக விசுவாசிகள் அனைவரையும் ஆபத்திலிருந்து பாதுகாத்தார். இரவு நேர காவல் துறை பணியில் ஈடுபட்டிருந்த பிங்கி தேவியின் கணவர் பாகிஸ்தானின் புல்லட் தாக்குதலில் அற்புதமாக பாதுகாக்கப்பட்டார். தீவிர எதிர்ப்பு நிறைந்த கன்யா கிராமத்தில் தேவன் ஒரு புதிய தொடர்பாளரை தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த நாட்களில் யுத்தம் ஏற்பட்டதினிமித்தம் புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிப்பது சவாலாக உள்ளது. தேவன் திறந்த வாசலைத் தந்தருள; சினையுற்றிருந்த பிங்கி தேவியின் மாடு இறந்துபோனதால் விசுவாசத்தில் சோர்ந்துபோயிருக்கும் அவரை தேவன் பெலப்படுத்த; கலாராம், பிரதீப், குஷி ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; பால்யானா கிராமத்தைச் சேர்ந்த முகேஷ் குமாரை குடி மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து தேவன் முழுமையாக விடுவிக்க; நௌஷேரா பணித்தளத்தில் காணப்படும் குருவணக்கம், விக்கிரக ஆராதனை, குல் தேவ்தா மற்றும் மூடப்பழக்கங்கள் முற்றிலும் மறைய; குடிப்பழக்கத்தினால் மனைவியை அடித்து துன்புறுத்தும் அனுராதாவின் கணவர் சோனுவை தேவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கவும், குடும்பத்தில் சமாதானம் அருளவும் ஜெபிப்போம்.

### ரியாசி: அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** யுத்த நாட்களில் ஜம்மு காஷ்மீரில் சூழ்நிலை மோசமாக இருந்தபோதிலும் தேவன் ஊழியர்களையும், விசுவாசிகளையும் அற்புதமாக பாதுகாத்தார். பூனி, அர்னாஸ், கெரல், திரிந்தா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மலாத் கிராமத்தினர் மற்றும் தாலாவாரா கிராமத்தில் வாழும் குஜ்ஜர் இன மக்கள் ஆண்டவரை அதிகமாய் அறிந்துகொள்ள வாஞ்சைக்காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மார்பு புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்றுவரும் மிஷனெரியின் தாயார் திருமதி. எஸ்தரையும், ஒற்றைத் தலைவலி, தைராய்டு மற்றும் முதுகுதண்டுவட பிரச்சினையிலிருந்து மிஷனெரியின் மனைவி மன்பிரீத் கௌரையும் தேவன் பூரணமாய் குணப்படுத்த; ரியாசி மாவட்டத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; தேவனை அறிய வாஞ்சைக்காட்டும் சக்திதேவியின் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட; யுத்தத்தினால் தங்கள் வீடுகளையும், குடும்பத்தினரையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு தேவன் ஆறுதலை அருளவும், அரசாங்கத்தின் மூலம் கிடைக்க வேண்டிய இழப்பீடுகள் விரைவில் கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 2 ஜூலை

புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பிரபா கமலி காட்வின்
திருமதி. வசாவா ஹன்சா தாமஸ்பாய்
திருமதி. ஜரானா பரிச்சா பிபின்

### உதம்பூர்:

**அருண்காந்தா & ரேணு காந்தா**

**துதிக்க:** சத்சங் கூடுகை மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்பை தேவன் தந்தருளினார். அசுத்தாவியினால் அலைக்கழிக்கப்பட்டு வந்த பால்பில் குமாருக்கு தேவன் விடுதலை அருளினதால் அவரது குடும்பம் ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். ஜோகிந்தர் சிங் மற்றும் விதுத்குமார் குடும்பத்தினரை புதிய தொடர்பாளர்களாக தேவன் தந்துள்ளார். சோமே ராஜ்குமாரின் ஆறு மாத குழந்தை ஆபத்தான நிலையிலிருந்தபோது ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்திரத்தினாலும், அசுத்தாவியினாலும் தாக்கப்பட்டுள்ள சர்வாத் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சய் சிங் மற்றும் டனோரி கிராமத்தைச் சேர்ந்த பன்சுதேவிக்கு தேவன் விடுதலை அருள; இருளின் ஆதிக்கத்திலுள்ள மக்கள் தேவனின் மெய்யான ஒளியை கண்டுக்கொள்ள; அநேக புதிய கிராமங்களில் நற்செய்திக்கான திறந்த வாசலை தேவன் கட்டளையிடவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

**துதிக்க:** தாவன் என்பவர் நகரான் ஆலய ஆராதனையை பொறுப்பேற்று உற்சாகத்துடன் நடத்தி வருகிறார். இரண்டு வருட பின்மாற்றத்திற்குப்பின் லோகேஷ் என்ற விசுவாசி மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். கிருஷ்ணா மற்றும் ராதா வேதம் வாசிப்பதிலும், ஆலய ஆராதனையிலும் உற்சாகத்துடன் கலந்துகொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ வாலிபர்கள் சமுதாயத்தில் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதற்கு தேவன் உதவி செய்ய; கிங்கல், நக்ரான் ஆகிய கிராமங்களில் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் உறுதியாய் நிலைத்திருக்க; சுயாதீன சபைகளின் மூலம் ஏற்படும் இடையூறுகள் நீங்க; அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் இப்பணித்தளத்திற்கு தந்தருள ஜெபிப்போம்.

## சர்வ வல்லவர்

*குஜராத் மாநிலம், சொரம்பா பணித்தளத்திலுள்ள கஸ்வா ஆலயத்தில் சுதேச ஊழியராக பணியாற்றும் கிரண் பாய் என்பவர் அதிக தலைவலியினிமித்தம் சூரத் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டப் பின் அவர் பேசும் திறனை இழந்ததோடு படுத்தப்படுக்கையானார். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் சபையார் அவருக்காக ஊக்கமாக ஜெபித்து வந்தனர். ஜெபத்திற்கு பதிலளித்த தேவன் அவருடைய வாழ்க்கையில் அற்புதத்தை நிகழ்த்தினார். தற்போது நன்றாக பேசுவதோடு, ஆலய ஆராதனையிலும் பங்கு பெற்று வருகிறார். அல்லேலூயா!*

## 3 ஜூலை
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கருணாகரன் K.
திருமதி. பிரின்சஸ் நகோமி விக்டர்

### ரிகாங்பியோ:
**சங்கர் ஏ. & ரூத் மேரி**

**துதிக்க:** பூஹ் பகுதியில் புதிதாக ஞாயிறு ஆராதனை துவங்கிட தேவன் கிருபை செய்தார். பள்ளியிலிருந்து திரும்பி வரும் வழியில் நமது விசுவாசியின் 6 வயது மகன் ரித்து தவறுதலாக 100 அடி பள்ளத்தில் விழுந்தபோதிலும் தேவன் அற்புதமாய் அவனது ஜீவனை பாதுகாத்தார். மூன்று பேர் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை உற்சாகத்தோடு அறிக்கை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனையில் பங்குபெறும் புதிய நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; பித்தப்பை வீக்கத்தினால் அவதியுறும் விசுவாசி சிங்காவை தேவன் குணப்படுத்த; குடிப்பழக்கத்தினால் விசுவாசத்தைவிட்டு தூரம்போயுள்ள பிரேம் மற்றும் பால் பஹதூர் மனந் திரும்பி ஆலயம் வர; 40 இலட்சம் கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் கஷ்டப்படும் அர்ஜுன் மற்றும் அவரது தாயாருக்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** நமது விசுவாசி ஷிருஷ்டியை பாம்பு கடியிலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ருஞ்சா தேவி தன் சுகவீனம் நீங்க, வெகு தூரத்திலுள்ள மருத்துவமனைக்கு செல்ல முடியாமையால் ஆண்டவரை நோக்கி ஜெபித்த போது தேவன் அற்புத சுகமருளினார். கடந்த மாத ஊழியத்தின் மூலம் ஆறு புதிய தொடர்பாளர்கள் கிடைக்க தேவன் கிருபை செய்தார். இரவு நேரத்தில் பயத்தில் அலறிக்கொண்டிருந்த சௌர்யா என்ற குழந்தைக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவன் அவளுக்கு பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை அருளினார். மிஷனெரி தௌஜபாவ் மற்றும் அவரது மகன் சாமுவேலை விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக்கொண்டவர்கள் விசுவாசத்தில் மேலும் வளர; கடந்த இரண்டு ஆண்டுகளாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சஞ்சய் குணமடைய; ஷெர்சிங் மற்றும் அஜய் நீரிழிவு நோயிலிருந்தும், சஷி வயிற்று புற்றுநோயிலிருந்தும் சுகம்பெற; விசுவாசி ஷியாம் சுந்தருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் வர்ஷா, சாந்தா ரிட்டா, லக்கி, பிரகாஷ், மீனா தாக்கூர், திவ்யா, பிரேம்லதா மற்றும் அவரது கணவர் டோபுராம், ஃபெட்டு தேவி, பிரிஷ்டி தேவி, துன்னி தேவி, பால்வந்த் மற்றும் அவரது குடும்பத்தினர் எவ்வித தடையுமின்றி தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## 4 ஜூலை
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லாட்சி டைல்ஸ் அருள்மணி
திரு. சத்ய பிரகாஷ்
திருமதி. அமோஜிதா பினித் பிரசாத்

### நேர்வா:
**எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா**

**துதிக்க:** கடந்த மாதம் நூற்றுக் கணக்கான மக்கள் நற்செய்தியைக் கேட்க தேவன் உதவி செய்தார். ஊழியத் திற்குத் தேவையான வாகனத்தை மிஷனெரிக்கு தேவன் தந்துள்ளார். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நேர்வா பணித்தளத்தில் ஊழியம் செய்ய தேவன் தந்த பாதுகாப்பிற்காக, கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பினால் ஆலய ஆராதனையில் பங்கு பெற தயங்கும் நேர்வா பணித்தள விசுவாசிகளுக்கு தேவன் தைரியத்தின் ஆவியைக் கட்டளையிட; அடல் கிராமத்தைச் சேர்ந்த அனில் மற்றும் பூட் கிராமத்தைச் சேர்ந்த மோகன்லால் குடும்பத்தினர் தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; பரானு, பங்கல் மற்றும் அதுல் பகுதியிலுள்ள சபைகளின் மறு மலர்ச்சி மற்றும் மறுசீரமைப்பிற்காக; மிஷனெரிகளை கிராமத்திற்குள் வரவிடாமல் தடுக்கும் மக்கள் மனந் திரும்பி இரட்சிக்கப்படவும், அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிடவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### புத்லாடா:
**பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** தஹ்லியா, தண்டோலி, தல்வாடி, மந்திர்பேடா மற்றும் ப்ளோட் பஸ்தி ஆகிய இடங்களில் சத்சங் கூட்டங்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். பிரோக் கலான் மற்றும் ஹரிகர் பஸ்தியில் இயேசு திரைப்பட ஊழியம் தடையின்றி நடத்த தேவன் உதவி செய்தார். கரேல், ஹரிகர் மற்றும் தஹ்லியா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மன்பிரீத் கௌருக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை கிடைத்தது. தன்னார்வ ஊழியர் சுதேஷ்ராணிக்கு சொந்தமாக நிலம் வாங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இதயநோயினால் கஷ்டப்படும் தன்னார்வ ஊழியர் ஜஷ்பல்சிங்கின் தாயாரை தேவன் பூரணமாய் குணப்படுத்த; பித்தப்பை வீக்கத்தினால் அவதியுறும் ஆராதனாவுக்கு தேவன் அற்புத சுகமருள; இரண்டு கால் களிலும் வலி ஏற்பட்டு நிற்கமுடியாமல் கஷ்டப்படும் சுதேச ஊழியர் ராம்சிங்கின் மனைவி கரம்ஜித் கௌருக்கும், அடிக்கடி அதிக தலைவலியினால் அவதியுறும் மிஷனெரியின் மனைவி ரேஷ்மிக்கும் தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## 5 ஜூலை
சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. புஷ்பாஞ்சலி துருபராஜ்
திருமதி. நீலா ஹஸ்தா முர்மு
திருமதி. மேடெங்கி ஸ்ரீனிவாச ராவ்
திருமதி. தேவி ராணி ஜெய்பீர் சிங்
திருமதி. சுபிலா வினு, திரு. சிவ்சங்கர்
திருமதி. கிரண் தேவி அகிலேஷ்
திருமதி. டிகுமார்தி பிரசாந்தி அனில்
திருமதி. பிரமிளா சிங் லிம்மா
செல்வி. ஹன்னா சிங்

### அம்ரித்சர்:

**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், அநேகர் நற்செய்தியைக் கேட்கவும் தேவன் கிருபை செய்தார். நிம்மா கௌர் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த நமது சபை மூப்பர் போஹர்சிங்கிற்கு தேவன் சுகமருளினார். பள்ளிக்குச் செல்லும்போது மின்னல் தாக்கிய நமது விசுவாசியின் மகளை தேவன் அற்புதமாய் பாதுகாத்து புது ஜீவனை அருளினார். இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாக உள்ள அரோமா, நீது, நிஷ், பூஜா, டேனிஷ் ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநலம் பாதிக்கப்பட்டுள்ள புதிய விசுவாசி ராஜிந்தருக்கு தேவன் அற்புத சுகமருள; கடன் பிரச்சனையில் சிக்குண்டு தவிக்கும் நமது விசுவாசி அரோமா குடும்பத்தினர் மற்றும் புதிய தொடர்பாளருக்காக; விசுவாசத்திலிருந்து பின்வாங்கியுள்ள லவ்லி, ஆஷிஷ், பிந்து, தோமா மற்றும் ராணி மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஆராதனை நடத்த ஏதுவான இடத்தை காசா கிராமத்தில் தேவன் உருவாக்கித்தர; மதுப்பழக்கத்திலிருந்து போலா சிங் மற்றும் ரோஜன் சிங் விடுதலைப்பெற; காசா, பால், கலன், காந்திநகர் மற்றும் சின்னா கிராமங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூடுகைகள் நல்ல பலனைத் தர ஜெபிப்போம்.

### மலோட்: ஸ்டீபன். ஆர் & சிவகாமி

**துதிக்க:** ஃபரித்கோட்டில் உள்ள தலைமைத்துவப் பயிற்சி மையத்தில் நடந்த கூடுகையில் 10 இளைஞர்கள் பங்குபெற்றனர். சிறுவர் கூடுகை, இளைஞர் கூடுகை மற்றும் பெண்கள் பயிற்சி கூடுகைகள் தடையின்றி நடத்த தேவன் உதவி செய்தார். வேலை நிமித்தம் புலம் பெயர்ந்து சென்ற நமது விசுவாசிகளை தேவன் ஆசீர்வதித்ததினால், அவர்கள் திருச்சபைக்கு மைக்ரோ ஃபோன்களை வாங்கித் தந்துள்ளனர். பாண்டி கிராமத்தில் தேவன் தந்த புதிய தொடர்பாளருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களில் மக்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; மஹிமா, பூர்ஜ், சேகா கலன், பாரு மற்றும் சாஹிப்சந்த் கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட; சந்தீப் மற்றும் ஜஸ்ப்ரீத் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; 5 இடங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்துகொண்ட சிறுவர்கள் வாழ்வில் தேவன் மாற்றத்தைத்தர; கோத்பாய் கிராமத்தைச் சேர்ந்த 33 மந்திரவாதிகள் தேவனின் அன்பினால் தொடப்பட; பாண்டி கிராமத்தில் விரைவில் ஜெபக்குழு ஒன்று துவங்கப்பட; கோத்பாய் கிராமத்திலுள்ள நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## 6 ஜூலை
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேபல் ஃப்ளாரன்ஸ் சாமுவேல்
திருமதி. டேக்காம் சங்கீதா சுனில் குமார்
திருமதி. சலோமி ஹன்ஸ்தா லுபின்

### பர்னாலா:

### பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்,

**துதிக்க:** இயேசு திரைப்பட ஊழியம், பெண்கள் மற்றும் சிறுவர் கூடுகைகள், வெளிப்புற சந்திப்பு ஊழியம், சத்சங் கூடுகை போன்றவை தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். 20 வயதான பஸ்தி தப்தி மண்டி ஜெபத்தின் மூலம் மனநோயிலிருந்து சுகம்பெற்றார். எலும்பு முறிவு மற்றும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த மோனா ரவி விசுவாசிகளின் ஜெபத்தினால் பூரணமாக குணமடைந்தார். பெற்றோரின் ஜெபத்தைக் கேட்ட தேவன் தனுலாவைச் சேர்ந்த பப்லு சிங்கிற்கு ஏற்ற வேலை கிடைக்க கிருபை செய்தபடியால் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுனிதா ராணி விரைவில் குணமடைய: அடிக்கடி நோயினால் பாதிக்கப்படும் ரேணுவின் மகள் ரச்னா பூரண சுகம்பெற; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் தடையின்றி அறிக்கையிட; தர்சீம், ரீது, சுமன், பேபி, அபிஷேக், கரண், சன்னி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; அடிக்கடி நோய்வாய்ப்படும் நமது மிஷனெரியின் 4 மாத மகனுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க ஜெபிப்போம்.

### மான்சா:

### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** புதிய கிராமங்களில் அநேகர் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டனர். பலாகி கிராமத்தைச் சேர்ந்த உகில்சிங் மற்றும் அவரது குடும்பத்தினர் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். அறுவை சிகிச்சை மூலம் பல்ஜித் சிங்கின் முதுகிலுள்ள கட்டி அகற்றப்பட்டுள்ளது. தன் வீட்டை விட்டு அதிக தூரத்தில் வேலை செய்து வந்த சில்பா கௌர் என்பவருக்கு மாரடைப்பு ஏற்பட்டபோது தேவன் அற்புதமாய் அவரை பாதுகாத்தார். இயேசு கிறிஸ்துவை புதிதாக ஏற்றுக்கொண்டவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரிங்கு சிங் குடியின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும், அவர் கிறிஸ்துவுக்குள் வளரவும்; விசுவாசிகளின் விவசாய நிலத்தில் தேவன் நல்ல அறுவடையைக் கட்டளையிட; புலம்பெயர்ந்து செல்லும் விசுவாசிகள் தேவனுடைய பார்வையில் தங்களை பரிசுத்தமாய் காத்துக்கொள்ள; நமது சுதேச ஊழியர் சத்பால் மஸியின் மகன் பஞ்சாப் காவல் துறையில் வேலையில் இணைய, நடைபெறும் தேர்வில் வெற்றிபெற ஜெபிப்போம்.

## 7 ஜூலை
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜேன் அமுதா இறைபிச்சை
திரு. சித்தரஞ்சன் டாண்டி, திரு. தீப்ரத்னா
திருமதி. தீபிகா ராணி பானி

# உத்தராகண்ட்

### கிச்சா: பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகள் தேவ கிருபையால் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். நீரிழிவு நோயினால் அவதியுற்ற வந்த தீபக்கின் மகள் ஜெபத்தினால் சுகம் பெற்றாள். காச நோய் தொற்றினால் துன்புற்று வந்த ஜஷ்விந்தரையும், பக்கவாதத்திலிருந்து சஞ்சுவையும் தேவன் குணப்படுத்தினார். சமுதாய எதிர்ப்புகள் மத்தியிலும் ஆராதனை நடத்த தனது இல்லத்தை திறந்து கொடுத்த அமன் குடும்பத்தினருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பினிமித்தம் விசுவாசிகளின் வீடுகளில் கூடி ஆராதிப்பது சவாலாக இருப்பதால் டோரேடம் பகுதியில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க; ஹொர்பல் சிங் மற்றும் அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; லக்விந்தர் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; விசுவாசிகள் வறுமையிலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுபட; நடேலி கிராமத்து மக்கள் இயேசு கிறிஸ்துவே உண்மையான தெய்வமென்று விசுவாசிக்க ஜெபிப்போம்.

### மல்தன்சோர்:
### ஷிஷூ பால் & அனிதா

**துதிக்க:** மூன்று கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்தில் அநேகர் இயேசு கிறிஸ்துவை குறித்து அறியும் வாய்ப்பைப் பெற்றனர். சந்தீப் & சும்மார் அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்டனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் ஜிவான் மற்றும் யோகேஷ்க்கு நல்ல வேலையை தந்தருளினார். அநேக நாட்களாக வாதநோயினால் கஷ்டப்பட்டு வந்த அஞ்சு மற்றும் அஞ்சலிக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிருமடரா கிராமத்தில் சத்சங் கூடுகைகள் தடையின்றி நடைபெற; பிரதாப்பூர் மற்றும் தாநவ்ரி கிராமங்களில் புதிய தொடர்பாளர்களை தேவன் தந்தருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து தீபோ, சுமித்ரோ, சுமான் ஆகியோரை தேவன் விடுவிக்க; அஜய், கீதா, பிரதாப் சிங், சூரஜ், ராஜ்குர், ஷார்தா, இந்தர்பல் ஆகியோர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

# ஹரியானா

### தோஷம்: அஜய் பர்டே & ஷைதுல்

**துதிக்க:** கடந்த மாதம் நடைபெற்ற பெண்கள் ஜெபக்குழு, சிறுவர் வகுப்புகள், சத்சங் கூடுகைகள் மற்றும் விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட குடும்பக் கூடுகையில் அநேக விசுவாசிகள் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். தேவாஸ் நகர் பகுதியைச் சேர்ந்த முகேஷ்க்கு ஏற்ற வேலை கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோஷம் கிராமத்தைச் சேர்ந்த முகேஷ் தீதியின் 18 வயது மகன் ரோஹித் மனந்திரும்பி பெற்றோருக்கு கீழ்படிந்து, தேவனுக்கு பயந்து வாழ; விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள; திருமணமான இரண்டு மாதங்களில் கணவரை விட்டு பிரிந்து சென்ற சன்னியின் மனைவி மீண்டும் கணவருடன் சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

## 8 ஜூலை
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பிரைட் ஜெயக்குமார் C.
திரு. பிதுஷ் குமார் நாயக்
திருமதி. பிரபாஷினி பவன் குமார்

### ஜீவன் நகர்:
**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** கும்ஹார், ராஜ்புத், நாயக், ராய்சீக்கியர், தானக் ஆகிய ஐந்து இன மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருகின்றனர். வால்மீகி இனத்தைச் சேர்ந்த மங்கத்ராம் என்பவரது ஆறுதல் ஜெபக் கூட்டத்தில் ஹரியானா, ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலிருந்து கலந்து கொண்ட அவரது உறவினர்களுக்கு நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபாவாலி பகுதியில் நடைபெறவிருக்கும் விசுவாசிகள், பெண்கள், சபை மூப்பர்கள் ஆகியோருக்கான பயிற்சியும், ஆத்தும ஆதாயப் பயிற்சியும் பயனுள்ளதாக நடைபெற; தேவனை விசுவாசிப்போர் அவரை அறிக்கையிட காணப்படும் தடைகள் நீங்க; வயிற்று தொற்றினால் அடிக்கடி சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சுக்தேவுக்கு தேவன் பூரண சுகமருள; மிஷனெரியின் மனைவி மற்றும் மகனது சுகவீனங்கள் மறைய ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### தபுக்காரா:
**டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** இரகசிய கிறிஸ்தவர்களான சுனிதா, நர்சிங் முடித்த தனது சகோதரி கவிதாவுக்கு அரசாங்க வேலை கிடைக்க விசுவாசத்துடன் ஜெபித்து வந்தார். ஜெபத்தைக் கேட்ட தேவன் எவ்வித நன்கொடையும் செலுத்தாமல் அரசாங்க வேலையில் சேர கிருபை செய்தார். புதிய தொடர்பாளர் மங்கள் என்பவரின் மகள் ரீத்திகா கடந்த ஓராண்டாக இரத்த வாந்தியினால் அவதிப்பட்டு வந்தார். பல வைத்தியங்கள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இயேசுவின் அற்புதங்களை கேள்விப்பட்டு விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தை அருளினார். விசுவாசி சோனியாவின் ஒரு வயது மகள் மம்தாவின் கையில் சூடான தேநீர் பட்டு மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண சுகமருளினார். சகோதரி ரேகா மற்றும் அனிதா குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். கடந்த மாதம் எதிர்பாராத வேளையில் சூறாவளிக் காற்று மற்றும் இடியுடன் கூடிய கனமழை பெய்து, வயல்கள், வீடுகள் மேலும் பலவித சேதங்கள் ஏற்பட்ட போதிலும் நமது விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் அற்புதமாய் பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பினால் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் விசுவாசிகளை தேவன் தைரியத்தின் ஆவியினால் பெலப்படுத்த, எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ஒவ்வொரு மாதமும் தொண்டை தொற்றினால் பாதிக்கப்படும் விசுவாசி குடியாவின் 7 வயது மகளுக்கு தேவன் பரிபூரண சுகமருள; நுரையீரல் மற்றும் பித்தப்பை வீக்கம், சிறுநீரகக்கல் போன்ற பிரச்சனைகளினால் மிகவும் கஷ்டப்படும் ஹன்ஸ்ராஜ் என்பவருக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## 9 ஜூலை

புதன்

*உபவாச ஜெபநாள்*

### ஹனுமான்கட்: முதவத்து ராஜூ நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** வேலை செய்யும் கம்பெனியில் இரவு நேரத்தில் ஏற்பட்ட தீ விபத்திலிருந்து நமது விசுவாசியை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். கடந்த ஒருமாத காலமாக சுகவீனமாக இருந்த அபிஷேக் ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்தார். நமது விசுவாசிகளில் எட்டு வாலிபர்களுக்கு ஒருவருட வேதாகம படிப்பை முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூளை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சுரேஷா கிராமத்தைச் சேர்ந்த புதிய தொடர்பாளரான பூஜாவை தேவன் குணப்படுத்த; அதிக கால் வலியினால் நடக்க இயலாமல் கஷ்டப்படும் ரிங்லால் சுகம்பெற; அதிக கடன் பிரச்சனையினால் மனநலம் பாதிக்கப்பட்டுள்ள ஜக்சேருக்கு தேவன் உதவி செய்ய; குடும்பப் பிரச்சினையின் நிமித்தம் விசுவாசத்தில் சோர்ந்து போயுள்ள கிரிசான்சிங்கை தேவன் பெலப்படுத்த; அரசு வேலைக்காக அநேக வருடங்களாக காத்திருந்தும் வேலை கிடைக்காததால் மனசோர்வுற்றிருக்கும் மதன்சிங்கிற்கு தேவன் இரக்கம் பாராட்ட; ஜார்ஜ் மசிஸ், அஜய், நிர்மல் ஆகியோருக்கு ஏற்ற வேலை வாய்ப்புகள் விரைவில் கிடைத்திட ஜெபிப்போம்.

### கங்காநகர்: பினோத் சம்பிரமரி & மிரிலா, போடார் அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து சந்தீப் குமாருக்கு தேவன் விடுதலை அருளினார். மீராபாயின் முழங்கால் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபை செய்தார். பாஜிந்தர் குடும்பப் பிரச்சனையில் தேவன் சமாதானம் அருளி அவர்கள் ஒப்புரவாக உதவி செய்தார். விசுவாசி குட்டீபாய் புது வீடு கட்டுவதற்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்க தேவன் அநேக திறந்த வாசல்களை கட்டளையிட; இரத்த தொற்றிலிருந்து சந்திபாய்க்கு தேவன் பூரண சுகமருள; தேவன் கிருபையாய் இரங்கி பல்ஜிந்தர் கௌருக்கு புத்திர சந்தானம் அருளிட; சுரேந்தர் மற்றும் ஹனுமான் குடும்பத்தினர் ஞாயிறு ஆராதனையில் தொடர்ந்து கலந்துகொள்ள; அதிகளவு சர்க்கரை நோயினால் அவதியுறும் நமது மிஷனெரி பினோத் சம்பிரமரிக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

### முதற்கனி

*ஜார்கண்ட் மாநிலம், படிட்டோலா பணித்தளத்தைச் சேர்ந்த நமது சுதேச ஊழியர் சாமுவேல் மராண்டியின் மகன் சுனில் மராண்டி. M.Sc., B.Ed. படிப்பை முடித்த இவருக்கு ராஜ்மஹால் ஜூனியர் கல்லூரியில் பேராசிரியராக வேலை கிடைத்தது. இவர் தனது முதல் மாத சம்பளத்தை (ரூ.70,000/-) படுவல் ஏனு மிடத்தில் நடைபெற்ற விசுவாசிகளின் மேளாவில் காணிக்கையாகப் படைத்தார். சுதேச ஊழியர் சாமுவேல் மராண்டியின் மகள் சுனிதா மராண்டி நமது இயக்கத்தில் முழுநேர மிஷனெரியாக இணைந்து, ஊழியப் பயிற்சி முடித்து தற்போது மத்தியப் பிரதேசத்தில் குடும்பமாக ஊழியம் செய்து வருகின்றார். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!*

## 10 ஜூலை
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேவிகா கிருபா குல்லு
திருமதி. பினிட்டா டொப்போ பவுலஸ்
திரு. மல்லா வித்யசாகர், திரு. ஜக்மோகன் சிங்

### உதய்பூர்:

**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** சபை மூப்பர் ரஞ்சித்தின் மகள் மற்றும் மகனது திருமணம் கிறிஸ்தவ முறைப்படி எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். சுதேச ஊழியர் மோகனின் மருமகளுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பகாராமுக்கு பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர் வகுப்பில் பங்குபெற்ற சிறுவர்கள் விசுவாசத்திலும், தேவனை அறிகிற அறிவிலும் வளர; எதிர்ப்பினி மித்தம் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கி யுள்ள திலவியவாடா மற்றும் பிரேகியபாடா ஆகிய பகுதியிலுள்ளோர் மீண்டும் தேவனண்டை திரும்ப; கருச்சிதைவை சந்தித்த லீலா மற்றும் சோனியாவுக்கு மீண்டும் தேவன் குழந்தை பாக்கியம் அருள; பால்சியா, ஓக்னா, கோகுண்டா தாலுக்காவில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்தருள; ராஜஸ்தானில் வசிக்கும் பீல் இன மக்கள் மத்தியில் தேவன் ஆவிக்குரிய எழுப்புதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### அஜீத்கார்:

**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** காணாமல் போன லலிதாவின் ஒன்பது வயது மகன் ஜெபத்தின் மூலம் மீண்டும் வீடு வந்த சேர தேவன் உதவி செய்தார். நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்ட ஹன்சாவுக்கு தேவன் ஜெபத்தின் மூலம் பூரண சுகமருளினார். புதிய கிராமம் ஒன்றில் தேவன் தந்த புதிய தொடர்பாளருக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடன் பிரச்சனையில் சிக்கித் தவிக்கும் நமது விசுவாசி சேத்ராமுக்கு நல்ல வேலையை தேவன் தந்தருள; அசுத்தாவியின் கட்டுகளினால் அவதிப்படும் பிரேம் என்ற சகோதரிக்கு தேவன் விடுதலையைக் கட்டளையிட; சிறுவர் வகுப்பில் கலந்துகொள்ளும் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

**ரணியா: அனில் குமார் & கவிதா**

**துதிக்க:** பராஜோர் ஆலயத்தில் நடத்தப் பட்ட பெண்கள் பயிற்சியில் சுமார் 45 பெண்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். நிரஞ்ஜன்பூர் கிராமத்தில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளியில் 35 சிறுவர்கள் பங்குபெற்று வேத வசனங்களை கற்றுக்கொண்டனர். அடிக்கடி மயங்கி கீழே விழுந்து, கை கால்களில் பிடிப்புகள் ஏற்படும் சோனு என்ற வாலிபப் பெண்ணுக்கு ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியினால் மனநலம் பாதிக்கப்பட்டுள்ள சங்கீதா விடுதலைபெற; சூரா மற்றும் கட்ரா கிராமங்களிலுள்ள நமது புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; நமது விசுவாசி களுக்கு இடையூறாக செயல்படும் சுயாதீன ஊழியர்களின் இருதயங்களில் தேவன் கிரியை செய்ய; தோல் நோயினால் அவதிப்படும் நமது மிஷனெரியின் மகளுக்கு தேவன் பூரண சுகம்தர ஜெபிப்போம்.

## 11 ஜூலை
வெள்ளி

### பொக்ராயான்:
**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** கிரியான்பூர் கிராமத்தில் சிறுவர் பராமரிப்பு மையம் துவங்கிட தேவன் கிருபை செய்தார். வாலிபர்களுக்கு நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூடுகையில் நட் சமுதாயத்தைச் சேர்ந்த அநேகர் கலந்துகொண்டு தேவ வார்த்தையை கற்றுக்கொண்டனர். செங்கல் சூளையில் பணிசெய்யும் பீஹாரைச் சேர்ந்த அநேகர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுகின்றனர். நட் இனத்தைச் சேர்ந்த அங்கஜ், சிவம் ஆகியோருக்கு தமிழ் நாட்டிலுள்ள நாசரேத் பாலிடெக்னிக் கல்லூரியில் இடம் கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர் பராமரிப்பு மையத்தில் பணிபுரியும் ஆசிரியர்களான அமன் மற்றும் காஜுலுக்கு தேவையான ஞானத்தை தேவன் அருள; சமையல் செய்யும் சரஸ்வதி & கீதாவையும், மிகுந்த அர்ப்பணிப்போடு பணி செய்யும் சபை மூப்பர் ராஜ்குமாரின் குடும்பத்தையும் தேவன் ஆசீர்வதிக்க; பேசவும், கேட்கவும் முடியாமல் கஷ்டப்படும் காயத்ரியை தேவன் குணப்படுத்த; பொக்ராயன் ஆலய வளாகத்தில் பயிற்சி மைய கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கவும், இதைச் சார்ந்த அனைத்து ஆவணப் பணிகள் விரைவில் முடிக்கப்படவும், லக்னோ சி.என்.ஐ. திருமண்டலத்திலிருந்து பொக்ராயன் ஆலயத்தின் அசல் நிலப்பத்திரங்கள் விரைவில் கிடைக்கவும் ஜெபிப்போம்.

### பார்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** புயல் காற்றினால் வீட்டின் மேற்கூரை விழுந்தபோதிலும் சுதேச ஊழியர் மற்றும் அவரது தாயாரை தேவன் காயமின்றி பாதுகாத்தார். விசுவாசிகளின் குடும்பக்கூடுகை மிகவும் பயனுள்ளதாக நடைபெற்றது. வலிப்பு வியாதியிலிருந்து சிம்பாலையும், 15 வருட கால் வலியிலிருந்து பாபு ராமையும் தேவன் குணப்படுத்தினார். போதைப் பழக்கத்திலிருந்து யோகேந்திரா மற்றும் சர்வேஷ் குமாருக்கும், பிசாசின் பிடியிலிருந்து சனம் மற்றும் ஹீராபதிக்கும் தேவன் விடுதலை அருளினார். சுனிப் என்பவரது வீட்டில் நடைபெற்ற திருமணத்தில் சமையல் எண்ணெய்க்குப் பதிலாக தெரியாமல் டீசலை கடாயில் ஊற்றியபோது தீவிபத்து ஏற்படாதபடி அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு முறை சிறுநீரகக் கல் அறுவை சிகிச்சை செய்த குந்திக்கு புற்றுநோய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. தேவன் அவருக்கு பூரண சுகமருள; குஷ்பு, பிரியா, சஞ்சு. சங்கீதா, அர்ஜு ஆகியோருக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட; அநேக வருடங்களாக திருமணத்திற்காக காத்திருக்கும் நமது வாலிபர்களுக்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; கழுத்து நரம்பில் அடைப்பு ஏற்பட்டு அவதியுறும் நீலுவை தேவன் குணப்படுத்த; சிறுநீரகம் மற்றும் கல்லீரல் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள அவ்னீஸ்க்கு தேவன் அற்புத சுகமருள; மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் ஐந்து வருடங்களாக சிறுநீரக குழாயிலுள்ள கட்டியினால் கஷ்டப்படும் ஹர்ஷ்பாபு குணமடைய ஜெபிப்போம்.




## ஜூலை
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெசையா ஹாரிஸ்
திரு. குப்புசுவாமி P.
திரு. பிட்யூத் குமார் சிங்

# அஸோம்

## கோஹ்பூர்:
**நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** குட்டும் கிராமத்தில் இரவு கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். ஜம்முகிரி கிராமத்தில் ஆலயக் கட்டுமானப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. விசுவாசிகள் முகாம் ஆசீர்வாதமாக அமைந்தது. சிறுவர் கூடுகை, சபை மூப்பர் பயிற்சி, பெண்கள் கூடுகை யாவும் திட்டமிட்டபடி தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10ஆம் வகுப்பு தேர்வில் தோல்வி அடைந்ததால் மனசோர்வுற்றி ருக்கும் மகாலக்ஷ்மி பெகுவுக்கு தேவன் நம்பிக்கை அளித்து மீண்டும் தேர்வு எழுத உற்சாகப்படுத்த; சுகவீனப்பட்டுள்ள சர்ஜோதி டோலே என்ற சிறுமிக்கு தேவன் பூரண சுகமளிக்க; பல்வேறு கூட்டங்கள் மூலம் இயேசு கிறிஸ்துவை குறித்து அறிந்துகொண்டவர்கள் அவரை விசுவாசிக்க ஜெபிப்போம்.

# ஜார்க்கண்ட்

## அமரபாடா:
**வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** பாபுதோஹா ஆலயக் கட்டுமானப் பணிக்கான தேவைகளை தேவன் சந்தித்து வருகிறார். சபை மூப்பர்களின் குடும்பக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. மஞ்சள் காமாலையிலிருந்து ஸ்டீபன் முர்மு, காசநோயிலிருந்து நிர்மல், அம்மை நோயிலிருந்து சிமோ முர்மு & பிஸ்வாஸ் பெஸ்ரா, வலிப்பிலிருந்து கணேஷ் டுடு, டைபாய்டு காய்ச்சலிலிருந்து புர்மிளா சோரன் ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். அநேக புதிய கிராமங்களில் திரைப்பட ஊழியம் மற்றும் இரவு கூடுகைகளின் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாஸ்கோ கிராமத்தில் பரவி வரும் மலேரியா காய்ச்சலிலிருந்து தேவன் மக்களை பாதுகாக்க; டைன் என்று சொல்லப்படும் கொடிய மூடப்பழக்கம் சந்தால் சமுதாயத்தை விட்டு முற்றிலும் அகல; பிசாசின் தொந்தரவினாலும், சுகவீனத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள சபை மூப்பர் பவுலோஸ் ஹன்ஸ்தாவுக்கு தேவன் விடுதலை அருள; பக்கவாதத்திலிருந்து ருஷிலா, கர்ப்பப்பை புண்ணினால் அவதியுறும் நிர்மலா மராண்டி, காலாஜார் நோயிலிருந்து ஜோசப் மராண்டி, புற்றுநோயிலிருந்து மஜான் ஹெம்ரோம் மற்றும் காச நோயிலிருந்து பாபுராம் சோரனுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## 13 ஜூலை
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பெனில்டா தயாசிங்

### அமலகாச்சி:
**கஜன் சம்பிரமரி & ரோஷிலா**

**துதிக்க:** திருமணமாகி 12 வருடங்களுக்குப் பிறகு நமது சபை மூப்பர் சாமுவேலின் குடும்பத்தை தேவன் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதித்துள்ளார். நல்ல பருவ மழையை தேவன் தந்தருளினார். திட்டமிட்டபடி உபவாச ஜெபங்கள் மற்றும் ஆவிக்குரிய ஜெபக் கூட்டங்கள் நடைபெற தேவன் கிருபை செய்தார். வியாதிகள் மற்றும் பிசாசின் போராட்டங்களிலிருந்து நமது ஊழியர்களையும், விசுவாசிகளையும் விலக்கி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிய அதிக வாஞ்சைக் காட்டும் ஜிர்லி கிராமத்து மக்களுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் அக்கிராமத்தினர் மனந்திரும்ப; கிராமங்களில் திட்டமிட்டுள்ளபடி முதியோர் கல்வி சிறப்பாக நடைபெற; அதன் மூலம் அநேகர் எழுத்தறிவுப் பெற்று பயன்பெற; குடிநீர் பற்றாக்குறையினால் அவதியுறும் கிராமங்களில் அரசாங்கம் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தித்தர; சுகவீனத்தினால் கஷ்டப்படும் நோடி சபை மூப்பர் திலீப் பஹாரியா பரிபூரண சுகம் பெற; கிராமங்களில் சுவிசேஷ ஊழியத்திற்கு தடையாயிருக்கும் மந்திரவாதிகள் மனந்திரும்பி இயேசுவின் அன்பை ருசிக்க ஜெபிப்போம்.

### தும்கா விடுதி:
**பிரதீப் முஷாஹரி & புரோபிலா**

**துதிக்க:** வேதபாட வகுப்பின் மூலம் விடுதிப் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் சிறப்பாக வளர்ந்து வருகிறார்கள். மக்கு ஹன்ஸ்தாவுக்கு தேவன் வியாதியிலிருந்து பூரண சுகமருளினார். வாலிபப் பிள்ளைகளுக்கு ஆலோசனை வகுப்புகள் நடத்தப்பட்டது. பெற்றோருக்காக நடத்தப்பட்ட சிறப்பு கூட்டத்தில் அநேகர் கலந்து கொண்டு பயன்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10ஆம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற ஏழு மாணவர்களுக்கும் ஜூனியர் கல்லூரியில் இடம் கிடைக்க; விடுதியில் படிக்கும் அனைத்துப் பிள்ளைகளின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்க; விடுமுறை நாட்களில் விடுதி மாணவர்கள் கற்றுக்கொண்ட மனப்பாட வசனங்கள் அவர்கள் உள்ளத்தில் கிரியை செய்ய; நமது விடுதியில் படிக்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும், ஊழியர்களுக்கும் தேவன் நல்ல சுகபெலன் மற்றும் பாதுகாப்பை அருள ஜெபிப்போம்.

## 14 ஜூலை
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பென்ஹர் Y.

திருமதி. ஜிக்கி எட்வர்ட்

### ராம்கார்:
### லெட்கோலுன் பெய்ட் & ஹட்நெய் கிம்

**துதிக்க:** கடந்த மாதம் அநேக புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தார். பிரியங்கா முர்மு விபத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து சுகம்பெற்று வருகிறார். மனநிலை பாதிக்கப்பட்டிருந்த கர்மேலா ஹெம்ரோமுக்கு தேவன் விடுதலை அருளினார். விஷப்பாம்பின் கடியிலிருந்து தேவிலால் மராண்டியை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜராரி கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி லுக்கி டுடுவுக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருள; வலிப்பு வியாதியினால் அவதியுறும் சுரேஷ், ராகுல், ரூபிலால் ஆகியோருக்கு தேவன் பரிபூரண விடுதலை அருள; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயிருக்கும் ஸ்ரீராம் ஹெம்ரோம் குடும்பத்தினரை தேவன் பெலப்படுத்த; பில்லி சூனிய கட்டுகளிலிருந்து ஜித்ரால் டுடுவுக்கு தேவன் விடுதலை அருள; கைப் பிரதிகளை வாசிக்கும் ஒவ்வொருவரும் தேவனின் அன்பை புரிந்துகொள்ள ஜெபிப்போம்.

### ராஜ்மஹால் சமுதாய கல்லூரி:
### ஜாண்சன் ராஜதுரை & வினோதினி

**துதிக்க:** பராம்பி, டம்ருபிட்டா, பட்டுவாடே, சோட்டஜாரா, புஷேரா டபானி, குட்டிபேடா, சுந்தர்பஹாடி, துல்லே, பொக்ரியா, சத்ரா, அம்ஜ்ரோ மற்றும் பிஜிரியா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற முதியோர் கல்வி மூலம் 2000க்கும் அதிகமானோர் பயன்பெற்றனர். 16 வாலிபர்கள் தையல் பயிற்சி பெற்றுள்ளனர். சமுதாய கல்லூரி மூலம் 24 வாலிபர்கள் கணினி பயிற்சி முடித்துள்ளனர். மால்டோ வாலிபர்களுக்கு மரம் நடுதல், கால்நடை பராமரிப்பு, விவசாயம் போன்றவற்றில் புதிய யுக்திகளை கற்றுக்கொடுக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பங்காடியா, லிபா, பாகா, ஜானிபிட்டா, மரிகுட்டி ஆகிய கிராமங்களில் சிறுபிள்ளைகளுக்கான எழுத்தறிவுத் திட்டம் சிறப்பான முறையில் செயல்பட; ‘உஜ் அவேலி’ என்ற பத்திரிக்கை மூலம் விசுவாசிகள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள; மால்டோ மக்களின் சமுதாய மேம்பாட்டிற்காக எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அரசாங்கத்தின் மூலம் தேவையான உதவிகள் தடையின்றி கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 15 ஜூலை
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கரோலின் ராணி வில்லியம்
திரு. ஜித்தேந்தர டிகல்
திரு. பட்வி சோமாலியா மன்சுபாய்
திருமதி. சுகுணா அருள் ஆசீர்
திரு. வால்வி நேதாஜி டாடு
திருமதி. ராவுத் ஆஷா கோன்கனி சம்பத்
செல்வி. காஜல் K.M.

### பதர்காமா:

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** கல்துமரியா கிராமத்தைச் சேர்ந்த அனிதா தேவியை மூச்சுத் திணறலிலிருந்தும், சில்காரா கிராமத்தைச் சேர்ந்த டகராத் ரவியை பக்கவாதத்திலிருந்தும் தேவன் குண மாக்கினார். கல்லீரல் மற்றும் நுரையீரல் நோயிலிருந்து மடர்கஞ்ச் கிராமத்தைச் சேர்ந்த சோமா தேவிக்கு தேவன் சுகம் தந்ததால், அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக 20 பேருக்கு புதிய ஏற்பாடுகளை விநியோகித்துள்ளார். பிசாசின் பிடியிலிருந்து ரிங்கி தேவிக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12 வயது ரீனாவை இருதய நோயிலிருந்து தேவன் குணப்படுத்த; கழுத்துபுற்றுநோயினால் அவதியுறும் சௌரா கிராமத்தைச் சேர்ந்த பப்லு யாதவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; ஜிட்னி தேவியை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; விசுவாசத்தினிமித்தம் உபத்திரவங்களை அனுபவித்து வரும் உதய் ரவிதாஸை தேவன் பெலப்படுத்த; சில்காரா, தரட்டிக்னர், ஜம்னி, பண்டஹறா, காஸிசக், மடர்கஞ்ச் மற்றும் பால்பட்டா கிராமங்களில் வாழும் விசுவாசிகள் பிறருக்கு சாட்சிகளாய் ஜீவிக்க; தன் எதிர்ப்பு நோய்களால் (Autoimmune Disease) பாதிக்கப்பட்டுள்ள பிரியங்கா தேவிக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

### சிந்தூரியா:

**பெஞ்சமின் ஜோதி & புஷ்பிதா ராணி**

**துதிக்க:** சில புதிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடைபெற்றது. கோர்டா மொழி பேசும் மக்கள் மத்தியில் கிறிஸ்தவ முறைப்படி நமது விசுவாசியின் திருமணம் நடைபெற்றது. விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகின்றனர். ஞாயிறு ஆராதனைகள் தொடர்ந்து எவ்வித எதிர்ப்புமின்றி நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆராதனையில் பங்குபெறுவோர் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; சிந்தூரியா பணித்தளத்தில் நம்முடன் இணைந்து பணிசெய்யும் தன்னார்வ ஊழியர் ராடேலாலை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; ஒரு வருடத் திற்கும் மேலாக தொடர்ந்து ஆலயத் திற்கு வருபவர்கள் தடையின்றி தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

**16** **ஜூலை**
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. வினோதினி ஜாண்சன்
திரு. பர்னபாஸ் A.
திருமதி. சுனந்தா பெல்லி யேசு பிரகாஷ்
திருமதி. கல்பனா சௌதரி

## ரானேஷ்வர்:
**சய்கோதங் ஸௌ &**
**ங்கைனு ஸௌ**

**துதிக்க:** 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். விடுமுறைக்குச் சென்ற விடுதிப் பிள்ளைகள் மீண்டும் பத்திரமாக விடுதிக்கு திரும்பி தங்கள் படிப்பைத் தொடர தேவன் உதவி செய்தார். மனிஷா மற்றும் ஷிலாமன்னி முர்மு 10ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றார்கள். சிறுவர் வகுப்பில் அநேகர் கலந்துகொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியிலிருந்து பாரத் சம்ப்ரோம் விடுதலை பெற; வேலை செய்யும் இடத்தில் ஏற்பட்ட விபத்தினால் தனது மூன்று விரல்களை இழந்துள்ள கிருஷ்ண முர்முவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; புற்றுநோயிலிருந்து லுக்கி முர்முவை தேவன் குணப்படுத்த; சுசுனிலியா ஆலய ஆராதனையை பொறுப்பேற்று நடத்த படித்த, தேவ பக்தியுள்ள தலைவரை தேவன் தந்தருள; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாசு முர்மு, தீனா சோரன், ராஜேஷ் முர்மு, ஜன்தா புர்கா ஆகியோர் தேவனின் அன்பினால் தொடப்பட; சபை மூப்பர்கள் சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட ஜெபிப்போம்.

## கங்குபாடா சிறுமியர் விடுதி:
**ஈவ்லின் பாக்கியா,**
**எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** விடுதிப் பிள்ளைகளின் பெற்றோருக்காக நடத்தப்பட்ட கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். 10ஆம் வகுப்பு தேர்வு எழுதிய அனைத்து பிள்ளைகளும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப் பெற்றனர். காச நோயினால் பாதிக்கப்பட்டிருந்த 10ஆம் வகுப்பு படிக்கும் பிரேமிக்கு தேவன் பூரண சுகமருளினார். இவ்வாண்டு தேவன் நல்ல பருவ மழையைக் கட்டளையிட்டார். சலோமியின் தந்தையை வியாதியிலிருந்து குணமாக்கிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் நடைபெறும் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய; 12ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றுள்ள சிபி மற்றும் கமலிக்கு உயர் படிப்பிற்கான வழிகளை தேவன் தந்தருள; வாலிபப் பருவத்திலுள்ள விடுதிப்பிள்ளைகள் தங்களை பரிசுத்தமாய் காத்துக் கொள்ள; பூஞ்சை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விடுதிப் பிள்ளைகளை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

**17** ஜூலை
வியாழன்

# மேற்கு வங்காளம்

**சம்சி:**

**தீப் ரத்னா & மித்லேஷ்**

**துதிக்க:** மூன்று இடங்களில் நடைபெற்ற நாடக நிகழ்ச்சியின் மூலம் அநேகர் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். சிறுநீரக பிரச்சனையிலிருந்து ஷியாம் மிசேருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். இரண்டு நாட்கள் நடைபெற்ற சபை மூப்பர்கள் மற்றும் ஆராதனைக்குழு தலைவர்களின் பயிற்சியில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அநேக நாட்களாக சுகவீனப்பட்டிருந்த நமது சுதேச ஊழியரின் மகள் சாந்தி ஹன்ஸ்தாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் முழுஇரவு ஜெபம், பெண்கள் ஜெபக்கூட்டம், வாலிபர்களின் வேதபாட வகுப்புகள் அனைத்தும் தடையின்றி நடைபெற; இரண்டு கிராமங்களில் நடைபெறவிருக்கும் ஆத்தும ஆதாய பயிற்சி முகாம் பயனுள்ளதாக அமைய; கசிம்பூர், லோபாங் டோலா ஆகிய பகுதிகளில் ஆராதனை மையம் திறக்க மூன்று வருடங்களாக எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; ஜித்தல்பூர், வாரி கிராமங்களில் ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; புதிய கிராமங்களில் நடைபெறவிருக்கும் திரைப்பட ஊழியங்கள் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நல்ல பலனைத்தர ஜெபிப்போம்.

**பாலூர்ஹாட்:**

**ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், அஜித் பாண்டியன்**

**துதிக்க:** டங்கி கிராமத்தைச் சேர்ந்த ஜோகான் முர்முவுக்கு தோல் வியாதியிலிருந்தும், மூட்டு வலியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். எதிர்ப்புகள் மத்தியிலும் நடைபெற்ற சிறுவர் வேதாகம வகுப்பில் அநேக பிள்ளைகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். தற்கொலைக்கு முயற்சி செய்த நிரஞ்சன் ஹெம்ரோமை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். இருசக்கர வாகன விபத்திலிருந்து பப்பு கிஸ்குவின் ஜீவனைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு வாஞ்சைக் காட்டும் சூரஜ் ஹஸ்தா, ஜமின் கிஸ்கு, செமோலி முர்மு, ஜும்ரி முர்மு, அமோல் சோரன், ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நாடகம் மற்றும் சத்சங் கூட்டங்கள் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள; குடியிலிருந்து சோகோல் ஹெம்ரோம் மற்றும் ரிங்க்டா ஹெம்ரோமும், போதையின் அடிமைத்தனத்திலிருந்து சுசாந்தா மார்டி மற்றும் ஸ்வப்னா முர்முவும் விடுதலை பெற; வேத வகுப்பிலும், ஆலய ஆராதனையிலும் கலந்து கொள்ளும் சிறுவர்களும், வாலிபர்களும் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

## 18 ஜுலை
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பென்ஹர் M.
திரு. அமிர்காந்த டிகல்
திரு. அருள்ராஜ் எபிநேசர் D.
திரு. சாம் பால் A.

### மால்டா:
### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** இவ்வாண்டு தேவன் நல்ல பருவ மழையை தந்தருளினார். அபிஜித் மற்றும் ப்ரோஷான் ஜித் தங்கள் வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். நமது பஞ்ச்கிராமைச் சேர்ந்த நமது விசுவாசியின் மருமகளுக்கு இரட்டை குழந்தைகளை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். மால்டா பகுதியில் நமது ஊழியர்களுடன் இணைந்து பணி செய்யும் இரண்டு சகோதரர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக மந்தையில் இணைந்த விசுவாசிகளும், புதிய தொடர்பாளர்களும் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளர; சித்தல்பூர் மற்றும் சுதானி பகுதிகளில் வருடந்தோறும் ஏற்படும் வெள்ளப்பெருக்கிலிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாக்க; புத்கேலா மற்றும் ஜாட்டாகுண்டி பகுதிகளில் வாழும் மக்களினங்கள் தேவனின் இரட்சிப்பினை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### பாக்குவாஹாட்:
### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்து ராஜன் சோரனை தேவன் விடுதலையாக்கினார். சபை மூப்பர் சுங்கு டுடு மேல் பொய் குற்றம் சாட்டப்பட்ட நிலையில், அவர் குற்றமற்றவர் என்று தீர்ப்புப் பெற தேவன் கிருபை செய்தார். விசுவாசத்தின் நிமித்தம் தன் சகோதரனால் வீட்டைவிட்டு துரத்தப்பட்ட சுசிலா பெஹ்ராவின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரது சகோதரனின் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் சுசிலாவை வீட்டில் சேர்த்துக்கொள்ள கிருபை செய்தார். சல்போனா, நீம்டங்கா மற்றும் சில்டானி கிராமங்களில் ஆலயம் கட்டிட விசுவாசிகள் தங்கள் நிலத்தை இலவசமாக கொடுக்க முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குஜராத்திற்கு வேலைக்குச் சென்ற இடத்தில் எதிர்பாரா விபத்தினால் சுனில் முர்மு மரித்துப்போனதால் அவரது மனைவி மற்றும் நான்கு பெண் பிள்ளைகளுக்கு தேவன் ஆறுதலையும், நல்ல எதிர்காலத்தையும் கட்டளையிட; காரு ஹஸ்தாவின் குடும்பப் பிரச்சனைகளை நீக்கி தேவன் சமாதானம் அருள; ரிமில் முர்மு என்ற குழந்தைக்கு தொண்டையில் செய்யப்படவுள்ள அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்று பேசும் திறனை பெற்றுக்கொள்ள; ரகு ஹஸ்தாவின் குடும்பத்தினர் இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிந்து ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 19 ஜுலை
சனி

# சத்தீஸ்கார்

### சம்பா:

### வினோத்குமார் சிங் & பிரவதிமணி

**துதிக்க:** நமது விசுவாசிகளுக்கும், ஊர் தலைவர்களுக்கும் இடையே நல்லுறவை தேவன் ஏற்படுத்தி தந்துள்ளார். மனநிலை பாதிக்கப்பட்டு 10 வருடங்களாக தனிமையில் வசித்து வந்த கன்சிராமுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளியதால் தற்போது கிராமத்தினருடன் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறார். விசுவாசிகள் அநேகருக்கு நல்ல வீடு கிடைக்கவும், புதிய ஆத்துமாக்கள் ஆராதனையில் கலந்துகொள்ளவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீட்டு ஆராதனைக்கூடுகைகளுக்கு எதிர்ப்புகள் பெருகி வருவதால் விரைவில் நிலம் வாங்கி ஆலயம் கட்டப்பட; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள அக்னி, ஈஷா, ரானோ ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பெங்களூரில் கட்டிட வேலையின் போது விபத்து ஏற்பட்டு மரித்துபோன நமது விசுவாசி பத்திரிகாவின் மகன் குடும்பத்தை தேவன் ஆறுதல்படுத்த ஜெபிப்போம்

### பாலோடா பஜார்:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** கடந்த மாதம் புதிய கிராமங்களில் இயேசு திரைப்பட ஊழியம், சிறுவர் வேதாகம வகுப்புகள் மற்றும் பின்தொடர் பணிகள் செய்ய தேவன் உதவி செய்தார். பாலோடா பஜார் ஆலயத்திற்கு புதிய ஆர்மோனியம் பரிசாக கிடைத்துள்ளது. மிஷனெரிகளை இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கம்கரியா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; குழந்தை திருமணம், வரதட்சணை மற்றும் குடிப்பழக்கம் போன்ற சமூக தீமைகள் முற்றிலும் அழிக்கப்பட; கௌரி பஞ்சோர், சரிதா அஞ்சான், தன்பால் ஜான்காடே, திவ்யா, மஞ்சு லதா ஆகியோருக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; அதிக எதிர்ப்புகளை சந்தித்து வரும் பெத்லாபூர், காடேஷ்பூர், பிஷ்ராம்பூர் ஆகிய கிராமத்திலுள்ள விசுவாசிகளை தேவன் பாதுகாக்கவும், அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

## *சிறுமை மகிமையாக மாறியது*

*மஹாராஷ்டிரா, எட்டப்பள்ளி பணித்தளத்தில் டோடூர் கிராமத்தில் வசித்து வருபவர் நமது விசுவாசி ராம்சு அட்டாராம். இவர் 2021இல் தனது வீட்டை கட்ட ஆரம்பித்தபோது அவரது விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததோடு, இவரது குடும்பத்தை ஊரைவிட்டே வெளியேற்றி விட்டனர். ஆனாலும் தன் விசுவாசத்தில் தளர்ந்துபோகாமல் மூன்று வருடங்களாக தனது வயல் நிலத்தில் ஒரு குடிசை அமைத்து அதிலே வாழ்ந்து வந்தார். இவ்வருடம் கர்த்தரின் கிருபையால் மீண்டும் தனது கிராமத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி வீட்டை கட்டிமுடிக்க தேவன் அவருக்கு உதவி செய்தார். அதன்பின் அவரது மகனின் திருமணத்தை கிறிஸ்தவ முறைப்படி நடத்தியபோது கிராமத்தார் அனைவரும் மகிழ்ச்சியோடு அதில் கலந்துகொண்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## 20 ஜூலை
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரெஜினி தாமஸ்
திரு. தோட்சுய்யோ ஷிம்ரா, திரு. அலெக்ஸ் பிரபு
திரு. ரமேஷ் பாபு K., திரு. பாபுஜி முர்மு

# குஜராத்

## சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** ஜாம் நகரில் ஆராதனைக் கூடம் கட்டுவதற்கு விசுவாசிகள் உற்சாகத்தோடு உதவி செய்து வருகின்றனர். ஜெபத்தின் மூலம் அனிதா பேன் மற்றும் ரூபா பேன் மத்தியில் நல்லுறவை தேவன் ஏற்படுத்தியுள்ளார். விசுவாசி லக்கி பாயின் மகன் மோனிஷ் மற்றும் குலாபேனின் மகன் சில்லுவுக்கு கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற தேவன் கிருபை செய்தார். கட்டிட வேலை செய்துகொண்டிருந்த போது மாடியிலிருந்து கீழே விழுந்த ஹரிக் என்பவரை சிறு காயங்களுடன் தேவன் பாதுகாத்தார். ஒவ்வாமை மற்றும் கட்டிகளினால் வேதனை அனுபவித்து வந்த கவிதா பேனுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுபாஷ், உஷா, ராஜேஷ், மம்தா, கீதா, புஷ்பா ஆகியோர் தங்கள் விசுவாச பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்பி ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; வேலைக்குச் செல்ல மனமின்றி இருக்கும் சைலேந்திரா என்ற விசுவாசிக்கு தேவன் உதவி செய்ய; குடியின் அடிமைத்தனத்திலிருந்து அருண் மற்றும் சஞ்சய்க்கு தேவன் விடுதலை அருள; வயிற்று கட்டியிலிருந்து ஷோபோவுக்கு தேவன் அற்புத சுகமருள; சுதேச ஊழியர் பிரேம் மற்றும் ஊர்மிளா பேனை தேவன் ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்த; மிஷனெரி மாதவராய் தைராய்டு மற்றும் சர்க்கரை நோயிலிருந்தும், மிஷனெரி ஜெப தங்கம் குதிகால் வலியிலிருந்தும் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

### ஜாலோத்: குமார் பால் & அமுதா, ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ் & ஏஞ்சல்

**துதிக்க:** நடைபெற்ற வாலிபர்கள் கூடுகையில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். சுதேச ஊழியரின் மகன் மற்றும் ராஜ் பாயின் திருமணங்கள் தேவ நாமம் மகிமைப்பட சிறப்பாக நடைபெற்றது. அம்பால் பாயின் குடும்பம் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ஆசிரியர் தகுதித் தேர்வில் அனில் பாய் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற தேவன் உதவி செய்தார். அதிக கால் வலியினால் அவதியுற்ற நானாகரணுக்கு சுகம தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெலவீனத்திலுள்ள ஆஷிஷ் என்ற 10 மாத குழந்தைக்கு தேவன் பூரண சுகமருள; புதிய விசுவாசி அம்பால்பாய் கிறிஸ்துவில் வேரூன்றி வளர; வயிற்றில் அறுவை சிகிச்சை செய்துள்ள சைத்ரா பேனுக்கு தேவன் பூரண ஆரோக்கியம் தந்தருள; சிம்மான் பாயின் கல்லூரி கட்டணத் தேவைகள் சந்திக்கப்பட; சுரேகா பேனுக்கு தேவன் சுகப்பிரசவம் கட்டளையிட; லலிதா பேன் மற்றும் பாயல் பேனுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் தந்தருள; பக்கவாதத்தினால் கஷ்டப்படும் பூஜா பாய் மற்றும் சிக்கில் செல் நோயினால் அவதியுறும் நீரு பேனுக்கு தேவன் பூரண சுகம் தந்தருள; லக்கன்பூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## 21 ஜுலை திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. பொன்மலர் ஞானசாந்தி
திரு. பால்ராஜ் R.

### கவாண்ட்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** சுற்றுலாப் பயணம் சென்ற சிறுவர் பராமரிப்பு மையத்தில் படிக்கும் பிள்ளைகள் உற்சாகத்துடன் அந்நாளை அனுபவிக்க தேவன் கிருபை செய்தார். சபை மூப்பருக்கான பயிற்சியில் அநேகர் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது சுதேச ஊழியரின் மூலம் நான்கு கிறிஸ்தவ திருமணங்களை நடத்திவைக்க கர்த்தர் உதவி செய்தார். 20 நாட்களாக காய்ச்சலினால் கஷ்டப்பட்டு வந்த பவுலோஸ்குவா கிராமத்தைச் சேர்ந்த சங்கருக்கு ஜெபத்தின் மூலம் பூரண சுக மருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஹுதாபரி மற்றும் ஜமானியா கிராமங்களில் நடைபெற்ற சிறுவர்களுக்கான வேதாகம வகுப்பில் கலந்துகொண்ட சிறுவர்கள் கனிதரும் வாழ்க்கை வாழ தேவன் அவர்களுக்கு உதவி செய்ய; அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து லாலா பாயிக்கு தேவன் விடுதலை அருள; மத்வாட் கிராமத்தில் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி படிப்பதற்கான வாய்ப்புகளை தேவன் தந்தருள; ஜார்வி கிராமத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள வாலிபர்கள் அத்தீயப்பழக்கத்திலிருந்து விடுபட்டு ஆராதனையில் கலந்துகொள்ளவும், கிறிஸ்துவில் வளரவும் ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### மாஷாவட்:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** இரண்டு நாட்கள் நடைபெற்ற பெண்கள் முகாமில் 35க்கும் அதிகமானோர் கலந்துகொண்டு தேவ வார்த்தையால் ஆசீர்வதிக்கப்பட்டனர். இரண்டு இடங்களில் திரைப்பட ஊழியமும், 10 புதிய ஜெபக்குழுக்களை உருவாக்கவும் தேவன் கிருபை செய்தார். விபத்தினால் ஆபத்தான நிலையிலிருந்த நிம்லாபாயின் மகனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ஆஸ்துமா நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கிரண் தாதாவின் தாயாருக்காக சபையார் கூடி ஜெபித்த போது அவருக்கு பரிபூரண சுகமளித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிக்கில்செல் நோயினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாமலிருக்கும் பிந்தாபாய்க்கு தேவன் அற்புத சுகமருள; அநேக நாட்களாக இடுப்பு வலியினால் அவதியுறும் சவந்தி பாயை தேவன் குணப்படுத்த; ஆராதனையில் கலந்துகொள்ள விடாமல் தடைசெய்யும் வீனாபாயின் கணவர் அப்சிங் மனந்திரும்ப; மூன்று மாதங்களாக சிறுநீரக குழாய் தொற்றினால் துன்புறும் கீழாபாய்க்கு தேவன் பூரண சுகமருள; மாஷாவட் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சுதேச ஊழியர்கள் பூரண அர்ப்பணிப்போடு உற்சாகத்துடன் பணி செய்ய ஜெபிப்போம்.

22 ஜூலை
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. தர்மராஜ் R.R.
திரு. எபிநேசர் சாமுவேல் A.

### நேர்: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** இயேசு திரைப்பட ஊழியம் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். குசும்பா, சுதாரா மற்றும் நம்பூர் பகுதிகளில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்றன. ஆறு பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். தலைவர்கள் பயிற்சி, படப் புத்தகப் பயிற்சி, வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், இரவு கூடுகை, பெண்கள் கூடுகை, இளைஞர்கள் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஆலய ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் புதிய தொடர்பாளர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; அனைத்து பயிற்சிக் கூடுகைகளும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட; புலம்பெயர்ந்து சென்றுள்ள விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; திட்டமிட்டபடி அனைத்து பகுதிகளிலும் நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

### ஜவ்ஹர்:
### விஜய்பாபு & தேவ கிருபை

**துதிக்க:** லோகேர்மால் மற்றும் கோகேர்பாடா கிராமங்களில் பெண்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. நமது விசுவாசிகள் ராமாபாய் மற்றும் செவ்வந்திபாயை சாலை விபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். விளையாடிக்கொண்டிருந்தபோது தவறுதலாக தீக்குள் விழுந்துவிட்ட மூன்று வயது ரியாவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். விசுவாசத்தை விட்டு பின்வாங்கிய இரண்டு குடும்பங்கள் மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 10 நாட்களாக நடக்க இயலாமலிருந்த கிரிஜி பேன் ஜெபத்திற்குப் பின் மீண்டும் நடக்கும்படி உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கஸ்தேரி, முர்டோல்பாடா, சோட்டாபாடா, வடுபாடா, நவபாடா, போப்தாரி, கிர்மீரா, கர்சோண்ட், மதுவிகிரா ஆகிய இடங்களில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கியவர்கள் மனந்திரும்பி மீண்டும் கிறிஸ்தவ நம்பிக்கையில் வளர; அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காகக் காத்திருக்கும் சங்கர், திலிப், பிரபு, ஜயெஸ்பாய் ஆகியோரின் குடும்பங்களில் தேவன் கர்ப்பத்தின் கனியை தந்தருள; வரும் நாட்களில் நடக்கவுள்ள விசுவாசிகளின் முகாம், கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**23** ஜூலை

புதன்

*உபவாச ஜெபநாள்*

### கட்சாந்தூர்:

**பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்**

**துதிக்க:** முதன்முறையாக நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். சிறுவர் வேதாகம வகுப்புகள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி, சுகமளிக்கும் கூடுகை யாவும் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். தேவராம், கிஷோர், கைலாஷ், ஸ்ரீராம் ஆகியோர் தேவனுடைய விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் இரட்சிப்பின் அனுபவத்தை மக்கள் பெற்றுக்கொள்ள; இருதய நோயினால் அவதியுற்று வரும் ஆபிரகாம் மற்றும் மாலாவை தேவன் பூரணமாய் குணப்படுத்த; சோனி, பாயல், பல்லவி, பிரீத்தி, தர்ஷனா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; உடல் ஊனமுற்ற ஆதர்ஷ் என்பவருக்கு தேவன் நல்ல எதிர்காலத்தைத் தந்தருள ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** ஜண்டியான்ஜன், உமர்டா, சமாரியா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற இரவு கூடுகையில் அநேகர் கலந்துகொண்டனர். நான்கு கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் முகாமில் சிறுவர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு வேத வசனங்களை கற்றுக்கொண்டனர். புதிதாக நான்கு பேர் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்துள்ளனர். ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் தேவன் தந்த ஆரோக்கியத்திற்காக, பாதுகாப்பிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபசியாபாடா கிராமத்தைச் சேர்ந்த ஆடி மற்றும் உமர்டா கிராமத்தைச் சேர்ந்த துஷார் ஆகியோருக்கு சிக்கில்செல் அனிமியா வியாதியிலிருந்து தேவன் பூரண சுகத்தை தந்தருள; குர்டுபானி கிராமத்தைச் சேர்ந்த ரிங்குவிற்கு தேவன் ஆண் குழந்தையைத் தந்துள்ளார். நாய் கடியினால் அவதியுறும் பிரேமுக்கு தேவன் சுகமருள; கருபாய் மற்றும் யசோதாவுக்கு தேவன் தெளிவான கண்பார்வையைத் தந்தருள ஜெபிப்போம்.


## செயல்வீரர் கீதங்கள்

**சிறிய பாடல் புத்தகம்**




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் காலத்தால் அழியாத ஆதி மிஷனெரி தரிசனப் பாடல்களை உங்கள் இல்லங்களிலும் ஜெபக்குழுக்களிலும் பாடிட, மிஷனெரி தரிசனத்தை அனல் மூட்டி எழுப்பிட தொகுத்து வடிவமைக்கப்பட்டுள்ள சிறிய பாடல் புத்தகம் வெளிவந்துவிட்டது.

**நன்கொடை ரூபாய் 30/- மட்டுமே**

## 24 ஜூலை
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆல்பர்ட் சாமுவேல், திரு. சதீஷ் T.

### இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நாசிக் இரயில் நிலையத்தில் காணாமல் போன நமது விசுவாசி விஷால் வாகின் மனைவி ஜெபத்தின் மூலம் இரண்டு வாரங்களுக்குப் பின் பத்திரமாக வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். இருச்சகர வாகன விபத்தி லிருந்து விஷ்ணுவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். உடலத்தி மற்றும் வாக்கர் பாடா கிராம விசுவாசிகள் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர். திரைப்பட ஊழியங்கள், சிறுவர் ஊழியங்கள், ஆத்தும ஆதாய முகாம் யாவும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் மூன்று வருடங்களாக கால் வலியினால் கஷ்டப்படும் ரோஹித் பரிபூரண சுகம்பெற; கோகிலா மற்றும் ஜெயராணியை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; வயிறு வீக்கத்தினால் கஷ்டப்படும் நான்கு வயது சிறுவன் பட்டிக்கை தேவன் குணப்படுத்த; குடிப்பழக்கத்தினால் ஊனமுற்ற தன் மனைவி குஷ்பாபேனை அடித்து துன்புறுத்தும் அவரது கணவர் மொஹினார் மனந்திரும்ப; இரண்டாவது முறையாக தடைபட்டிருக்கும் ஆவிக்குரிய மேளா வரும் நாட்களில் தடையின்றி நடத்தப்பட; இப்பிராந்தியத்தில் தேவன் போதுமான மழையைத் தந்தருள ஜெபிப்போம்.

### எட்டப்பள்ளி:

#### பாபுஜி முர்மு & வைலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** பிரசவத்தின்போது சிக்கலை சந்தித்த நமது விசுவாசி தனியா மட்டாமிக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருளினார். சங்கர் கௌடேவுக்கு முதுகு வலியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் தர்மோ பொங்கட்டி, ராம்ஜி மஹா, ராஜு அலாம், எர்பேபோ, கல்மட்டி ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தர்மோபொங்கட்டியின் காலிலுள்ள கட்டி விரைவில் நீங்கி சுகம்பெற; ராம்ஜி மஹா, கைலாஷ் மற்றும் ரமேஷ் அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபடவும் ஜெபிப்போம்.

### மோல்கி:

#### ரூபன் டுடு & ருக்மணி ஹெம்ரோம்

**துதிக்க:** இரண்டு வாரங்களாக நடக்க இயலாமல் கஷ்டப்பட்ட கவிதா பாய் ஜெபத்தின் மூலம் அற்புத சுகம் பெற்றார். அசிலா பாய் மற்றும் ஹர்ஷா தாதா பக்கவாதத்திலிருந்தும், கால் வலியிலிருந்தும் தேவனால் சுகம்பெற்றனர். விசுவாசி ரவி, தன் வீட்டை நல்லமுறையில் கட்டி முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாஸ்மி பாய் மற்றும் மணி பாயின் கர்ப்பப்பை பிரச்சினையை தேவன் குணப்படுத்த; காச நோயினால் அவதியுறும் நமது தன்னார்வ ஊழியர் நர்சிங்கிற்கு தேவன் சுகமருள; சுவிசேஷத்தை கேட்ட மக்கள் இருதயங்களில் தேவன் கிரியைச் செய்ய ஜெபிப்போம்.

## 25 ஜூலை
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மரகதமணி ரூபன்
திரு. மணிமாறன் D., திரு. ஆனந்தன் M.

### சாலீஸ்காவ்:

**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** மந்திரவாதத்தினாலும், அசுத்தாவியின் பிடியினாலும் 14 வருடங்கள் போராட்டத்தை சந்தித்து வந்த பட்டோண்டா கிராமத்தைச் சேர்ந்த லதாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். ஆஸ்துமா வியாதியிலிருந்து உக்காவுக்கு தேவன் சுகமருளினார். பகவத் என்பவருக்கு பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். சிறுவர் வகுப்பில் அநேக சிறுவர்கள் உற்சாகத்துடன் கலந்துகொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்த வாந்தியிலிருந்து அஜார் என்பவருக்கும், வலிப்பு வியாதியிலிருந்து மனோஜ் லோக்கான்டே என்பவருக்கும், புற்றுநோயிலிருந்து கமலா பாயிக்கும் தேவன் பரிபூரண சுகமருள; படிக்கட்டிலிருந்து கீழே விழுந்து காயமுற்றிருக்கும் ரேகாவுக்கு தேவன் சுகமருள; அசுத்தாவியின் பிடியினால் தற்கொலை செய்ய தூண்டப்படும் நிட்டா பொட்டாரேக்கு தேவன் விடுதலை அருள; இப்பணித்தளத்தில் விரைவில் ஆலயம் கட்டப்படவும், விசுவாசிகளின் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் ஜெபிப்போம்.

### அக்கல்குவா:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** ஆறு கிராமங்களில் உபவாச ஜெபமும், இரவு ஜெபக்கூட்டங்களும் நடத்திட தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். வயிற்றில் கட்டியினால் அவதிப்பட்டு வந்த ஷிஜாலுக்கு தேவன் சுகமருளினார். விசுவாசிகளின் பயிற்சியை நல்ல முறையில் நடத்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால்களில் உணர்வில்லாமலிருக்கும் உஷா பேனை தேவன் குணப்படுத்த; வயிற்று வீக்கத்தினால் அவதியுறும் சோனல் பெனை தேவன் சுகப்படுத்த; அக்கல்குவா பணித்தளத்தில் தேவன் நல்ல ஆத்தும அறுவடையைக் கட்டளையிட; தன்னார்வ ஊழியர் உஷா பேன் மற்றும் சுனில் குடும்பத்தை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** நகராட்சி தலைவர் மஹாருத்ரப்பா, எல்லம்மா, ராம்பிரசாத் ஆகியோர் ஆலயம் வந்து ஜெபித்த போது அவர்களை அலைக்கழித்து வந்த அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார்கள். பில்லி சூனியக் கட்டுகளினால் இரவில் தூங்கமுடியாமல் அவதிப்பட்டு வந்த பார்வதிக்கு ஜெபத்தின் மூலம் விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திப்பன்னா, அக்கம்மா, சுசிலாக்கா, பாசன்னா, பிரியா, ரேணுகா, ஹெமா, பல்லவி, கல்பனா, சென்னப்பா, சென்னம்மா, அம்ருத்தா, வாணி ஆகியோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; ஆலயத்திற்குச் செல்வதைத் தடைசெய்யும் முகமத் நசீரின் உறவினர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

26 ஜூலை
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிங்ஸ்லி G., திருமதி. சுகி மலர் வினு

## மாலூர்:

**கிஷாந்தா லிமா & பிரமிளா சிங்**

**துதிக்க:** மிஷன் ஞாயிறு மூலம் விசுவாசிகளுக்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களை குறித்து தெளிவாகப் போதிக்கவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். தொடர்ந்து ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் கீர்த்தனாவின் திருமணம் தடையின்றி நடைபெற்றது. கடந்த மாதம் சிறுவர்கள் வேதாகம பள்ளி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12ஆம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்லூரிகளில் இடம் கிடைக்க; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள வாலிபர்கள் அதிலிருந்து விடுதலைபெற்று தேவனுக்கு சாட்சிகளாய் வாழ; பார்கவி, திரிவேணி, சிந்துஜா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; படிப்பில் பின்தங்கியிருக்கும் நயன் மற்றும் சாமுவேலை தேவன் ஞானத்தினால் நிறைத்திட; விஜய் மற்றும் கௌதமி தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ ஜெபிப்போம்.

## நிட்குண்டி:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** சர்க்கரை நோயினால் கால் விரல்களில் புண்கள் ஏற்பட்டு அவதியுற்ற பார்வதிக்கு தேவன் பூரண சுகமருளினார்; வசந்த்க்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருளினார்; நானப்பாவின் கால் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபை செய்தார். கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் பசவராஜின் ஹோட்டல் வியாபாரத்தை தேவன் ஆசீர்வதிக்க; ஊழியத்திற்கு வாஞ்சைக் காட்டும் கீதாவுக்கு தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்த; உஷாவுக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட; குடும்பத்தினர் ஆலய ஆராதனையில் கலந்து கொள்வதை தடைசெய்யும் சாகர் மனந்திரும்பி இயேசுவின் அன்பை ருசிக்க; இடது கால் வீக்கத்தினால் கஷ்டப்படும் மீனாக்ஷிக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.


# அதீத ஸ்நேகம்

**பென் டிரைவ்**



செயல்வீரர் கீதங்களின் வரிசையில் **56**ஆம் பாகம் அதீத ஸ்நேகம் என்ற கருப்பொருளில் பென் டிரைவ் வெளிவந்துவிட்டது.

**நன்கொடை ரூபாய் 150/- மட்டுமே**

27 ஜுலை
ஞாயிறு

## ஷிரஹட்டி:
### ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** சரீர ஊனத்தினிமித்தம் சிறுமைப்படுத்தப்பட்டு கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்ட அன்னபூர்ணாவுக்கு ஊழியர்கள் ஆலோசனை மற்றும் ஊக்கம் அளித்ததினிமித்தம் அவர் மீண்டும் கல்லூரிப் படிப்பைத் தொடர தேவன் உதவி செய்தார். திருமணமாகி ஐந்து ஆண்டுகளுக்குப்பின் ஜெபத்தின் மூலம் நீலம்மா கர்ப்பம் தரிக்கும்படி தேவன் கிருபை செய்தார். மஞ்சுளாவின் திருமணம் தடையின்றி நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். பொருளாதாரப் பிரச்சினையை சந்தித்து வந்த எல்லம்மா வின் மகளுக்கு கல்லூரி படிப்புக்கான தேவைகள் முற்றிலும் சந்திக்கப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகம் மற்றும் கல்லீரல் பிரச்சனையினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மஞ்சு என்ற நமது விசுவாசியை தேவன் பூரணமாய் குணப்படுத்த; ஒற்றைத் தலைவலிக்கு மருத்துவ சிகிச்சைப் பெற்றும் குண மாகாமல் கஷ்டப்படும் சாவித்ரிக்கு தேவன் அற்புத சுகமருள; தீயப்பழக்கத் திற்கும், குடிக்கும் அடிமைப்பட்டுள்ள சுரேஷுக்கு தேவன் விடுதலை அருள; வியாபாரத்தில் நஷ்டத்தை சந்தித்து வரும் புதிய தொடர்பாளரான வெங்கடேஷின் வியாபாரத்தை தேவன் ஆசீர்வதிக்க; ஆலய ஆராதனைக்கு வருவதால் உபத்திரவங்களை சந்தித்து வரும் சோபாவின் விசுவாசத்தை தேவன் பெலப்படுத்த; கர்ப்பப்பை வீக்கத்தி லிருந்து லக்ஷ்மிக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

## கானாப்பூர்:
### தாங்லால் ஸெள & நெம்ஸாவா

**துதிக்க:** அறுவை சிகிச்சை செய்யப்பட விருந்த யசோதாவுக்கு, மருத்துவர்கள் ஆச்சரியப்படும் விதமாக சுகப்பிரசவத்தின் மூலம் குழந்தை பிறக்கும் படி தேவன் கிருபை செய்தார். லக்ஷ்மியின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட்டு, திருமணம் நல்ல முறையில் நடைபெற தேவன் உதவி செய்தார். குஷாலின் பச்சிளம் குழந்தை இருதயப் பிரச்சனையோடு பிறந்தபோதிலும் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு விசுவாசிகளின் தொடர் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ருத்ரப்பாவின் மூல வியாதி புற்றுநோயாக மாறி கஷ்டப்பட்டு வருகிறார். தேவன் அவருக்கு பரிபூரண சுகமருள; தன் கணவனாலும், அவரது குடும்பத்தாராலும் உபத்திரவத்தை சந்தித்து வரும் சௌந்தர்யாவுக்கு தேவன் விடுதலை அருளவும், அவரது கணவரின் குடும்பத்தார் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; நீரிழிவு நோயிலிருந்து பசவப்பவை தேவன் குணப்படுத்த; நந்த்காட் பகுதியில் விரைவில் ஆலயம் கட்டப்பட; கிறிஸ்துவை விசுவாசிப்போர் உறசாகத்தோடு விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## 28 ஜூலை
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேக்கப் பிரதீப் குமார்
திரு. பால் ஆல்பர்ட்
திரு. ஆபிரகாம் D.
திருமதி. கோமா கோவிந்தராஜ்

# ஆந்திரப் பிரதேசம்

### கலக்கடா:

**சுபாஷ் & தும்பாடா ரசிலாபேன்**

**துதிக்க:** கொத்தப்பள்ளி தேவாலயக் கட்டுமானப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அசுத்தாவியின் பிடியிலிருந்து வெங்கட்லக்ஷ்மி ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். செர்ரியின் கை அறுவை சிகிச்சை மற்றும் பாபுவின் கண் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட தேவன் உதவி செய்தார். இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளுக்கு தேவன் தந்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொத்தப்பள்ளி ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்பட; சிறுநீரகக் கல்லிலிருந்து தன்ராஜ் & லக்ஷ்மணும், உடல் வலியிலிருந்தும் (அமாவாசை இரவு மட்டும்) அமாஜியும், பக்கவாதத்திலிருந்து லக்ஷ்மணும் பரிபூரண சுகம்பெற; ஷர்மிளா, பிரவீன், ராஜேஷ் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் கட்டளையிட; புதிதாக ஆலய ஆராதனையில் பங்குபெறும் எல்லம்மா புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் பூரண சுகம்பெறவும், இதன் மூலம் குடும்பத்தினர் அனைவரும் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

### ரோத்தம்:

**தேபதத்தா லிமா &சோனியா ராணி**

**துதிக்க:** திமாபுரம் & ஆர். மருவப் பள்ளி கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தடங்கிப்பள்ளி மற்றும் கோவராஜ்பள்ளி கிராமங்களில் முதன்முறையாக இரவுக் கூட்டத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். ராமஞ்சியும், பசுந்தராவும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுபராய்டு குடும்பத்தினரும், தோல் ஒவ்வாமையிலிருந்து மாலாமாவும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். ஆலயம் கட்ட கோவிந்தப்பா தனது நிலத்தை இலவசமாக கொடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பமுற்றுள்ள தீபிகா மிகவும் பெலவீனமாக உள்ளார். தேவன் அவருக்கு பூரண ஆரோக்கியமருள; தைராய்டு பிரச்சினையிலிருந்து ஹரிகா, உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல பெலவீனங்களினால் அவதியுறும் மேரி கிரேஸி, கால் எலும்பு முறிவிலிருந்து டேவிட் ஆகியோர் பரிபூரண சுகம்பெற; நமது விசுவாசிகளின் நிலத்தில் தேவன் நல்ல அறுவடையைக் கட்டளையிட; எலிசபெத்தம்மா, நரசிம்மப்பா மற்றும் சஞ்சீவம்மா குடும்பங்களில் சண்டைகள் நீங்கி சமாதானத்துடன் வாழ; ரோத்தம் பணித்தளத்திற்கு அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## 29 ஜூலை
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுசிலா மராக் சிவகுமார்

### சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** அநேக கிராமங்களில் பின்தொடர் பணி செய்திட தேவன் உதவி செய்தார். சபை மூப்பர்களுக்கான பயிற்சியிலும், முழு இரவு உபவாச ஜெபத்திலும் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஆன்லைன் மூலம் தினமும் ஒருமணி நேர ஜெபம் தடையின்றி நடத்திவர தேவன் கிருபை செய்து வருகிறார். ஜோகிவாரிப்பள்ளி கிராமத்தில் விசுவாசிகளுக்கு நமது இயக்கத்தின் தரிசனம் மற்றும் ஊழியங்களை குறித்து கற்றுக்கொடுக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்கு காத்திருக்கும் ஸ்வரூபா ராணி மற்றும் லக்ஷ்மிக்கும், ஹரிகா & அசோக் தம்பதியினருக்கும் தேவன் இரக்கம் பாராட்ட; எம்.பி.ஏ. முடித்துள்ள ஹேமந்த் ராஜ்க்கு தேவன் ஏற்ற வேலையைத் தந்தருள; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்கு நிலவும் தடைகள் நீங்க; ஸ்ரீகாந்த் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ராமன்னா சர்க்கரை நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### கொத்தச்செருவு: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், சபை மூப்பர் பயிற்சி, இரவு கூட்டங்கள், பின்தொடர் பணி ஊழியங்கள் யாவும் திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். பல்லவிக்கு குறைந்த அளவு இரத்தம் இருந்தபோதிலும் தேவன் சுகப்பிரசவம் கட்டளையிட்டார். ராஜுக்கு வயிற்று அறுவை சிகிச்சை நல்ல முறையில் முடிந்து சுகம்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெஸ்ஸம்மாவின் நிலப் பிரச்சினை முடிந்து அவரது நிலம் அவருக்கு திரும்ப கிடைக்க; நகோமியின் கால்வலி நீங்கவும், வாழ்வாதார தேவைகள் சந்திக்கப்படவும்; அநேக கிராமங்களில் காணப்படும் எதிர்ப்பினால் மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். இந்நிலை மாற ஜெபிப்போம்.

## ஆபத்தில் அடைக்கலம்

*ஜம்மு மாநிலம், டங்ரி கிராமத்தில் உள்ள செங்கல் சூளையில் புலம்பெயர்ந்து வந்து பணிசெய்யும் நமது விசுவாசிகள் பலர் பாதுகாப்பற்ற வீடுகளில் வசித்து வருகின்றனர். சமீபத்தில் ஜம்முவில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஏவுகனைகளின் தாக்குதல் அதிகமாக இருந்தபோது அங்கு வேலை செய்து வந்த அனைவரும் பாதுகாப்பைத் தேடி வேறு இடங்களுக்கு சென்றுவிட்டனர். ஆனால் நமது விசுவாசிகள் கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தினால் ஜெபத்தோடு தைரியமாக அங்கேயே தங்கியிருந்தனர். அவர்களின் விசுவாசத்தை கனம்பண்ணின தேவன் ஆபத்து அவர்களை அணுகாதபடி பாதுகாத்தார். இதைக்கண்ட செங்கல் சூளையின் உரிமையாளர் மிகவும் ஆச்சரியப்பட்டு நீங்கள் விசுவாசிக்கும் தேவன் வல்லவர் என்று கூறியதோடு அவர்களுக்கு உதவி செய்வதாகவும் வாக்குக்கொடுத்துள்ளார். தேவனுக்கே மகிமையும் கனமும் உண்டாவதாக!*

**30** ஜுலை

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாருபேன் கிறிஸ்டியன்
திருமதி. பாரதி மூர்த்தி
திரு. விக்டர் பால்ராஜ் V.

# தமிழ்நாடு

## தேன்கனிக்கோட்டை:

### எஸ். ஜெபராஜ் (ஓய்வு) & எஸ்தர் தங்கம்

**துதிக்க:** அந்தேவனப்பள்ளி கிராமத்தில் ஊழியம் முடித்து இரவு வீடு திரும்புகையில் யானை தாக்காதபடி நமது ஊழியரை தேவன் பாதுகாத்தார். மூன்று கிராமங்களில் பின்தொடர் பணி செய்ய தேவன் கிருபை செய்தார். மரக்கட்டா ஆலயத்தில் வேதபாட வகுப்புகள் துவங்கிட தேவன் உதவி செய்தார். இரண்டு இடங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 80 சிறுவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசியான வேலு ஜானுவுக்கு வனத்துறையில் வேலை செய்து வந்த அவரது தந்தையின் வேலை கிடைக்க; சந்தோஷ், மூர்த்தி ஆகிய நமது சபை வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; முத்தம்மாள், இராமகிருஷ்ணன், கிருஷ்ண மூர்த்தி, பெத்தம்மாள், ஆர்த்தி ஆகியோர் தைரியமாக தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; பிரகாஷுக்கு ஏற்ற வேலை வாய்ப்பை தேவன் தந்தருள; பாஸ்கர் & நதியா, மெர்வின் & அனிதா ஆகியோரின் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள ஜெபிப்போம்.

## வெட்டவலம்:

### பிரைட் ஜெயக்குமார் & பியூலா

**துதிக்க:** 18 வருடங்களுக்கு பிறகு முதன்முறையாக பெரிய ஓலைபாடி கிராமத்தில் விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தப்பட்டது. கலயே சொரத்தூர் கிராமத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் கிறிஸ்துவை அறியாத அநேக சிறுவர்கள் கலந்து கொண்டு வேத வசனங்களை கற்றுக் கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலயே சொரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த தங்கபாண்டியன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற்று, குடும்பத்துடன் சமாதானமாக வாழ தேவன் உதவி செய்ய; விசுவாசி சரண்யாவின் கணவர் தமிழரசன் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; வெளிப்புற சந்திப்பு ஊழியத்திற்கு தேவையான உபகரணங்களை தேவன் தந்தருள; மூன்று இடங்களில் செய்யப் படவுள்ள சுவிசேஷ ஊழியம் நல்ல பலனைத் தந்திட; வளர்மதி தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், தேவன் அவருக்கு குழந்தை பாக்கியம் அருளவும்; விசுவாசியின் மகள் மனோ வித்யாவுக்கு மருத்துவ படிப்பில் இடம் கிடைக்கவும், பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

## 31 ஜூலை
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் டேவிட் R.

### செங்கம்: கே.எஸ். ஜாஷ்வா

**துதிக்க:** கூடுவைபட்டி கிராமத்தில் மறைந்த நமது சுதேச ஊழியரான வின்செண்ட் சம்பத்குமாரின் ஆறுதல் ஜெபக்கூட்டம் நல்ல முறையில் நடைபெற்றது. மறைந்த நமது விசுவாசி அபிதாவின் ஆறுதல் கூட்டத்தில் அவரது உறவினர்கள் முதன் முறையாக இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். காந்திநகர், குப்பாநத்தம், கரியமங்லம், பு.எல்.தாண்டா, சாத்தனூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் பணியின் மூலம் அநேகர் ஆவிக்குரிய வாழ்வில் ஊக்குவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோமதி, மணியா, கணேஷ், வெங்கடேசன் ஆகியோருக்கு தேவன் ஏற்ற வேலை வாய்ப்பை தந்தருள; சீனு, தேவராயன், தமயந்தி, ஜெய லக்ஷ்மி ஆகியோருக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; நிவேதா, ஜெயந்தி, கோவிந்தன், மணிகண்டன் & ஜெய மூர்த்தி குடும்பம் தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; செல்வம் மற்றும் முருகன் குடும்பத்தினரின் பொருளாதார நெருக்கடியை தேவன் சந்திக்க; அரசாங்கத்தின் மூலம் அஞ்சலாவுக்கு வீட்டு மனை கிடைக்க; வெண்ணிலாவுக்கு விபத்தின் மூலம் ஏற்பட்ட காயங்களை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.


## கடவுளின் கண்ணாடி




கடவுளின் கண்ணாடி என்ற இந்தப் புத்தகம் இன்று கிறிஸ்துவுக்குள், ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை மிகத் துல்லியமாக பிரதிபலித்துக் காட்டும் ஒரு சிறந்த புத்தகமாகும். இயேசு கிறிஸ்து யோவானுக்கு தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தின விசேஷம் அத்தியாயம் 2 மற்றும் 3இல் உள்ள ஏழு சபைகளுக்கும் வழங்கிய செய்திகள் நம்மை நாம் நிதானித்துப் பார்க்க உதவும் கண்ணாடிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு சபைக்கும் வழங்கப்படும் செய்திகள் அந்தந்த காலக்கட்டங்களில் கிறிஸ்தவர்களின் உள்ளார்ந்த ஆன்மீக வாழ்க்கையை பிரதி பலித்துக்காட்டும் ஒரு கண்ணாடியாக தெரிகிறது. இங்கே வெளிப்படுத்தப் பட்டுள்ள செய்திகள் உங்கள் ஆவிக் குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதோடு, நீங்களும் உங்கள் மூலம் மற்றவர்களும் கடவுளின் இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான படிக்கல்லாகவும் இருக்கும். தனிப்பட்ட மற்றும் குழு வேத ஆராய்ச்சிக்கு மிக சிறந்த புத்தகம்.

**நன்கொடை ரூபாய் 100/- மட்டுமே**

**407**
**மிஷனரி ஆல்பம்**



# திரு. பவன் குமார் & திருமதி. பிரபாஷினி தேவி

உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூர் மாவட்டத்திலுள்ள காட்டாம்பூரில் வசிக்கும் திரு. கெண்டாலால் மற்றும் திருமதி. ஷிவ்பியாரி என்ற தம்பதியினருக்கு 07.04.1988 அன்று கடைசி மகனாகப் பிறந்தார். இவருக்கு ஐந்து சகோதரர்கள் மற்றும் மூன்று சகோதரிகள் உள்ளனர். இவர் ஜான்சியில் உள்ள நமது 'ஆபிரகாம் பால் பவன்' என்ற விடுதியில் தங்கி பள்ளிப் படிப்பை முடித்தார். விடுதியில் நடைபெறும் காலை, மாலை ஜெபங்கள் இவர் ஆவிக்குரிய வாழ்வில் வளர பெரிதும் உதவியாயிருந்தது. அங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு மற்றும் இரட்சிப்பைப் பற்றி தொடர்ந்து கற்பிக்கப்பட்டது. இதன் மூலம் இவர் படிப்படியாக கிறிஸ்துவை விசுவாசித்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் மாலை வேளையில் நடைபெற்ற கூட்டத்தில் ஊழியர் ஒருவர் 'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?' என்ற ஏசாயா 6:8 வசனத்திலிருந்து பிரசங்கித்தார். கிறிஸ்துவை அறியாமல் அழிந்து கொண்டிருக்கும் மக்களைக் குறித்த ஆத்தும பாரமும், அவர்களின் ஆவிக்குரிய தேவையையும், அதை நிறைவேற்ற வேண்டிய விசுவாசியின் பொறுப்பையும் அந்த செய்தி வலியுறுத்தியது. அன்று மாலை இவர் தேவனின் பணிக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். பி.எஸ்.சி படிப்பிற்குப்பின் சென்னை வேதாகமக் கல்லூரியில் இறையியல் படிப்பை முடித்தார். 2012ஆம் ஆண்டு முழுநேர ஊழியராக FMPBயில் இணைந்து ஜான்சியிலுள்ள மிஷனெரிப் பயிற்சி மையத்தில் ஒரு வருட ஊழியப் பயிற்சிப் பெற்றார். அதற்குப் பின் பீஹார் மாநிலத்திலுள்ள அரரியா பணித்தளத்தில் மிகுந்த அர்ப்பணத்துடன் ஊழியம் செய்து வந்தார்.

உத்தரப்பிரதேசம், உன்னாவ் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சிவபிரதாப் & திருமதி. சரளா தேவி தம்பதியினருக்கு 08.07.1990 அன்று மூத்த மகளாக சகோதரி பிரபாஷினி பிறந்தார். இவருக்கு இரண்டு இளைய சகோதரர்கள் உள்ளனர். இவர்கள் அசெம்பிளிஸ் ஆஃப் காட் (AG) சபையைச் சேர்ந்தவர்கள். 10ஆம் வகுப்பு முடித்த பிறகு, சகோதரி பிரபாஷினி கடுமையான உடல்நலப் பிரச்சனையைச் சந்தித்தார். தொடர்ந்து சிகிச்சைப் பெற்றும் சுகம் கிடைக்காத நிலையில் வலியுடன் வாழ்வதைவிட மரணம் சிறந்தது என நினைத்தார். இந்த துன்பத்தின் மத்தியில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கிறிஸ்து தனக்கு பூரண சுகமருளினால், தேவனுடைய பணியை செய்வதாக தன்னை அர்ப்பணித்து ஜெபித்தார். கர்த்தரின் கிருபையால் அவர் குணமடைந்தது மட்டுமல்லாமல் ஊழியத்திற்கான தெளிவான அழைப்பையும் பெற்றார். இளங்கலை பட்டப்படிப்புக்குப்பின் 15.05.2014 அன்று திரு. பவன் குமாரை திருமணம் செய்தார். திருமணத்திற்குப்பின் நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராக இணைந்து, ஒருவருட மிஷனெரி பயிற்சிப் பெற்றார். அதன்பின் இருவரும் இணைந்து இமாச்சலப் பிரதேசத்தில் ரோஹ்ரு, ராம்பூர், ரிகோங்பியா, ஜியோரி ஆகிய பணித்தளங்களில் ஊழியம் செய்தனர். தற்போது கர்சோக் பணித்தளத்தில் தேவனுடைய பணியைச் செய்து வருகின்றனர்.

தேவன் இந்த தம்பதியினருக்கு ஏஞ்சல் குளோரி (11.02.2016) என்ற மகளை தந்து ஆசீர்வதித்துள்ளார். ஏஞ்சல் தற்போது டேராடூனிலுள்ள கிரேஸ் அகாடமி என்ற பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வருகிறார். இக்குடும்பத்தை நமது ஜெபத்தில் தாங்குவோம்.

Regd. Newspaper for India No.17759/69

# Tender Notifications - Calendar 2026

**FRIENDS MISSIONARY PRAYER BAND** invites sealed tender for printing of two lakhs calendars approximately (Subject to revision) in various languages for the year 2026.

## Calendar Specifications

| | | |
|---|---|---|
| A. | Size of calendar | 15” X 20” |
| B. | Paper Quality | 130 gsm real foreign art paper |
| C. | Colour | Four Colours with white background |
| D. | No of pages | 7 sheets Front and back |
| E. | Tin Mounting | 5 mm |

## Conditions:

1. The printer should have minimum 10 years’ experience in calendar colour printing of not less than 2 lakhs per year and possesing CPC MACHINE.
2. Time Frame: Printer should ensure the completion of work within 30 days from the date of awarding of the work order.
3. Packing should be made in 10 numbers of calendar in each bundle.
4. Earnest Money Deposit: Rs.1,00,000/-

## Tender Programme

Supply of Tender document upto 29.07.2025 upto 5pm
Date of submission upto 04.08.2025, upto 5pm
Date of opening on 05.08.2025, 11am

Tender documents (free of cost) can be obtained in person or by post from the Secretary Communication, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 53. After submitting documents proof for having 10 years of experience in calendar (colour) printing.

# Quotation for Diary

We invite quotation for supplying 3000 diaries (Revision in the number of copies, if any) for the year 2026.

| | |
|---|---|
| Size of the diary | 9 x 7 inches |
| Pages of the diary | 440 pages |

Please send your samples along with quotations in sealed envelope on or before 04.08.2025 to the Calendar Committee, FMPB, 29, High School Road, Ambattur, Chennai - 600053. Phone: 044-26570404

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***